GOVT. SIDDHA MEDICAL COLLEGE - PALAI

50th year

1964 - 2014

சித்தம்-50

பொன்விழா மலர்

2015

SIDDHAM - 50

அரசு சித்த மருத்துவக் கல்லூரி

பாளையங்கோட்டை

GSMC students' UNION 2014

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Jaya Indian Medicine Pharmaceutical (P) Ltd

Quality Medicine Our Strength

ANEMINIL CAPSULE

Activated with Coral

Indications:
- Anemia
- Osteoporosis
- Joint Pain
- TB
- HIV infection
- Neuromuscular Disorders.

KARPAVANI ELAGAM

A very rich formula having 48 herbal ingredients, enriched with Kungumapoo

Indications:
- Improves Lactation
- Helps involution of uterus after delivery
- Prevents undue water retention
- Accentuates delayed Menarche
- Menstrual Pain

** Contraindicated for pregnant women.*

ADITHYA SKINCARE OIL

A unique herbo-mineral preparation of Wrightia tinctoria for External Use Only.

Indications
- Psoriasis
- Eczema
- Dandruff
- Winter Dryness
- Hyperkeratosis
- Inflammatory Skin disorders.

THANGA PARPAM

Special preparation with Gold

Indications:
- Low sperm count
- Neuromuscular Disorders
- Tremors(Shake)
- Respiratory disorders
- Chronic ulcers
- Chronic fever.
- Supportive Therapy in Cancer
- Arthritis

OUR QUALITY METALLIC AND HERBAL PREPARATIONS

- Poornachantirotayam
- Amukkira Churanam
- Parangipattai Churanam
- Thalisathi Churanam
- Thriphala Churanam
- Annabedi Chenduram
- Ayakantha Chenduram
- Chanda Marutha Chenduram
- Jalamanchari Chenduram
- Thanga Parpam
- Muthuchippi Parpam
- Pavazha Parpam
- Silasathu Parpam
- Sangu Parpam
- Velvanga Parpam
- Kungiliya Parpam
- Velli Parpam
- Nandukkal Parpam
- Idivallathy Mezhugu
- Sivanaramirtham
- Rasaganthi Mezhugu
- Aneminil Capsules
- Idivallathy Capsules
- Parangipattai Churanam Capsules
- RGM Capsules
- Mahavallathy Elagam
- Karpavani Elagam
- Thetran Kottai Elagam
- Kanthaga Rasayanam
- Megavirana Kalimbu
- Amirtha Vennai
- Chitramutti Thylam
- Adithya Skin Care Oil

No.89, Vel Nagar 2nd Street, Maduravoyal, Chennai – 600 095.
Ph: 65165825 / 9282236112
email:jayaprakash.siddha@yahoo.in

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நிலம் நீர்தீவளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

- தொல்காப்பியம்

சித்தம் 50

SIDDHAM - 50

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்

உலகின் முதன் மொழி தமிழ்
உலகின் முதல் இனம் தமிழினம்
உலகின் முதல் மருத்துவம் தமிழ் மருத்துவம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரசு சித்த மருத்துவக் கல்லூரி

பாளையங்கோட்டை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழர் தொன்மத்தந்தை

அகத்தியர்

நிறைவாழ்வுக்கு சித்த மருத்துவம்

தமிழர் மெய்மத் தந்தை

திருமூலர்

ஒன்றே குலமும் ஒருவரான தேவனும்
நன்றே நினைமின் நம் இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே

திருமந்திரம் - 2104

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழ் மருத்துவமே தரணியின் தலைமை மருத்துவம்

யோகநெறிமுறைகள் மற்றும் மூச்சு பயிற்சி முறைகளை உலகிற்கு தந்த தமிழர் மெய்மத் தந்தை திருமூலரை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 நாளை உலக திருமூலர் திருநாளாக கொண்டாடுவோம்

ஜூன் - 21, உலகத்திருமூலர் திருநாள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழ் மருத்துவப் பேரகராதி கண்ட த.வி. சாம்பசிவம் பிள்ளை

தமிழ்ச் சமூகம் பல்வேறு விதமான மனிதர்களைக் கண்டிருக்கிறது.அவர்களில் செயர்கரிய செய்த மனிதர்களில்ஒருவர்தான் த.வி.சாம்பசிவம் பிள்ளை அவர்கள்.இவருடைய பெயரின் முதலெத்து தஞ்சாவூரைக் குறிக்கும். வி என்பது இவருடைய தந்தை வில்வைபா மன்னாரைக் குறிக்கும். 1880 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பத்தொன்பதாம் நாளில் தோன்றிய இவர்.தனது 73 ஆம் வயதில்,1953 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பனிரெண்டாம் நாள் மறைந்தார்.

இவர் சிறந்த மருத்துவர் அல்லர்.இவருடைய பரம்பரை மருத்துவ பரம்பரையும் அன்று. சென்னை காவல் துறை தலைமை அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணியாற்றியவர்.இவருடைய அகராதி பணி என்பது, ஏறக்குறைய 30 ஆண்டு காலப் பணியாகும்.இவர் எதற்காக இப்பணியை செய்தார், எவருடைய தூண்டுதலினால் இதைச் செய்தார் என்பதெல்லாம் ஒன்றும் அறியப்படவில்லை.ஆனால் நிச்சயமாக ஒன்றை மட்டும் கூறுவதென்றால்,இவருடைய இந்த மாவெரும் அகராதிப் பணி மூலம்மட்டுமே தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவம்.அதன் தனித்துவ அடையாளத்தைப் பெற்று விளங்குகிறது.

இவருடைய இப்பணி முழுமையும் தமிழின் ஓர்மையையும்,தமிழ் மாண்பையும்,தமிழின் செம்மொழித் தன்மையையும் வெளிக்கொணர்வதாக இருப்பதனால், தமிழியச் சிந்தனையே முகிழ்க்காத அவருடைய காலக்கட்டத்தில்,தமிழ் சமூகத்தில் இருந்தும் பெரியதொரு ஆதரவும் அவருக்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

இருமுறை திருமணம் ஆகியும் குழந்தைகள் இறந்தும்,மனைவிகளும் இறந்து விட்ட சூழலில்,தனிமரமாய் வாழ்ந்து இம்மாவெரும் பணியை முடித்துள்ள இவரது மனத்திட்பமும்,செயல்திட்பமும்,போற்றுதற்குரியது. அதைவிட மேலானது,இவருடைய குடும்பச் சொத்துக்களை விற்றும்,ஓய்வூதியப் பணத்தை முன்னரே பெற்றும்,ஆக மொத்தத்தில் அனைத்தையுமே இழந்து,இவர் தன்னுடைய முதல் பதிப்பை பதிப்பித்தது,இவருடைய ஈகை (தியாக) உள்ளத்தைப் பறை சாற்றுகிறது.இவருடைய பேரகராதி 5 தொகுதிகளானது ஏறக்குறைய 6,500 பக்கங்களில் 80,000 தமிழ் அறிவியல் கலைச் சொற்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இணையதள வசதிகள் எதுவும் இல்லாத அவரது காலத்தில்,எல்லாக் கருத்துக்களையும்,எங்கிருந்து பெற்றார் .யாரிடம் விவாதித்து,முடிவுக்கு வந்தார்,எந்தெந்த நூல்களைப் படித்தார்.எந்தெந்த நூல்களைப் படித்தார். எந்தெந்த நூலகங்களைப் பயன்படுத்தினார் என்பதெல்லாம் பெரும் ஆய்வுக்குரியது.மேலும் போக்குவரத்து வசதிகளே இல்லாத அந்தக் காலக்கட்டங்களில்,களப்பணிகளை எவ்வாறு மேற்கொண்டார் என்பதும் சிந்தனைக்குரியது.மொத்தத்தில் மிகப்பெரிய அறிவுப் பெட்டகமாகத் திகழும் இவரது அகராதி, தமிழுக்கும் தமிழ் மருத்துவத்திற்கும்,தமிழ் அறிவியல் கலைகளுக்கும் மிகப்பெரிய பாதுகாப்பு அரண் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழகத்தில்
முதன்முதலாக கீழ்பாக்கத்தில்
1924 ல் தொடங்கப்பட்ட
அரசு இந்திய மருத்துவ முறைப் பள்ளி





இம்மருத்துவமுறைப் பள்ளியின்
முதல் முதல்வர் **டாக்டர்.சீனிவாசமூர்த்தி** யின்
திருஉருவச் சிலை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பொருளடக்கம்

- வாழ்த்துரைகள்:
- தமிழ் மருத்துவ வரலாறு
- தமிழ் நாட்டில் சித்த மருத்துவ கல்லூரி
- சித்த மருத்துவத்திற்கு அரும் பணியாற்றிய பேரறிஞர்கள்
- மருத்துவ மாமேதை சி.வி.தெய்வநாயகம்
- பொன்விழா கடந்து வந்த பாதை
- பொன்விழா நிகழ்வுகள்
- நமது பண்பாட்டில் மருத்துவம்
- முன்னாள் மாணவர் விழா
- விழா ஏற்பாடுகள்
- பொன்விழா கண்காட்சி நிகழ்வுகள்
- உலக மயமாக்கல்,காப்புரிமை
- இலங்கையில் சித்த மருத்துவம்,வர்மம்
- பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி
- சித்த மருத்துவ நூல்கள்
- சித்த மருத்துவ துறைகள்,
- சித்த மருத்துவத்திற்கான வளர்ச்சித் திட்டங்கள்

இணைப்பு : விண்ணப்ப படிவம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

सत्यमेव जयते

PRESIDENT'S SECRETARIAT
Rashtrapati Bhavan, New Delhi - 110004

MESSAGE

The President of India, Shri Pranab Mukherjee, is happy to know that the Government Siddha Medical College, Palayamkottai, Tirunelveli is bringing out a Golden Jubilee Magazine to commemorate its Golden Jubilee Celebrations during January 23-25, 2015.

The President extends his warm greetings and felicittions to the Principal, staff and the students of the College and sends his best wishes for their future endeavours.

Press Secretary to the President

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

श्रीपाद नाईक
SHRIPAD NAIK

सत्यमेव जयते

MINISTER OF STATE (INDEPENDENT CHARGE) FOR
AYURVEDA, YOGA & NATUROPATHY
UNANI, SIDDHA AND HOMOEOPATHY (AYUSH)
AND MINISTER OF STATE FOR HEALTH & FAMILY WELFARF
GOVERNMENT OF INDIA

DO.No.754/15
January 2015

Message

I am happy to learn that Govt. Siddha Medical College is celebrating Golden Jubilee function on 23rd January, 2015 and publishing its Golden Jubilee Magazine on the occasion.

The Siddha system is one of the ancient system of medicine in India and it is popularly practicing in South India for thousands of years. There is a global interest in holistic system of healthcare particulary with respect to prevention and management of chronic lifestyle related non-communicable diseases such as Cardio Vascular Disease, Diabetes Mellitus, Blood Pressure, Stroke etc. From this Institution who have completed the Medical Education are doing their best services to public. Also this institution having Under-Graduation and Post-Graduation with 6 branches of Medicines. This noble Siddha System of medicine should be utilised in North India as well and do their best service to the public.

The Siddha speciality treatment of Varmam and Thokkanam is giving cure for arthritis, hemiplegia and most of the vada diseases. The Alumni of this prestigious institution now working in our National institute of Siddha, tambaram and Central Government Health Services.

I take this opportunity to extend my warm greetings and best wishes to the college on this occasion and hope that the publication of the magazine will help to promote the ideas and the mission of the college.

(SHRIPAD NAIK)

Office 101, AYUSH Bhavan, 'B' Block, GPO Complex, INA,
New Delhi 110023
Tel. : 011-24651955, 011-24651935 Fax 011-24651936
E-mail : minister_ayush@nic.in
Office : Nirman Bhavan, 250, 'A Wing, New Delhi 110001
Tel. : 011-23061016, 23061551 Fax : 011-23061157
E-mail : shripad.naik@sansad.nic.in

Res. (Delhi) . 1, Lodhi Estate, New Delhi-110003
Tel.: 011-24635396, 011-24641:x9
Res (Goa) "Vijayshree" House No 111
St. Pedro, Oldgoa, Goa-403402
Tel. 0832-2444510, 0832-2444088

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

CENTRAL COUNCIL FOR RESEARCH IN SIDDHA
(An Autonomous Organisation under the Ministry of AYUSH, Govt. of India)
SCRI Building, Anna Govt. Hospital Campus, Arumbakkam, Chennai – 600106
Phone: 044-2621 1621, 2621 2421 Fax: 044-2621 1621, Email: ccrschennai@gmail.com

Prof. Dr. R.S. Ramaswamy
Director General

MESSAGE

It really gives me immense pleasure to know that Government Siddha Medical College at Palayamkottai is celebrating its Golden Jubilee. This college is really the pride of the Siddha fraternity. It is a mother institution that produced/produces a number of Siddha graduates and post graduates who became/become Siddha Medical Officers / Siddha Physicians working in various Siddha (Central, State government) hospitals, quasi-government organisations, consultants/managing directors in various Siddha Pharmaceutical companies, members (lecturers, readers, professors) of teaching faculty in various Siddha teaching institutions including National Institute of Siddha, Research Officers/Research Scholars working in various research organisations (central, state government organisations, universities, etc.) in India and abroad and administrative heads (Principals of Siddha colleges, Joint Directors, Directors, Director Generals) in Central and state government and other private organisations. Nurtured by traditional and institutionally trained Siddha physicians, Tamil scholars, experts of modern medicine and other basic medical and supportive science subjects such as Biochemistry Pharmacology, Botany, Pathology, Clinical pathology, Microbiology, Radiology and Forensic medicine, this college has contributed significantly to the growth and the development of Siddha system of medicine scientifically in the past 50 years.

As a former under-graduate and post-graduate student and as a former teacher of this college, I really feel very happy on this occasion and I heartily congratulate the principal, members of teaching and non-teaching, paramedical and other administrative staff and especially the student community on their efforts in organising this golden jubilee celebration successfully

Prof.Dr.R.S.Ramaswamy
Director General

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உயர்திரு மு.கருணாகரன் I.A.S,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.

வாழ்த்து செய்தி

வணக்கம்,

நமது திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்ற பொன்விழா கொண்டாட்டங்கள் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சித்த மருத்துவம் தமிழ் கூறும் நல்லுலகின் ஓர் அருட்கொடை ஆகும். நம் முன்னோர்கள் தமிழ்ச் சான்றோர்கள் வழிவந்த தமிழ் மருத்துவம் சித்த மருத்துவம் ஆகும். சித்த மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் அர்பணிப்பு உணர்வுடன் பணிபுரிந்ததால் சித்த மருத்துவ சேவையாய் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர வைரஸ் காய்ச்சலினால் ஏற்படும் உயிரிழப்பு திருநெல்வேலி மாவட்டத்தில் இல்லை என கூறும் அளவிற்கு நிலவேம்பு குடிநீர் என்னும் அற்புத மருந்து தமிழ்நாடு அரசு சுகாதாரத்துறை அறிவுறுத் தலின் படி இம்மாவட்ட மக்களுக்கு அரசு சித்த மருத்துவக் கல்லூரி மூலம் வழங்கி மிகுந்த பலன் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் சிறப்பு முகாம்கள், கண்காட்சிகள் நடத்தப் பெற்றது. சித்த மருத்துவக் கல்லூரியின் சித்த மருத்துவ சேவை திருநெல்வேலி மாவட்டத்திற்கு கிடைத்த அரிய பொக்கிஷம் என்றால் மிகையாகாது. பொன்விழா சிறக்க எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

VIJILA SATHYANANTH

Member Of Parliment
(RAJYA SABHA)

सत्यमेव जयते

B-303, M.s.Flats, BKS Marg,
New Delhi - 110 001
Plot No: 151, Srinivasa nagar B Colony
V.M. Chatram, Tirunelveli District - 627 001
Tamilnadu, India
Mobile :094890 - 57812

பொன்விழா ஆண்டு மலர்
வாழ்த்து செய்தி

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்று பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி பொன்விழா மக்கள் விழாவாக நடைபெற்றது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

சித்த மருத்துவமாணவர்கள் மற்றும் மருத்துவர்களின் களப்பணியே டெங்கு காய்ச்சல் நெல்லை மாவட்டத்தில் பரவிய போது மக்களை காத்தது சித்த மருத்துவம். அதற்கு மிக்க உறுதுணையாக இருந்தது சித்த மருத்துவ மாணவர்கள் என்பது மிகவும் பெருமைக்குரியது.இவ்விழா மலர் சிறக்க வாழத்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

சித்த மருத்துவர்களின் கனவான சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நெல்லை மாவட்டத்தில் அமைய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

GOVT. SIDDHA MEDICAL COLLEGE - PALAI
50th year
1964 - 2014

வாழ்த்துக்களுடன்,
விஜிலா சத்தியானந்த்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Smt.VASANTHI.M
Member Of Parliment
(Lok Sabha)
Tenkasi Constituency - Tmailnadu

सत्यमेव जयते

1016C, Kamaraj nagar, Palayamkottai
Tirunelveli - 627 002, Tamilnadu
Mobile: 09442630202

வாழ்த்துரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்ற பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியின் பொன்விழா (50 ஆண்டுகள்) நிகழ்ச்சி சீரும் சிறப்புடன்நடைபெற்றது மிக மகிழ்ச்சிக்குரியது. இவ்விழாவில் நானும் பங்கேற்ற பெருமை மிகுந்ததாகும். சித்த மருத்துவத்தின் பழமையையும் அதன் சிறப்பையும் நன்கு அறிந்து கொண்டேன். மேலும் சித்த மருத்துவக் கல்லூரியின் பட்டப்படிப்பு & பட்டமேற்படிப்பு மற்றும் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவர்களின் உழைப்பும் பெரும் சிறப்புக்குரியதாகும்.

பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி சித்த மருத்துவ பல்கலைகழகமாகவும், மேலும் சிறப்படையவும், வளர்ச்சிபெறவும் இன்னும் பல நூறு ஆண்டுகளைக் காணவும் என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

GOVT. SIDDHA MEDICAL COLLEGE - PALAI
50th year
1964 - 2014

வாழ்த்துக்களுடன்,

MEMBER OF PARLIAMENT * TENKASI *

Vasanthi Murugesan
Tenkasi constituency
23/3/2015

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இ.புவனேஸ்வரி
மேயர்
திருநெல்வேலி மாநகராட்சி
திருநெல்வேலி-627001

அலுவலகம்
தொலைபேசி : 0462 2329311
வீடு : 0462 2561787
கைபேசி : 94436-36800, 96265-15253
மின்னஞ்சல் : mayortirunelveli@gmail.com

வாழ்த்துரை

பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக்கல்லூரி பொன்விழா குழுவினர் "பொன்விழா மலர்"வெளியிட இருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

"உணவே மருந்து - மருந்தே உணவு" என்பதனை அடிப்படையாகக் கொண்டு இயற்கை மூலிகைகளின் மூலமாக நோய்களை தீர்ப்பதுமன்றி,நோய் வருவதை தடுப்பதற்க்கும் உள்ள நெறிமுறைகளை கொண்டது சித்த மருத்துவமாகும்.இம்மலரில் வெளிவர இருக்கின்ற கட்ரைகள் அனைத்தும் அறிவியல் அடிப்படையில் ஆராயப்பட்டு, அதன் உண்மைகளை எடுத்துக்காட்டும் வகையில் அமையும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சிதலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி இந்த அரசு சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சி திட்டங்களுக்கு வரலாறு காணாத அளவிற்கு நிதி வழங்கும் நிலையில், இந்த சித்த மருத்துவக் கல்லூரி ஒரு சித்த மருத்துவ பல்கலைக்கழகமாக மாறுவதற்கும்,இந்த மலர் சிறந்த முறையில் வெளிவரவும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

அம்மாவின் உண்மை
விசுவாசி
இ. புவனேஸ்வரி

மேயர் இல்லம்,திருவனந்தபுரம் ரோடு.
பாளையங்கோட்டை- 627 002

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மரு.ச.சௌந்தரராஜன் MD(S) BL

முதல்வர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை

வாழ்த்துரை

நம் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி துவங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவதையொட்டி பொன்விழா கொண்டினார்கள் நம் மாணவர்கள் சித்த மருத்துவத்தின் பழமையும் தொன்மையையும் பொதுமக்கள் அறியும் விதமாக கண்காட்சி அரங்குகள் அமைத்தும்,மூலிகை கண்காட்சி மற்றும் இயற்கை உணவகம்,என சித்தமருத்துவத்தின் சிறப்பை உணர்த்தும் விதமாக விழாவை நிகழ்த்தி காட்டியுள்ளனர் நம் பட்டபடிப்பு பட்டமேற்படிப்பு மாணவர்கள்.

இதில் மாணவர்கள் உழைப்பும்,அறிவு நுணுக்கமும் அளப்பறியது.இவ்விழாவின் மலர் சிறப்புடன் அமையவும் இவ்விழாவை சிறப்பாக நடத்திக்காட்டிய மாணவ செல்வங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Dr.S.சங்கரலிங்கம் B.S.M.S,
உறைவிட மருத்துவ அலுவலர்
அரசு சித்த மருத்துவகல்லூரி & மருத்துவமனை
பாளையங்கோட்டை

வாழ்த்துரை

நம் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக்கல்லூரி துவங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதனை சிறப்பிக்கும் வகையில் மாணவர்கள் நடத்திய பொன்விழாவானது பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து அரங்குகளும் சிறப்புடன் இருந்தது. சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவிற்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சித்த மருத்துவம் தரணியெங்கும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே என் அவா, மேலும் இவ்விழா மலர் சிறப்புடன் அமைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

A.JAIN ALAUDEEN
Executive Director
SSFRDT
Chennai — 600 101.

Message

Siddha system of medicine is the first to emphasis health as the perfect state of physical, mental, social, moral and spiritual component of human beings, originated B.0 10000 to B.0 4000. This system of medicine (Traditional system of medicine) has been prevalent in the ancient Tamil land, is the foremost of all other medical system in the world and this system of medicine is contemporaneous with those of submerged Lemurea continent in the Indian Ocean.

The exponents of Siddha system of medicine are super human beings with high culture and intellectual abilities. They are the real human body scientist who explores and explained the reality of nature and its relationship with man. By practicing Siddha system they establishes the link of the human body with nature integrated with spiritual bond.

Government Siddha Medical College. Palayamkottai, acclaims prestige of creating such exponents of Siddha system of medicine which not only do services to human beings but also to the nature and its system of creation.

Siddha medical college, Palayamkottai, has a chequed history over the last five decades and it is great day for the college to celebrate its Golden jubilee. From its inception during 1924 the path it has travelled is memorable in creating Siddha doctors and the way in which they organized the golden jubilee function is highly commendable. The display of the philosophy of Siddha system, history and Siddha system of food are excellent and informative. No dought the peoples who visited the "Siddham 50" spiritualized with Siddha.

Such impressive work of great social importance has been possible only by the dedicated effort of the office bearers of the college who have given their time and talent for the cause of public health and spirit and also for conservation of nature.

A.JAIN ALAUDEEN
Executive Director
SSFRDT

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Reg.No.:367/2008

TamilNadu Siddha Medical Officers' Association

6 Ambedkar Street, DhasarathaPuram, Gandhinagar West,
Saligramam, Chennai – 93

Dr.M.Pitchiahkumar
President
8489909811

Dr.P.Sankararaj
Secretary
9965897075

Dr.A.Subramonian
Treasurer
8489909832

Dr. V.Santhi
Vice President

Dr.B.Thamizhkkani
Dr.A.Kala
Joint Secretary

Dr.G.Natarajan
Dr.G.Pari
Joint Treasurer

Executive Members

Dr.D.Natarajan
Dr.I.Karunakaran
Dr.J.Jacquline Chitra
Dr.D.Arjunan
Dr.M.MuthuKumaran
Dr.S.Justus Antony
Dr.S.SenthilKumar
Dr.DM.Selvakumar
Dr.R.Kannan
Dr.M.Ramanan
Dr.K.Muthukumar
Dr.R.Karthikeyan
Dr.Vetrivendan
Dr.A.Varatharajan
Dr.T.Manivannan
Dr.S.Sundaram

அன்புடையீர்,

சித்தர் தம் அருளாசியால் தரணியெங்கும் தன் விழுதுகளை பரப்பி, தலைத்தாங்கி நிற்கும் ஆலம் விருட்சமாம் நமதுபாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பொன்விழாவினை நிறைவு செய்து இருக்கும் இப்பேரானந்த தருணத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பேருவுவகை கொள்கிறோம்.

சித்தர் பொற்பாதம் தொட்டு வணங்கி சித்த மருத்துவ மாமணிகளை நன்றியுணர்வோடு நினைவு கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சித்தர் ஞானவெளியில் மாபெரும் மருத்துவ புரட்சிக்கு வித்திட்ட நிலவேம்பு குடிநீர் மட்டுமல்லாது.

மனது செம்மையானால்!....

என்று திருமூலர் பெருமான் கூறியதுபோல,இக்காலத்திற்கு தேவையான வாழ்க்கை நெறிமுறைகளான இமயம்,நியமம்,பிராணயாமம், ஆசனம்,தியானம் போன்றவையும் தற்போது மருத்துவத்துறைக்கு மிகப்பெரும் சவாலாக விளங்கும் தொற்றாநோய் கூட்டங்களுக்கு தீர்வாக அமைகிறது.

மக்கள் நலனுக்காக இவற்றை முன்னெடுத்து செல்வதில் தமிழ்நாடு சித்த மருத்துவ அலுவலர்கள் சங்கம் எப்பொழுதுமே முன் நிற்கும்,இத்தகைய செயல்பாடுகளின் முத்தாய்ப்பாக பொன்விழா நிகழ்வாகிய சித்தம் 50 விழாவின் போது இப்பணிகளை மக்கள் மேடைக்கு சிறப்பாக கொண்டு சேர்த்த மாணவ கண்மணிகளோடு கரம் கோர்த்து செயல்பட்டது.

"சித்தம் 50" நிகழ்வினை சீரும்,சிறப்புமாய் நிகழ்த்திக் காட்டிய மாணவ மாணவியர்களுக்கு TANSMOA சார்பாக நன்றி தெரிவிப்பதோடு,"சித்தம் 50" விழாமலரினை வெளிவர விடாமுயற்சி மேற்கொண்டு உழைத்த விழாக் குழுவினரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

மரு.ப.சங்கரராஜ் எம்.டி (சித்தா)
செயலாளர் (TANSMOA)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழ் மருத்துவ வரலாறு

மரு.ப.கி.இரமேசு MD (S)
பொன்விழா ஆண்டு மாணவர் பேரவைத் தலைவர்
அரசு சித்தமருத்துவக் கல்லூரி.பாளையங்கோட்டை

தமிழ் தவிர உலகில் எந்த ஒரு மொழிக்கும் சொந்தமாக ஒரு மருத்துவ முறை கிடையாது.

தமிழுக்கு மட்டுமே சொந்தமான சித்த மருத்துவத்தின் வரலாற்றைத் தமிழின் வரலாற்றோடு சேர்த்து எண்ண வேண்டும்.தமிழ்,தமிழன்,தமிழ்நாடு என்றாலே முகஞ்சுளிக்கும் ஒரு கூட்டத்தார்,சித்த மருத்துவம் என்றெல்லாம் தனியாக ஒரு மருத்துவ முறை கிடையாது.அது ஆயுர்வேத மருத்துவத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு என்று தவறான கருத்தை பரப்பி இன்றைக்கும் சித்த மருத்துவத்திற்கும் ஆயுர்வேத மருத்துவத்திற்கும் என்ன வேறுபாடு என்ற வினாவிற்குத் தெளிவாக நெஞ்சுறுதியுடன் எந்த ஒரு பதிலையும் தர இயலாமலே இருக்கிறார்கள்.

தமிழே இந்திய மொழிகள்,ஏன் உலக மொழிகள் அனைத்திற்கும் தாயாக இருப்பது போல தமிழ் சித்த மருத்துவமே உலக மருத்துவம் அனைத்திற்கும் தாய் என நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.இன்றைக்குக் கிடைக்கின்ற சித்த மருத்துவ இலக்கியங்களின் மொழிநடையைக் கொண்டு சித்த மருத்துவத்தின் வரலாற்றைத் தீர்மானிக்கக் கூடாது.ஏனெனில் இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள சித்த மருத்துவ இலக்கியங்கள் எழுதப்பட்ட காலம் பிற்பட்டதாக இருக்கலாம்.ஆனால் அவற்றிலுள்ள கருத்துக்கள் மிகவும் பழமையானவைதான். எடுத்துக்காட்டாக நாம் மருத்துவத்திலே அதிகம் பயன்படுத்தும் திரிகடுகு,ஏலாதி ஆகிய மருந்துகளில் செய்முறைகள் அடங்கிய மருத்துவ நூற்கள் எழுதப்பட்ட காலம் வேண்டுமானால் பிற்பட்டதாக இருக்கலாம்.ஆனால் திரிகடுகமும்,ஏலாதியும் பதினெண்கீழ்க்கணக்கு நூற்களில் பதிவான செய்திகள் ஆகும்.அவற்றின் காலம் கண்டிப்பாக கி.பி.இரண்டாம் நூற்றாண்டை ஒட்டிதான் என்பதில் ஐயமில்லை.

சித்த மருத்துவத்தில் நாம் அதிகமாகப் பயன்படுத்தும் இலிங்கம் முதலான பாடாண சரக்குகள் அரபியர் தொடர்புக்குப் பின்னரே.அதாவது 10 ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே.தமிழகத்தில் பயன்பாட்டுக்கு வந்தது என்ற தவறான ஒரு கருத்து வைக்கப்பட்டுள்ளது.ஆனால் இலிங்கம் பற்றிய குறிப்பு,"களவழி நாற்பது" எனும் பதினெண்கீழ்க்கணக்கு நூலில் "இங்குலிக மலை",எனும்பெயரில் பதிவாகி உள்ளது.ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே.தமிழகத்தில் விளைந்த மிளகு முதலான நறுமணப் பொருட்கள்,அரபிக்கடல் கடந்து அரேபியா வழியாக ரோமபுரி சென்ற வரலாற்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.ஒரு காலக் கட்டத்தில் உரோமபுரியின் கருவூலமே

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

காலியாகிவிட்டதாகவும்,அதனால் உரோமானிய மன்னர்கள் தமிழகப் பொருட்களுக்குத் தடை விதித்த வரலாற்றையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.எனவே தமிழகத்துக்கும்,அரேபியாவுக்கும்,அதைக் கடந்து உரோமபுரிக்கும் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே கடல்வழி வணிகத் தொடர்பு இருந்து வந்துள்ளது என்பது உறுதியாகிறது.எனவே அக்காலந்தொட்டே பாடாண சரக்குகள் தமிழகத்தில் மருத்துவப் பழக்கத்தில் இருந்து வந்துள்ளது என்பது உறுதி ஆகிறது.

தமிழ் அறிவுப்பரப்பின் ஒரு பகுதியான சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கொள்கை ஐம்பூதக்கொள்கை ஆகும்.இந்திய மொழி இலக்கியங்களில் ஐம்பூதக்கொள்கை முதன் முதலாகப் பேசப்படும் நூல் தொல்காப்பியமே ஆகும்.

"நிலம் நீர்தீ வளி விசும்போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்".

மேற்குறிப்பிட்ட தொல்காப்பிய வரிகளை அடியொற்றியே தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவத்தின் அனைத்துக் கூறுகளும் உள்ளன.தொல்காப்பியத்தின் காலம் 2600 ஆண்டுகள் என அறுதியிட்டு முடிவெடுக்கப்படுகிறது.தொல்காப்பியருக்குப் பின்வந்த அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட திருக்குறள் மிகவும் அரிதான ஒரு வரலாற்றுச் செய்தியைப் பின்வருமாறு பதிவு செய்கிறது.

மிகினும் குறையினும் நோய் செய்யும் - நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று.

"மருத்துவம்",அதிகாரத்தில் உள்ள இக்குறளை மேலோட்டமாகப் படித்துப் பார்த்தால் " புதிதாக ஒன்றுமில்லையே" என்றுதான் எண்ண வேண்டி இருக்கும்.சற்றே நுணுகிப் பார்த்தால் நமது சித்த மருத்துவ வரலாற்றுக்கு இருபெரும் செய்திகள் இதில் பொதிந்து இருப்பது புரியவரும்.

ஒன்று,நூலோர் என்ற சொல்.இதன்மூலம் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே மருத்துவ நூல்கள் இருந்துள்ளமை உறுதியாகிறது.மற்றொன்று "வளி" எனும் சொல்.இது காற்றைக் குறிக்கும் சொல் ஆகும்.இன்னும் பாமர மக்கள் கூட வாதம் என்ற சொல்லையே கையாண்டு வருகின்றனர்.அதற்கு நேரான தமிழ்ச் சொல் "வளி" ஆகும்.எனவே வாதம்,பித்தம்,கபம் என்று பிறமொழிச் சொற்களைக் கையாளுவதைத் தவிர்த்து விட்டு மூலத் தமிழ்ச்சொற்களான வளி,அழல்,ஐயம் என்ற சொற்களையே சித்த மருத்துவர்கள் கையாள வேண்டும்.

மேலும், ஐம்பூதங்கள் இரண்டிரண்டாகக் கூடி அறுசுவைகள் தோன்றுகின்றன என்பதை மணிமேகலை தெளிவாகப் பதிவு செய்து வைத்துள்ளது.தாதகியும் கட்டியுமிட்டு...எனத் தொடங்கும் மணிமேகலைப் பாடல் இதை உறுதி செய்கிறது.எனவே,நமது தமிழ்ச் சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளான அறுசுவைக் கோட்பாடும்,ஐம்பூதக் கொள்கையும் இரண்டாயிரம் முதல் மூவாயிரம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆண்டுக்கு முற்பட்டவை. தொல்காப்பியம் தொடங்கி, இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஐம்பூதக் கொள்கையின் தாக்கம் இருப்பதை எடுத்துக்காட்டுகள் கூறிக் காண்பிக்க முடியும்.

சித்தர்கள் காலத்தில் பிற்பட்டவர்கள், எனவே சித்த மருத்துவமும் காலத்தால் பிற்பட்டது. சித்த என்னும் சொல்லே பிறமொழிச் சொல் என்று ஒரு தவறான பரப்புரை நிகழ்த்தப்பட்டு வருகிறது. சித்தர்களின் வரலாற்றை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம். காலத்தால் முற்பட்ட சித்தர் திருமூலர். இவருடைய காலத்தை வரலாறு மற்றும் மொழி ஆய்வாளர்கள் கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரை முன்மொழிகின்றனர். அதன் பின்னர் கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கும் பின்னரே சித்தர்கள் வருகின்றனர். இக்காலக் கட்டத்தில் தமிழகத்தில் நிலவிய அனைத்துச் சமூகக் கொடுமைகளையும் எதிர்த்து கலகக் குரல் எழுப்பியவர்களே சித்தர்கள் ஆவார். கலகக்காரர்களான சித்தர்கள் ஏற்கனவே வழக்கில் இருந்த தமிழ் மருத்துவத்தைப் புரிந்தமையாலும் நூல்கள் எழுதி வளப்படுத்த முற்பட்டமையாலும் அவர்கள் பெயரால் தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம் என வழங்கப்படலாயிற்று.

மேலும் சித்தர்கள் போலவே ஒரு கூட்டத்தாரைத் தொல்காப்பியர் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்"

மூவகைக் காலத்தையும் உணர்ந்து கூறக்கூடிய அறிவர் என்று ஒரு கூட்டத்தார் பெரும்பாலும் சித்தர் மரபை ஒத்தவர் ஆவார். தொல்காப்பியர் காலத்தில் அறிவர் என்னும் பெயரோடு வழங்கியவர்கள், சங்க காலத்தில் கணியன் என்றும் சங்கம் மருவிய காலத்தில் வள்ளுவர் என்றும் பிற்காலத்தில் சித்தர்கள் எனவும் வழங்கப்படலாயினர். சித்த என்னும் பிறமொழிச் சொல் அறிவு என்றே பொருள்படும். எனவே தொல்காப்பியம் குறிப்பிடும் அறிவரும், பிற்காலத்தில் வாழ்ந்த சித்தரும் ஒரு வகையினரே ஆவார். மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழ் அறிவியல் மரபு திடீரென்று ஒரே நாளில் உருவானது கிடையாது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்த அறிவியல் மரபு சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமாயின் அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, அது படிப்படியாக வளர்ந்திருக்க வேண்டும். அதனுடைய உண்மையான பழமை தான் எவ்வளவு என்று கேள்விகள் கேட்கப்படும் போது சென்ற 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழ் ஆய்வாளரும் ஒவ்வொரு பதிலைக் கூறிக் கொண்டு இருக்கும் போது மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஒருவர்தான் தமிழின் அறிவியல் மரபு 11,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறுதியிட்டுக் கூறினார். அப்போது அவருடைய கருத்தை ஏளனப்படுத்திப் பேசினர். ஆனால் 1991 ஆம் ஆண்டிலும், 2001 ஆம் ஆண்டிலும் பூம்புகார்க் கடற்பகுதியில் தொல்பொருள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆண்டுக்கு முற்பட்டவை. தொல்காப்பியம் தொடங்கி, இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஐம்பூதக் கொள்கையின் தாக்கம் இருப்பதை எடுத்துக்காட்டுகள் கூறிக் காண்பிக்க முடியும்.

சித்தர்கள் காலத்தில் பிற்பட்டவர்கள், எனவே சித்த மருத்துவமும் காலத்தால் பிற்பட்டது. சித்த என்னும் சொல்லே பிறமொழிச் சொல் என்று ஒரு தவறான பரப்புரை நிகழ்த்தப்பட்டு வருகிறது. சித்தர்களின் வரலாற்றை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம். காலத்தால் முற்பட்ட சித்தர் திருமூலர். இவருடைய காலத்தை வரலாறு மற்றும் மொழி ஆய்வாளர்கள் கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரை முன்மொழிகின்றனர். அதன் பின்னர் கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கும் பின்னரே சித்தர்கள் வருகின்றனர். இக்காலக் கட்டத்தில் தமிழகத்தில் நிலவிய அனைத்துச் சமூகக் கொடுமைகளையும் எதிர்த்து கலகக் குரல் எழுப்பியவர்களே சித்தர்கள் ஆவார். கலகக்காரர்களான சித்தர்கள் ஏற்கனவே வழக்கில் இருந்த தமிழ் மருத்துவத்தைப் புரிந்தமையாலும் நூல்கள் எழுதி வளப்படுத்த முற்பட்டமையாலும் அவர்கள் பெயரால் தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம் என வழங்கப்படலாயிற்று.

மேலும் சித்தர்கள் போலவே ஒரு கூட்டத்தாரைத் தொல்காப்பியர் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்"

மூவகைக் காலத்தையும் உணர்ந்து கூறக்கூடிய அறிவர் என்று ஒரு கூட்டத்தார் பெரும்பாலும் சித்தர் மரபை ஒத்தவர் ஆவார். தொல்காப்பியர் காலத்தில் அறிவர் என்னும் பெயரோடு வழங்கியவர்கள், சங்க காலத்தில் கணியன் என்றும் சங்கம் மருவிய காலத்தில் வள்ளுவர் என்றும் பிற்காலத்தில் சித்தர்கள் எனவும் வழங்கப்படலாயினர். சித்த என்னும் பிறமொழிச் சொல் அறிவு என்றே பொருள்படும். எனவே தொல்காப்பியம் குறிப்பிடும் அறிவரும், பிற்காலத்தில் வாழ்ந்த சித்தரும் ஒரு வகையினரே ஆவார். மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழ் அறிவியல் மரபு திடீரென்று ஒரே நாளில் உருவானது கிடையாது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்த அறிவியல் மரபு சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமாயின் அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, அது படிப்படியாக வளர்ந்திருக்க வேண்டும். அதனுடைய உண்மையான பழமை தான் எவ்வளவு என்று கேள்விகள் கேட்கப்படும் போது சென்ற 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழ் ஆய்வாளரும் ஒவ்வொரு பதிலைக் கூறிக் கொண்டு இருக்கும் போது மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஒருவர்தான் தமிழின் அறிவியல் மரபு 11,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறுதியிட்டுக் கூறினார். அப்போது அவருடைய கருத்தை ஏளனப்படுத்திப் பேசினர். ஆனால் 1991 ஆம் ஆண்டிலும், 2001 ஆம் ஆண்டிலும் பூம்புகார்க் கடற்பகுதியில் தொல்பொருள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆய்வு மேற்கொண்ட கடற்படைத் தளபதி கிரகம் ஆன்காக் அவர்களின் ஆய்வறிக்கை தேவநேயப் பாவாணரின் கூற்றை மெய்ப்படுத்தியது.

அவர் பூம்புகார்க் கடற்பகுதியில் சுமார் 3 மைல் தூரத்தில், 70-100 அடி ஆழத்தில் 20 க்கு மேற்பட்ட மனிதனால் கட்டப்பட்ட கட்டிட அமைப்புகள் கடலுக்கு அடியில் இருப்பதை உறுதி செய்தார். இதே போல குசராத்தில் உள்ள காம்பே வளைகுடாப் பகுதியில் கடலுக்கடியில் உள்ள அமைப்புகளும் ஓரளவு ஒத்த நிலையில் உள்ளது என்றும் கூறுகிறார். நகர வாழ்க்கை வாழத் தொடங்கிவிட்ட எந்த ஒரு இனக்குழுவிற்கும் கண்டிப்பாக ஒரு மருத்துவ முறை இருக்கும் என்பது உறுதி. எனவே தமிழ் மருத்துவ வரலாறும் 11,000 ஆண்டுக்கு மேல் பழமையானது எனபது உறுதியாகிறது.

ஆரிய, வேத நாகரிகத்திற்கும் முற்பட்டதாகக் கருதப்பட்ட சிந்துவெளி நாகரிகத்தின் காலம் 4,000 முதல் 5,000 ஆண்டுகள் எனக் கூறப்பட்டது. சிந்துவெளி நாகரிகத்தில் காணப்படும் வரி வடிவங்களும், காவிரிப்படுகையில் கண்டெடுக்கப்பட்ட வரி வடிவங்களும், தெற்கே ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட வரி வடிவங்களும் ஒன்றுடன் ஒன்று நன்றாக ஒத்துப் போகிறது என்று அறிஞர்கள் சான்று பகர்கின்றனர். எனவே தமிழகம் முழுவதும் தமிழ் பரவி இருந்து இருக்கிறது. தமிழ் அறிவியல் மரபில் இருந்தே இந்தியாவில் உள்ள அனைத்து மொழி, கலை மற்றும் மருத்துவ முறைகளும் தோன்றி உள்ளன என்பது உறுதி ஆகிறது.

எனவே தமிழர்களாகிய நமக்கு 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மருத்துவ அறிவியல் மரபு சொந்தமானது என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்வோம். எந்த அவையிலும் தமிழ் மருத்துவ அறிவியல் மரபே இந்தியாவில் உள்ள அனைத்து அறிவியல் மரபுகளுக்கும் தாய் என ஓங்கிக் கூறுவோம்.

வாழ்க தமிழ் ! **வளர்க தமிழ் மருத்துவம் !**

சாந்த சந்திரோதய மாத்திரை சிவப்பாக இருக்கும்.

வேதியியல் காரணம் :

மஞ்சள், வெங்காரம் கலக்கும் போது Rubro Curcumin, Roso Cyanine என்ற வேதிப்பொருள்கள் உருவாகிறது. இச்சோதனை தண்ணீரில் போரான் இருப்பதை கணிப்பதற்காக இன்றும் மஞ்சள் சேர்க்கப்படுகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழ் நாட்டில் சித்த மருத்துவக் கல்லூரி

தொடக்க நிலை :

1921 ஆம் ஆண்டின் இறுதியில் மறைந்த பனகல் இராஜா அவர்கள், சென்னை இராஜதானியின் முதலமைச்சரும், நல்வாழ்வுத்துறை அமைச்சருமாக இருந்த காலத்தில் வெளியிட்ட அரசு ஆணை G.O.Ms.No.964 P.H.Dt.10.08.1921 & G.O.Ms.No.1351.P.H.Dt.17.10.1931 ஆகியவற்றின் படி செயலாற்றிய உஸ்மான் கமிட்டியின் பரிந்துரையின்படி அரசு ஆணை G.O.Ms.No.1581.P.H. Dt.03.11.1924 இல் டாக்டர் ஜி.ஸ்ரீனிவாசமூர்த்தி அவர்களை முதல்வராகக் கொண்டு, அரசு இந்திய மருத்துவ முறைப் பள்ளி (government Indian Medical School) எழும்பூரில் வாடகைக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பள்ளியில் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி முறைகளுக்குத் தனித்தனியாக மூன்றாண்டுகள் பயிலும் வகையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு Diploma of Licentiate in IndianMedicine (L.I.M) எனும் பெயரில் சான்றிதழ் வழங்கப்பட்டு வந்தது.

1926 இல் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கத்தில் பெரியதோர் வாடகைக் கட்டடத்திற்கு அப்பள்ளி மாற்றப்பட்டது. அரசு ஆணை G.O.Ms.No.2188,P.H.Dt.28.10.25 ன் படி மாற்றப்பட்ட அப்பள்ளியின் பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளிலிருந்து நான்காண்டுகளாக உயர்த்தப்பட்டதோடு, 1942இல் டாக்டர் ஜி.ஸ்ரீனிவாசமூர்த்தியைப் பின் தொடர்ந்து டாக்டர். பி.வி. கிருஷ்ணராவ் முதல்வரானார்.1944இல் டாக்டர் எம்.பராங்குசலம் முதல்வரானார். சென்னை இராஜதானியின் அன்றைய முதல்வராயிருந்த மாண்புமிகு.திரு.டி.பிரகாசம் & நல்வாழ்வுத்துறை, அமைச்சராயிருந்த மாண்புமிகு.திருமதி. ஆர். லட்சுமிபதி ஆகியோரின் விடாமுயற்சியாலும் மற்றும் தனிஅலுவலர் (Special Officer) திரு.நாராயணசாமி நாயுடு பி.ஏ.,பி.எல். ஆகியோரது நற்பணிகளாலும், அரசு இந்திய மருத்துவ முறைபள்ளி, கல்லூரி எனும் நிலையை அடைந்தது. G.O.Ms.No.762 P.H.Dt 10.03.1947 அரசு ஆணையின்படி, 1947 இல் முறைப்படி பள்ளியில் பயின்ற மாணவர்கள் தங்கள் கல்வியை ஒருபுறம் முடித்த காலத்திலேயே அவர்கள் பள்ளி மூடப்பட்டதோடு, புதிய கல்லூரியும் தோன்றியது. மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆகியது. இது முந்தைய எண்ணிக்கையை விட (120) மிகவும் குறைவு. எனினும் மாற்றம் தேவையாக இருந்தது.

இந்திய மருத்துவத் துறை :

பிற்காலத்தில் 1948இல் L.I.M. Course School of indian Medicine as per G.o. Ms.No.177.P.H.Dt.28.05.1948&G.O.Ms.No.405,P.H.Dt.08.02.1949 அரசு ஆணைகளின் படி பள்ளியும், கல்லூரியும் ஏகக் காலத்தில் இயங்கலாயின. எல்.ஐ.எம். மாணவர்களின் எண்ணிக்கை 100 ஆக வரையறுக்கப்பட்டது. G.O.Ms.No.2361, P.H.Dt.22.06.1949 இன்படி 01.07.1949இல் டாக்டர்.எம்.ஆர்.குருசாமி முதலியார், எம்.டி. இந்திய மருத்துவத்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார். சென்னை பல்கலைக்கழகம் College of Indigenous Medicine தொடங்க அங்கீகாரம் வழங்காத காரணத்தால், அன்றைய மாணவர்களுக்கு அரசே Graduate of the College of indigenous Medicine (G.C.I.M) எனும் பட்டத்தை வழங்கியது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இணைப்புமுறை மருத்துவம்:

டாக்டர்.எம்.ஆர்.குருசாமி முதலியார் அவர்களின் இந்திய முறை மருத்துவக் கல்லூரி 01.07.1955 இல் Direcor of Medical Services கைக்கு மாறியது. 5 ஆண்டுக் கல்வி, ஐந்தரை ஆண்டுகளாகியது. இந்திய முறை மருத்துவமனை, இணைப்பு முறை மருத்துவக் கல்லூரி மற்றும் இணைப்பு முறை மருத்துவமனை ஆகிய பெயர்களைப் பெறலாயின. (Government College of Integrated Medicine Hospital 1958 ல் The Integrated Medical Practitioners Act / G.C.I.M., L.I.M) ஜி.சி.ஐ.எம்.இஎல்.ஐ.எம். ஆகியவர்களுக்காகவே இணைப்பு முறை மருத்துவம் கொண்டு வரப்பட்டது.

சித்த மருத்துவக் கல்லூரிகள் :

காலப்போக்கில் தூய சித்தா, ஆயுர்வேதா, யுனானி முறைகளை மட்டுமே பாட போதனைகளாகக் கொண்டு, இந்திய முறை மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், திரு.மேதா கமிட்டியின் பரிந்துரையின் பேரில், சித்தா, ஆயுர்வேதா, யுனானி முறைகளுக்காகவே தனியாகக் கல்லூரி குற்றாலத்தில் தொடங்குவதற்காக விண்ணப்பங்கள் 1964 இல் வரவேற்கப்பட்டன. ஆனால் அங்குப் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக ஏற்படுத்த இயலாத காரணத்தால், பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி நகராட்சி மருத்துவமனை வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது. அன்றிலிருந்து 50 ஆண்டுக் காலமாக 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட தற்காலிகமான சிறிய வளாகத்தில் இன்று வரை கல்லூரி இயங்கி வருகின்றது.

ஆயுர்வேதா, யுனானி முறையில் பயில மாணவர்கள் வராத காரணத்தால் 30 ஆக இருந்த சித்த மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை அதே ஆண்டில் 65 ஆக உயர்ந்தது குறிப்பிடத்தக்கது. இம்மாணவர்களுக்கு Bachelor of Indian Medicine பட்டம் வழங்கப்பட்டது. பயிற்சியின் காலம் ஐந்தாண்டுகள், பிற்காலத்தில் இந்திய முறை மருத்துவக் கல்லூரி சித்த மருத்துவக் கல்லூரி எனும் பெயர் மாற்றத்திற்கு உள்ளாகியது. பி.ஐ.எம்.பட்டத்தைத் தொடர்ந்து, 1972இல் எம்.டி. எனும் மேற்படிப்பு தொடங்கப்பட்டது. அன்றைய இந்திய மருத்துவக் கலலூரி நடந்து வந்த அதே இடத்தில், இன்றைய அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் நடைபெற்று வருகிறது. 1975-76 இல் மாணவர்களின் எண்ணிக்கை (பி.ஐ.எம்) 40 ஆக ஆக்கப்பட்டது. மீண்டும் மாணவர்கள் சேர்க்கை வளர்ந்து இன்றைய நிலையை (100 மாணவர்கள்) எட்டியது.

1964	பட்டப்படிப்பு (Bachelor Degree) மாணவர்களின் சேர்க்கை 65 ஆக இருந்தது. இது பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டது..
1968	பட்டப்படிப்பு மாணவர்களின் சேர்க்கை 100 ஆக உயர்த்தப்பட்டது.
1972-73	பட்டமேற்படிப்புத் துறைகளான (M.D.(s)) குணபாடம், பொது மருத்துவம் துவங்கப்பட்டன.
1996	பட்டமேற்படிப்புத் துறைகளான சிறப்பு மருத்துவமும், குழந்தை மருத்துவமும் துவங்கப்பட்டன.
1997-98	பட்டமேற்படிப்புத் துறையான நோய்நாடல் துவங்கப்பட்டது.
1998-99	பட்ட மேற்படிப்புத் துறையான நஞ்சு நூல் துவங்கப்பட்டது.
2005	செவிலியர் பயிற்சி (DNT) துவங்கப்பட்டது.
2006	மருந்தாளுநர் பயிற்சி (DIP) துவங்கப்பட்டது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

1964இல் ரூ.75/- உதவித்தொகையாக மாணவர்களுக்கும்,, ரூ.175/- பயிற்சி மருத்துவர்களுக்கும் வழங்கப்பெற்றது. எம்.டி. (சி) மாணவர்களுக்கு ரூ.200/-உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்பட்டது. சென்னை பல்கலைக்கழகத்திலிருந்து 1968-1969இல் மதுரை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாகம் மாற்றப்பட்டது. முன்னாளில் தோன்றிய பாளையங்கோட்டை . இந்திய மருத்துவக்கல்லூரி, சித்த மருத்துவக் கல்லூரி ஆன போது பி.ஐ.எம்., எனும் பட்டம்,பி.எஸ்.எம்.எஸ். எனும் பட்டமாக மாற்றப்பட்டது. பயிற்சிக்காலம் ஐந்தரை ஆண்டுகளாயின. இம்மாற்றம் 1976 இல் தோன்றியது.பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான புதிய கட்டடங்களும், பற்பல புதிய துறைகளும், ஓலைச்சுவடி ஆராய்ச்சித் துறையும் (Library Research Unit) மருத்துவ ஆராய்ச்சித் துறையும் (Clinical Research Unit), தாவரவியல் ஆராய்ச்சித் துறையும் (Survey of Medicinal Plants Unit) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி, 1993இல் சென்னையில் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை வளாகத்திற்கு மாற்றப்பட்டு, புதிய கட்டடங்கள் கட்டப்பெற்று, சீரும் சிறப்புமக இயங்கி வருகிறது.

பாளையங்கோட்டையைப் போலவே 1971 இல் கீழ்ப்பாக்கத்தில், மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமும்,1979 இல் மண்டலச் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் பாண்டிச்சேரியிலும் தோன்றலாயின. கீழ்ப்பாக்கத்தில் இயங்கி வந்த மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமும், 1975 இல் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனை வளாகத்திற்கு மாற்றப்பட்டது. இவை யாவும் முன்னாளில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மத்தியக் கழகத்தாலும், பின்னாளில் ஆயுர்வேதா மற்றும் சித்தா மத்தியக் கழகத்தாலும் நிர்வகிக்கப்படுகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடத்திலேயே 1979இல் சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி மற்றும் ஆவணத்துறை தோன்றியது. ஏற்கனவே நுண்ணுயிரியல் (Microbiology) மருந்து தரக் கட்டுப்பாடு (Drug Standardization) மருந்து செய்யகம் (Pharmacy) பல்வகை மருத்துவ ஆராய்ச்சி (Drug Research Scheme - Multi Disciplinary) மருத்துவ ஆராய்ச்சி (Clinical Research) நோய்க் கணிப்பு (Patholgoy) மூலிகை ஆராய்ச்சி (pharmacognosy) மற்றும் உள்ளிருப்பு (In - Patient) வெளிநோயாளிகள் (Out - Patient) பகுதியும் இயங்கி வந்த போதிலும், புதிதாகத் தோன்றிய சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி மற்றும் ஆவணத்துறை, இவைகள் அனைத்திற்கும் தேவையான தகவல்களைத் தரும் தலையாய கடமைகளைச் செய்யலாயிற்று.

இத்துறை, ஓலைச்சுவடிகளைச் சேகரித்தல்,பராமரித்தல், படியெடுத்தல்,ஒப்பு நோக்குதல், விளக்க உரை எழுதுதல்,முறைப்படுத்துதல், நூல்வடிவு பெறச் செய்தல், அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பணிகளோடு, நுண்படியெடுத்தல் _(Microfilming), பதிவு செய்தல் (Documentation), பாதுகாத்தல் (Preservation) போன்ற பல்வேறு பணிகளையும் செய்து வருகின்றது. இந்நிறுவனத்தில் தரமான நூல்களைக் கொண்ட நூலகமும் (Library), நூலகரும் (Librarian) உள்ளமை இதன் பெருமைக்குச் சான்றாகும்.

சித்த மருத்துவமனை :

1968இல் அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை தொடங்கப்பட்டது. பிற்காலத்தில் ஓமியோபதி,ஓகா, இயற்கை மருத்துவ முறைகளும் இம்மருத்துவமனையோடு இணைந்து, அறுவகை மருத்துவத் துறைகள் தமக்கே உரித்தான நல்வழிகளில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இயங்கி வருகின்றன. இதில் இந்திய மருத்துவத்துறை மற்றும் ஓமியோபதித்துறை இணைந்த இயக்குநர் அலுவலகமும், அவருக்குத் துணையாக இணை இயக்குநர் அலுவலகமும் இவற்றின் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றன.

முதல் முறையாகத் தலைமைச் செயலகத்திலும், சேப்பாக்கத்திலும், புதுக்கோட்டையிலும், கன்னியாகுமரியிலும், செங்கோட்டையிலும், சோமரசம்பேட்டை, சைதாப்பேட்டையிலும், வாய்மேடு போன்ற இடங்களிலும் அரசினர் சித்த மருத்துவமனைகள் தோன்றலாயின. காலப்போக்கில் சேலம் ஆத்தூரிலும் இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், திண்டிவனத்திலும்,வட ஆற்காடு- குடியாத்தத்திலும், கோவை - உடுமலைப்பேட்டையிலும், திருச்சி - லால்குடியிலும், தஞ்சை - கும்பகோணத்திலும், மதுரை - நிலக்கோட்டையிலும், திருநெல்வேலி - கோவில்பட்டியிலும், செங்கை- தாம்பரத்திலும், திருநெல்வேலி - சங்கரன்கோவிலிலும், தஞ்சை - புதுக்கோட்டையிலும், மன்னார்குடியிலும், செங்கை - ஸ்ரீ பெரும்புதூரிலும், கோவை - கோபிச்செட்டிப்பாளையத்திலும், நீலகிரி - குன்னூரிலும், தர்மபுரி- ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும், இராமநாதபுரம் - சிவகங்கையிலும், சேலம் - நாமக்கல்லிலும், மதுரை - தேனியிலும், திருமங்கலத்திலும், தென் ஆற்காடு - சிதம்பரத்திலும், செங்கை - அரக்கோணத்திலும் 1974 இல் இருந்து தோன்றிய மருத்துவமனைகள், படிப்படியாக மாவட்டங்களில் இருந்து கோட்டங்களுக்கும், கோட்டங்களிலிருந்து வட்டங்களுக்கும் பரவி, படிப்படியாகப் பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை விரிவுபடுத்தப்பட்டு, வளர்ந்து தமிழகமெங்கும் தமது பணியைச் செய்யலாயின.

இன்று அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகத்தில் சித்த மருத்துவக் கல்லூரியும், யுனானி மருத்தவ முறைக் கல்லூரியும், மத்தியச் சித்த ஆராய்ச்சி நிறுவனமும் இயங்கி வருகின்றன. ஏற்கனவே அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனைக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று 1983 இல் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்திற்கு இயக்குநரே மேலாளராக நியமிக்கப்பட்டார். இவரை ஆலோசகராகக் கொண்ட இந்நிறுவனம், இவ்வளாகத்திலேயே தமக்கென ஒரு மருந்து செய் நிலையத்தையும் கொண்டு இயங்கி வருகின்றது. சில தவிர்க்க இயலாத காரணங்களால் பொருளிழப்பில் இயங்கி வந்த இந்நிறுவனம், ஒரு கோடிக்கு மேல் பொருளீட்டி இயங்கித் தன்னை நிலைபடுத்திக் கெண்டு வளர்ந்து வருகிறது. தமிழகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருவது மருத்துவத் துறைக்கு ஒரு வப்பிரசாதமாகும்.

இந்நிறுவனம் தரமான மருந்துகளைத் தயாரித்துப் பல மாநிலங்களுக்கும் விற்பனை செய்து வருவது, இதன் முன்னேற்றத்தின் முதல் படியாகும். காலப்போக்கில் இந்நிறுவனம் மேலும் வளர்ந்து, பல கோடிகளை ஈட்டித் தருவது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

சித்த, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளும் ஆங்காங்கே தோன்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை யாவும் விரைவில் நடந்தேறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மருத்துவம் வளரத் தரமான மருத்துவ அகராதி தேவை என்று மகாபோத்தியாய சுவாமிநாத ஐயர் கமிட்டி கூறியபடி அறிவையும், புத்திக்கூர்மையையும், வளர்க்கும் மருத்துவ அகராதியை, திரு.சாம்பவசிவம்பிள்ளை அவர்கள் இயற்றித் தமிழ் மக்களுக்கு அளித்துள்ளமை, தமிழ் மக்கள் வாழும் காலமெல்லாம் நினைந்து, பெருமைப்படத்தக்க ஒரு செயலாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்த மருத்துவ ஆராய்ச்சி :

தற்போது சித்த மருத்துவ மாணவர்கள், சித்த மருத்துவம் மட்டுமின்றி, பயனுள்ள ஆராய்ச்சித் துறைகளிலும் தங்களது கவனத்தை செலுத்தித் தாவரவியல், மருந்தியல், மருத்துவ ஆராய்ச்சி, மருத்துவ வரலாறு மற்றும் தனித்தனியாக மூலிகைகளையும், இரச, தாதுப் பொருள்களையும் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து வருவது சித்த மருத்துவ வளர்ச்சிக்கும், வளமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. தற்போது தமிழகத்திலும், அண்டை மாநிலமான புதுச்சேரியிலும் மட்டுமே தன்னாட்சியைச் செய்து வரும் சித்த மருத்துவம், விரைவில் தமிழகமெங்கும் பரவி வளர்ந்து இந்தியத் துணைக்கண்டத்திலும் மற்றும் இலங்கை , மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் பரவி, உலகெங்கும் தன்னாட்சியோடு தலைசிறந்து விளங்க வேண்டுமென்று எல்லோரும் விரும்புவது இயற்கையே.

The govt Siddha Medical College was establises at palayamkottai on 30 November 1964.

This was an affiliated college the university of madras untill march 1966 from then untill 1988 it was an affiliate of madurai kamaraj university and since march 1989 of Dr.M.G.R Medical University.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்த மருத்துவத்திற்கு அரும்பணியாற்றிய பேரறிஞர்கள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அயல்நாடுகளில் உள்ள சித்தமருத்துவ அறிஞர்கள்

Mr.Johannem Stgrundler

Mr.Russel patrick



Dr.Samuel Fiskgreen

Mr. Jacques Daviel

The King Sarapoji



சித்த கண்மருத்துவம் &
அம்மை நோய் மருத்துவம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அயல் நாட்டு சித்த மருத்துவ பேரறிஞர்கள்

Dr.சாமுவேல் பிஸ்க் கிரீன்

இவர் நமது உடற்கூறு நூல் ஆசிரியர் ஆவர். இவர் ஆங்கில மருத்துவராக இருந்தாலும் தமிழ் அறுவை மருத்துவம் மற்றும் சூல் மருத்துவம் பற்றி Newyork Medical Journal ல் பிரசுரித்து சித்த மருத்துவத்தை உலகறியச் செய்தவர். அவரின் கல்லறையில் தமிழ் மக்களுக்கு மருத்துவ சேவை செய்தவர் என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளது.

Dr.பேட்ரிக் ராயல்

இவர் இந்தியாவின் பாம்புவியலின் தந்தையாக போற்றப்பட்டாலும் விஷக்குழம்பு பாம்புக்கடி மற்றும் வெறிநாய்க்கடிக்கு வழங்கிய Tanjavar Pills என்ற சித்த மருந்தை தடை செய்தவர். அன்று முதல் 350 ஆண்டுகளாக இந்த நிலை தொடர்கிறது.

Dr.டேவிட் ஜாக்ஸ்

ஆங்கில கண்புரை அறுவை சிகிச்சையின் தந்தை என்று போற்றப்படும். பிரஞ்சு கண் மருத்துவர். இவர் இம்முறையை சித்த மருத்துவ கண் மருத்துவ முறைகளில் இருந்து எடுத்தாளப்பட்டதாக தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

Rev.கிரண்ட்லர்

ஜெர்மனி நாட்டை சேர்ந்த பாதிரியார். சீகன்பால்கு அவர்களுடன் தரகம்பாடி வந்து 30 ஆண்டுகளாக சித்த மருத்துவ சுவடி செய்திகளை சேகரித்து ஹாலே மியூசியத்தில் உள்ள 3000 நூல்களாக இன்றும் உள்ளது.

இன்றைய Vaccine க்கு முன்னோடி சித்த மருத்துவம்

பிலடெல்பியா மருத்துவ சங்க Vaccine வரலாற்றில் சித்தமருத்துவம் பெரியம்மைக்கு Innoculation என்று வழங்கப்பட்டவை ஆதாரமாக வெளியிடப்பட்ட படங்கள்.

மன்னர் சரபோஜி

தஞ்சை ஆண்ட சரபோஜி மன்னர் சித்த மருத்துவ கண் மருத்துவத்தில் நிபுணர் என்பதும் அவர் பயன்படுத்திய பச்சை தாம்பிராதி குளிகையை ஆங்கில மருத்துவ நூல்கள் Blue Pill என்று புகழ்கின்றனர். இவர் இன்றைய கண்புரை சிகிச்சையின் முன்னோடி என்று புகழ்ப்படுகிறார்.

சித்த மருத்துவம் பொதுவாக தமிழகத்தை விட்டு பரவவில்லை என்ற தவறான கருத்து உள்ளது. உலகின் உள்ள அனைத்து நாடுகளிலும் பல பேரறிஞர்களால் சித்த மருத்துவம் போற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது. தற்போது கூட பிற நாட்டு ஆய்வு மாணவர்களால் சித்த மருத்துவ ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது என்பதே உண்மை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கல்லூரி மருந்து செய் நிலையம் & அடிப்படை பணியாளர்கள்

தில்லை நடராஜர் கோவிலின் அறிவியல் உண்மைகள்

பல கோடி டாலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து சிதம்பரம் நடராஜர் கால் பெருவிரலில் தான் மொத்த பூமியின் காந்த மையப்புள்ளி இருப்பதாக உலக நாடுகள் கண்டுபிடித்துள்ளன. centre point of world's magnetic Equator எந்த செலவும் செய்யாமல் எந்த டெலஸ்கோப்பும் இல்லாமல் இதனை கண்டறிந்த நமது தமிழன் எப்பேற்றபட்ட அறிவுமிக்க வன்...? அதை உணர்ந்து அணுத்துகள் அசைந்து கொண்டே இருக்கும் என்ற உண்மையை ஆடும் நடராஜர் வாயிலாக உணர்த்தும் படி சிலை அமைத்து பூமியின் மையப்புள்ளியில் மறைமுகமாக அமர்த்திய அவன் சாதனை எப்பேர்பட்டது..? இதனை 5000 வருடங்களுக்கு முன்பே கண்டறிந்து திருமந்திரத்தில் குறிப்பிட்ட திருமூலரின் சக்தி எப்படிப்பட்டது? புரிகிறதா? தமிழன் யார் என தெரிகிறதா? திருமூலரின் திருமந்திரம் மிகப்பெரிய உலகிற்கே வழி காட்டும் அறிவியல் நூலாகும் இதை உணர்ந்து கொள்ள தற்போதுள்ள அறிவியலுக்கு இன்றும் ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம்... வாழ்க தமிழ் வெல்க தமிழனின் நுண்ணறிவு! சிதம்பரம் நடராஜர் கோயில் ரகசியம் என்று பலரும் பல கருத்துக்களை கூறிவரும் வேளையில் அந்தகோயிலில் இருக்கும் அறிவியல் பொறியியல் புவியியல் கணிதவியல் மருத்துவவியல் குறித்த ஆச்சரியங்களின் சில தகவல்கள் முன்னோர்கள் செய்த எல்லா செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளது அப்படி இருக்க அவர்கள் நிர்ணயித்த பிரம்மாண்டமான கற்கோவில்களுக்கு பின் இருக்கும் சில அற்புதங்களை அதனிடைங்கும். அந்த வகையில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புதமான ரகசியங்கள் இவைகள் தான்

1. இந்த கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூமத்திய ரேகையின் சரியான மையப் பகுதி என்று கூறப்படுகின்றது (Centre Point of World Magnatic Equator)

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வேதியர் & ஆரியரின் வருகைக்குப் பின் அறிவு சார்ந்த தமிழச் சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. நாடுகளை ஆண்ட மன்னர்கள் தங்கள் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவும்,அண்டை அயல் நாடுகளை கைப்பற்றவும் வேதியரின் வழிக்காட்டுதலில் வேள்விகள்,சடங்குகள் நடத்தினர்.அதற்கு கைமாறாக வேளாண்மைக்கும் உழவுக்கும், உழைப்புக்கும் தொடர்பற்ற வேதியருக்கு நிலங்களை உடைமையாக்கினர் உழுபவரும், உழைப்பவரும்,மருத்துவரும் ஊருக்கு வெளியே அப்புறப்படுத்தப்பட்டனர்.

அறுவை மருத்துவரை தீண்டதகாதவராக்கினர்,அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தில் வேதியர்களால் சாதிய சடங்குமுறைகள் புகுத்தப்பட்டன. மெஞ்ஞானிகளாகிய தமிழ்சித்தர்கள் இவற்றை எதிர்த்து கலகம் செய்தனர்.

வேதாந்தத்தின் அடிப்படையில் உடல் நிலையற்றது. (ஆன்மா நிலைப்பெற்றது) உடல் அழியக்கூடியது.எனவே மருத்துவம் செய்து உடலைக்காப்பது பாவச் செயல்.அச்செயலை சமூகக் கடமையாகக் கொண்டிருந்த மருத்துவர்கள் கீழ்படுத்தப்பட்டனர்.

இன்றளவும் இதுவே தமிழ் மருத்துவமாம் சித்தர் மருத்துவத்தின் நிலையாக உள்ளது.

மண்ணின் மருத்துவம் சித்தர் மருத்துவம்
சித்தர் மருத்துவம் தமிழர் மருத்துவம்
சித்தர் மருத்துவம் பேணுவோம்
தமிழ் மரபினைக் காப்போம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்த மருத்துவர். **பி.மைக்கேல் செயராசு.** BSMS

தலைவர் உலகத் தமிழ் மருத்துவக் கழகம்

ஆசிரியர். கற்ப அவிழ்தம்

தமிழர் வாழ்வியலில் மருத்துவ அறிவு

மருத்துவமும் கல்வியும் வணிக மயம் ஆகிவிட்ட இக்காலத்தில் சித்த மருத்துவதத்தின் எதிர்காலம் என்ன என்று ஆராய்ச்சி செய்ய வேணடிய கட்டாயத்தில் உள்ளோம். தமிழருக்கு என்று தனியாக வாழ்வியலில் மருத்துவத்தை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டுள்ளனர். இத்தத்துவம் ஐந்திணை மரபுச் சார்ந்தது உண்டா? உண்டு அதில் தொல்காப்பியம் என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழ் மருத்துவம் தமிழர் மெய்யியலை அடிப்படையாக கொண்டது. 3000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தொல்காப்பியத்தில் ஐம்பூதக் கொள்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே இந்திய இலக்கியப் மரபில் தமிழில்தான் ஐம்பூதக் கொள்கை முதலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து உணவுப் பொருட்கள். மருந்துகள் இதன் அடிப்படையில் தமிழர் கண்டறிந்தனர்.

ஐந்திணை மரபைக் காப்பது தமிழர் மரபைக் காப்பதாகும். வரலாற்றைத் தெரியாத இனம் - வாழ முடியாது. தேவநேயப்பாவாணர் - தனித்தமிழ். செந்தமிழ் பற்றி 1960ஆம் ஆண்டு முதலே தனது கருத்தைப் பதிவு செய்து உள்ளார். அவர் தமிழர் நாகரிகம், தமிழ்மருத்துவம் 10,000 ஆ ்டுக்கு முற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். இதை உறுதி செய்யும் விதமாக 1991 இல் கிரகாம் ஆன்காக் என்ற ஆங்கில கப்பல் தளபதி சென்னை முதல் குமரி வரை கடல் ஆராய்ச்சி செய்த போது பூம்புகார் நாகரிகம் 11,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் முறையில் ஆராய்ச்சி செய்து நிறுவியுள்ளார். நகர அமைப்பில் வாழத் தெரிந்தவருக்குக் கண்டிப்பாக மருத்துவம் தெரிந்திருக்கும். எனவே தமிழர் மருத்துவத்தின் வயது 11,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

சிலப்பதிகாரத்தில் ஆயுள்வேத மருத்துவன் இல்லம் அணித்தோ சேத்தோய் என்று குறிப்பிடப்படுகிறது.

எனவே எல்லா மருத்துவத்திற்கும் ஊற்றுக்கண் தமிழர் ஐம்பூதம், ஐந்திணை மரபே ஆகும். 1978இல் உலக நலக்கழகம் (WHO) நலத்திற்கான வரையறை கூறும் போது நலவாழ்வு என்பது உடல்நலம், மனநலம், ஆன்மா, சமூகநலம் சார்ந்தது எனக் கூறுகிறது. இதனை 1500 ஆண்டுகளுக்கு முன்பு திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது இனிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே - திருமூலர்"

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

13- 20 நூற்றாண்டு வரை தமிழ் மருத்துவத்திற்கு குழப்பக் காலம். பிற மொழி ஆட்சியாளர்கள் கையில் தமிழகம் இருந்தது. சென்னை நந்தனம் கலைக் கல்லூரியின் ஆய்வாளர் 1780இல் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் தரங்கம்பாடி துறைமுகத்தில் இருந்து 73 சித்த மருத்துவர்கள் ஜெர்மனிக்கு அழைத்து செல்லப்பட்டனர். இதன் காரணம் என்ன? என்று வினா எழுப்பினால் காரணம் புரியும்.

தமிழ் மருத்துவ அகராதி தந்த TVS சாம்பசிவம்பிள்ளை, அப்துல்லா சாகிபு, கண்ணுசாமிப்பிள்ளை ஆகியோர் சித்த மருத்துவத்திற்குப் பெரும் தொண்டு ஆற்றியுள்ளார்.

ஆபிரகாம் பண்டிதர் சித்த மருத்துவத்தின் மூலம் பெற்ற செல்வத்தைத் தமிழ் இசை வளர்க்கப் பயன்படுத்தினர். 1960-1964 ம் ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த வாந்தி, பேதி மருத்துவ முறை, எண்ணெய்க்குளியல் ஆகியன சமுதாயத்திலிருந்து நீக்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளில் பிள்ளைப் பிணி மருத்துவ முறை முழுவதுமாக அகற்றப்பட்டு கணை எண்ணெய், மாந்த எண்ணெய் பயன்பாட்டில் இல்லை. இதற்கு பல அரசியல், சமூகக் காரணங்கள் உண்டு.

தற்போது நோயணுகா விதிமுறைகள், அறுசுவை முறைகள், Naturopathy ஆகவும் வர்ம, தொக்கணம் - Physiotheraphy, ஆகவும் Acupunture Acupressue ஆகவும் மலர்ந்துள்ளது. மணி, மந்திரம் அவிழ்பிதில் நாம் அவிழ்தத்தை மட்டும் கையாளுகிறோம்.

மணி, மந்திரத்தை பிரானிக் ஹீலிங் என்று பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். காந்த முறை சிகிச்சை பற்றிப் பேசுகிறார்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு காந்தத்தைப் பற்பம், செந்தூரமாகப் பயன்படுத்தியவர்கள் தமிழர்கள் இனம்.

மருந்தை வீரியபடுத்தும் முப்புக் கொள்கை ஹோமியோபதி மருத்துவமாக மலர்ந்துள்ளது. மக்களுக்கு காய கற்பம் பற்றித் தெரியாது. ஆனால் Antioxidant என்றால் தெரியும். இதில் மொழிமாற்றம் மட்டுமே முன்நிற்கிறது. கீழாநெல்லி பற்றி ஆய்வு செய்த சென்னை பல்கலைக்கழகம் தனது ஆய்வறிக்கையில் ஒரு இடத்தில் கூட தமிழகத்தின் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

எனவே பல்வேறு அரசியல், பொருளாதாரக் காரணங்களால் மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வரும் தமிழரின் மாபெரும் அறிவியல் மரபான சித்த மருத்துவத்தைப் பேணிக்காப்பது ஒவ்வொரு தமிழரின் தலையாய கடமையாக உள்ளது.

தமிழர் ஐந்திணை மரபு காக்க ஊருக்கு ஒரு மூலிகைத் தோட்டம் அமைப்போம்.

சடை அத்தி :

திருநெல்வேலி மாவட்டம் மூலக்கரைப்பட்டி பேருந்து
நிறுத்தத்தில் ஆபூர்வமான சடை அத்தி என்ற மரம் உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழர் நாகரிகம்

புலவர் ந.அரணமுறுவல்

தலைவர், உலகத் தமிழ்க் கழகம்

தமிழர் நாகரிகம் தொன்மையானது. சரி. தொன்மையானதென்றால் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுத் தொன்மையா ? இல்லை. குறைந்தது 20 ஆயிரம் ஆண்டுத் தொன்மை உடையது.

இது கற்பனையா ? உண்மையா? உண்மைதான். இன்றைய மாந்தன் தோன்றி ஒன்றரை இலக்கம் ஆண்டுகள் ஆகின்றன. 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மொழியைத் தோற்றுவித்தான். அப்போது பேசத் தொடங்கியவன் படிப்படியே நாகரீகம் அடைந்தான். குறிஞ்சிக் குகையில் வாழ்ந்தவன் முல்லைக் குடிலுக்கு குடியேறி மருத நகருக்கு மாறினான்.

உலகம் முழுவதும் நகரம்தான் நாகரிகத் தொட்டில் நகரகம் என்ற சொல்லின் திரிபே நாகரீகம். நகர் + அகம் = நகரகம் - நகரிகம் - நாகரிகம் என் இதன் மூலம் காட்டுவார். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர். தமிழர்கள் இந்த மண்ணில் 70 ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மரபணு ஆய்வு உறுதி செய்துள்ளது.

சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகம் அதன் காலம் 12000 ஆண்டுகள். சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம். குமரி நில அழிவுக்குப் பின்பே சிந்தாற்றுப் பகுதியில் தமிழர்கள் குடியேறினார்கள். சிந்து வெளி நாகரிகத்திறகுச் சமமான நாகரிகம் கொற்கை, ஆதிச்சநல்லூர், பூம்புகார், கொடுமணல், அரிக்கமேடு.பொருந்தல், முசிறி முதலிய நகரங்களில் திகழ்ந்த நகர நாகரிகம்.

இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் கடல் கொண்ட தென்னாட்டு நாகரிகம் 20000 ஆண்டுக்கு மேற்பட்ட பழமையுடையது என்பதை மறுக்கமுடியுமா?

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானில அமைப்பு இன்றைக்கிருப்பது போலவே கடல் கொண்ட குமரி நாட்டிலும் இருந்தது. குமரி நாட்டிலேயே நகரங்கள் இருந்தன. முதலிரு கழகங்கள் பாண்டிய மன்னர்களால் தென்மதுரை நகரத்திலும் கதவபுரம் நகரத்திலும் நிறுவப்பட்டிருந்தன. மருதநில வளம் இல்லாமல் நகரம் உருவாக முடியாது. தமிழர்கள் முல்லை நிலக் குறிச்சி வாழ்க்கையிலேயே அரசை உருவாக்கியவர்கள். முல்லை நிலத்து ஆயர்களுக்கு மாடுதான் செல்வம். ஆயர்களின் முல்லை நில அரசில் அவர்களின் கையில் இருந்த கோலே செங்கோலாக மாறியது. அப்போது இருந்தவை ஊர்களே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குமரி ஆறு. பஃறுளி ஆறு. தண்பொருநை ஆறு. வைகை ஆறு. காவிரி ஆறு. பாலாறு என்று ஆற்றங்கரைகளிலேயே நகரங்கள் உருவாயின. குறிஞ்சியிலும் முல்லையிலும் மள்ளர்களாகவும். வேளிர்களாகவும் இருந்தார்கள் மருதத்தில் வேந்தர்கள் ஆனார்கள்.

மருதநில வேந்தர்கள் நெய்தல் நிலத்திலும் தலைநகரை உருவாக்கிப் பேரரசர் ஆனார்கள். பாண்டியனுக்கு கொற்கை, சோழனுக்குப் பூம்புகார், சேரனுக்கு வஞ்சி. உள்நாட்டுத் தலைநகர்களான மதுரை, உறையூர், வஞ்சி (கருவூர்) ஆகியவை துறைமுக நகர்களால் செழித்தன. வணிகம் பெருகிற்று. கடல்கடந்து உலகெங்கும் தமிழர்கள் தம் ஆட்சியையும் வணிகத்தையும் விரிவுபடுத்தினர்.

உலக நாகரிகங்களான சுமேரிய நாகரிகம், கிரேக்க நாகரிகம், உரோமானிய நாகரிகம் முதலிய அனைத்திற்கும் முன்னோடி தமிழர் நாகரிகம் என்கிற உண்மையைத் தமிழர்களாலேயே நம்ப முடியவில்லை. அந்த அளவுக்கு அடிமையாகவும் இழிவானவர்களாகவும் தமிழர்கள் ஆக்கப்பட்ட வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் உணர வேண்டும். அப்போதுதான் நம் பெருமை நமக்குத் தெரியும்.

நாம் பேசும் மொழியிலிருந்து வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியது நாகரிகம். தொழில், வணிகம், மருத்துவம், கலை, அறிவியல், மெய்யியல் என அது விரியும். ஆரியர்கள் நாடோடிகளாகவும் வேட்டைச் சமூகமாகவும் நாவலந்தீவினுள் நுழைவதற்கு முன்பே தமிழர்கள் நகர நாகரிகம் கண்டு சிறந்திருந்தனர். நம் மொழியோ இலக்கிய இலக்கண வளமுடையதாய் விளங்கியது.

கில்பெர்ட் சிலேட்டர் இந்திய நாகரிகத்தில் திராவிடக் கூறு (Dravidan Element in Indian Culture) என்ற நூலில் திராவிடர்கள் மொழிநிலையில் ஆரியப்படுத்தப்பட்ட போது ஆரியர்கள் நாகரிகப் பண்பாட்டில் திராவிடப்படுத்தப்பட்டனர் என்று கூறுகிறார். அவர் திராவிடர் என்றது தமிழர்களையே. தமிழர்களிடமிருந்தே ஆரியர்கள் நாகரிகத்தைக் கற்றுக் கொண்டனர் என்பது தெளிவு.

பரிதிமாற் கலைஞரும் கூட 'ஆரியர்கள் தமிழர்களின் நூல்களை சமற்கிருதத்தில் மொழிபெயர்த்துக் கொண்டு மூல நூல்களான தமிழ் நூல்களை அழித்துவிட்டார்கள்' என்று தம்முடைய தமிழ்மொழி வரலாறு என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழர் உலோக அறிவியல்

கற்காலம் முடிந்து உலோக காலம் தொடங்குகிற இடைக்காலத்தில் பொற்காலம் ஒன்று நிலவியதாக மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் கூறியுள்ளார் ஏனெனில் தமிழகத்தில் மிகமிக அதிகமாக பொன் பயன்பாட்டில் இருந்ததற்கு இலக்கிய சான்றுகள் உள்ளன.தமிழகத்தில் பொற்காலத்திற்கு பின்னரே இரும்புக்காலம் தொடங்கியிருக்க வேண்டும். மட்கலங்கள் வனைவதற்கு தகுதியான மண்ணைத் தேடியபோது பல வகையான கனிமங்கள் கொண்ட மண்ணையும் பாறைகளையும் ஆராய்ந்து பார்த்து இருப்பார்கள்.இக்காரணங்களால் உலோக அறிவியல் தமிழர்களிடையே துலங்கி வந்துள்ளது.அவற்றின் மருத்துவ குணங்களை அறிந்து மருந்துகளாக்கி பயன்படுத்தி வந்தனர்.

சித்த மருத்துவத்தின் நோயில்லா நெறியில் வெள்ளிப் பாத்திரத்தின் பயன்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அம்முறைகளில் தண்ணீரை எட்டிலொன்றாகக் குறுக்கி வென்னீராக்கி வெள்ளிக் கொண்டியில் இட்டுச் சாப்பிடுவதால் நீர்வேட்கை.குன்மம் (Ulcer) பித்த வெடிப்பு ஆகியவை குணமாகும் என்று கூறப்பட்டுள்ளது. தண்ணீரில் உள்ள நுண்கிருமிகளை வெள்ளி தூய்மைபடுத்துவதால் பாலை வெள்ளிப் பாத்திரத்திலிட்டு அருந்தி வந்தால் பாலின் மூலம் பரவும் நுண்கிருமிகள் அழிக்கப்படும்.

1970 ல் பூனாவைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் மரு.காட்போல் (Dr.GODBOLE) அவர்கள் ஒரு தாம்பிரப் பாத்திரத்தில் நீரை எடுத்து அறையின் வெப்பநிலையில் வைத்தார். இதே போன்று பித்தளை.அலுமினியம்.எவர் சில்வர்.கண்ணாடி போன்ற பல்வேறு வகைப்பட்ட கலன்களிலும் நீரை வைத்தார்.நீரில் உள்ள கோலிஃபார்ம் (Coliform) வகைப் பாக்டீரியாக்கள் (Bacteria) முற்றிலும் அழிந்திருப்பதைக் கண்டார். மற்ற பாத்திரத்தில் குறிப்பிடும் படியாக மாற்றம் நிகழவில்லை என்பதையும் கண்டு உணர்ந்தார்.உலக நல நிறுவனம் (WHO) குடிதண்ணீருக்கான இலக்கணம் என்று கூறும் போது குடிதண்ணீரில் கோலிஃபார்ம் பாக்டீரியா (Coliform Bacteria) ஒன்று கூட இருக்கக் கூடாது என்பது பல்வேறு விதிகளில் ஒன்று ஆகும்.ஏனென்றால் கோலிஃபார்ம் பாக்டீரியாஅதிக அளவு உள்ள மலின நீரை பருகினால் குடல் மாசயனி சுரம் (Typhoid) , வயிற்றுப்போக்கு நோய்களால் துன்பப்பட நேரிடும்.தாம்பிரப் பாத்திரம் தண்ணீரில் உள்ள கோலிஃபார்ம் பாக்டீரியா முழுவதையும் அழித்து நோய்களிலிருந்து நம்மை காக்கிறது என்று அறிந்து கொள்ள முடிகிறது.

ஆய்வின் முடிவின் Dr.காட்போல் (Dr.GODBOLE) தாம்பிரப் பாத்திரத்தில் 4 முதல் 6 மணி நேரம் தண்ணீரை வைத்திருந்து பின் பயன்படுத்துதல் சிறப்பு என்றார். நம்முடைய கிராமங்களில் அதிகாலை 6 மணிக்கு எழுந்து புளியிட்டுக் கழுவிய தாம்பிர பாத்திரங்களில் குளங்களில் உள்ள நீரை எடுத்து வந்து மதியம் 12 மணிக்குப் பயன்படுத்துகிறார்கள்.தமிழர்களின் ஒவ்வொரு நிகழ்விலும் மிகப் பெரிய அறிவியல் அற்புதங்கள் பொதிந்து மிளிர்கின்றன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

50

பொன்விழா சிறக்க
வாழ்த்துகிறோம்..

Dr.G.V.SELVAGANESAN, M.D(s)
Asst.Medical Officer (Siddha)
Govt.Head Quarters Hospital,
Tenkasi.

தன்வந்திரி
சித்த மருத்துவமனை

வைரஸ் மரு (WARTS)

சிகிச்சைக்கு முன் - பின்

மரு (SKIN TAG)

சிகிச்சைக்கு முன் - பின்

மச்சம் (MOLE)

சிகிச்சைக்கு முன் - பின்

- மரு, மச்சம், கால் ஆணி முழுமையாக அகற்றப்படும்.
- தோல் நோய்கள் பூரண குணம்.
- சிறுநீரக கற்கள் 1 முதல் 2 வார மருந்தில் அகற்றப்படும்.

175-A, மதுரை ரோடு,
ஹோட்டல் கிங்ஸ் பேலஸ் அருகில்,
தென்காசி.
திங்கள் முதல் வெள்ளி வரை
நேரம்: மதியம் 12.30-2pm மாலை:6-9pm

Cell
98407 23876
73059 98515

போலீஸ் குவாட்டர்ஸ் பின்புறம்,
மார்கெட் ரோடு,
பாளையங்கோட்டை.
சனிக்கிழமை மட்டும்
நேரம்: மாலை 6-9 pm

வாழ்த்தின் மகிழ்வில்...!

Dr.M.Haja Mohideen.M.D(S)
KMA Siddha Varma Clinic,
Perumal Kovil Street,
Tenkasi.

Dr.P.Vijay Kumar.M.D(S)
AVP Siddha Hospital,
Kunjandiyoor,
Mettur Dam.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்தம்-50
பொன்விழா
25.01.2015 அன்று

திரு. முத்துக்கருப்பன் எம்.பி
திருமதி. விஜிலாசத்தியானந்த் எம்.பி
திருமதி. வசந்தி முருகேசன் எம்.பி
திருமதி. முத்துசெல்வி எம்.எல்.ஏ
வனஅலுவலர். ஜெயின்அலாவுதீன்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

50க்கும் மேற்பட்ட மரபு வழி சித்த மருத்துவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு

இவ்விழா ஏற்பாடு.

மரு. **வெ.செல்வராஜ்**

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

HERBAL MAGIC

மரு. மதன் குமார் குழுவினருடன்...

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

CULTURAL
கலைநிகழ்ச்சிகள்

CULTURAL
கலைநிகழ்ச்சிகள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ESTD 1945



Dr.S.தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., M.D., FICA., P.G, Geriatrics

70th Year

தன்வந்திரி நிலையம்™
ஆயுர்வேத வைத்தியசாலை

- 100% பக்கவிளைவு இல்லாத, அறுவை சிகிச்சை இல்லாத மூலிகை வைத்திய முறை.
- நாட்பட்ட தீராத வியாதிகளான மூட்டுவாதம், சக்கரை நோய், குழந்தையின்மை, மூலநோய், பக்கவாதம் போன்ற பலநோய்களுக்கு வைத்தியம் செய்யப்படும்.
- நாட்பட்ட நோய்களுக்கு, பஞ்சகர்ம சிகிச்சை முறையும், தங்கி சிகிச்சை பெறும் வசதியும் உண்டு.
- பிசியோதெரபி மற்றும் லேப் வசதியும் உண்டு.

Dr.R.DEEPA SRI
B.S.M.S.,Rg no.4340A

Dr.T.DEVI SARAVANYA
Rg.no.4369A

Dr.B.DURGA DEVI
B.S.M.S.,Rg no.4533

Dr.S.A.ELSIA
B.S.M.S. Rg.no.4336

கிளை
84 C, கரிக்காடு, ஸ்டேட் பேங்க் காலனி,
பட்டுக்கோட்டை-614601,
தஞ்சாவூர் (Dt).
☎: 04373 236626
: 9444204202

தலைமை மருத்துமனை
130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர்,
மதுரை-625 003.
☎: 0452 - 2692647, 2692648,
Fax: +91 - 452 - 2693645.
Email: drkarthicvel@yahoo.com
Website: www.dhanvanthri.info

கிளை
16/25, சந்தான கிருஷ்ணன் தெரு,
நேரு நகர், ஹஸ்தினாபுரம் ரோடு,
MIT கேட் அருகில்,
குரோம்பேட்டை, சென்னை-600 044.
☎: 044-22230889, 42876838.

" LET ALL NOBLE THOUGHTS COME TO US FROM DHANVANTHRI "

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழினம் உலகிற்கு வழங்கிய அறிவுக்கொடை

பூதவாதம், தேகவாதம்

பேராசிரியர் க.நெடுஞ்செழியன்

இந்த உலகம் எப்படித் தோன்றியது ? உலகம் ஐம்பூதங்களின் சேர்க்கையால் தோன்றியது என விடை தந்தனர். அப்படி விடை தந்தவர்கள் பூதவாதிகள் என அழைக்கப்பெற்றனர். பூதங்களின் சேர்க்கையினால் உலகம் தோன்றியது என்பதோடு ஒவ்வொரு பூதமும் அதற்குரிய அணுக்களால் உருவானது என்றும் விளக்கினார். அந்த அணுக்களின் இயல்பையும், செயற்பாட்டையும் பால் - கீம் 2 வகைப்படுத்தினார். இவ்வாறு ஐம்பூதங்களின் இயல்பை, அவை தோன்றுவதற்குக் காரணமாக இருந்த அணுக்களின் தன்மைகளை அவ்வணுக்கள் தோன்றுவதற்குக் காரணமாகிய அணுக்கருவை அக் கருநிலையில் தோன்றிய பெருவெடிப்பை, அப் பெருவெடிப்பின் முன்னும் பின்னும் இருந்த அண்டவெளியின் தோற்றத்தையெல்லாம் அறிவார்ந்த நிலையில் விளக்கினார். அத்தகைய அறிவியல் அறிஞர்கள் ஐந்திரம் நிறைந்ததாகப் போற்றப் பெற்றனர். தொல்காப்பியர் அத்தகைய அறிஞர்களுள் ஒருவர். அதனாலேயே அவரை, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பனம்பாரனார் பாராட்டியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்தில் 'முழுமுதற் கடவுள்' என்ற கருத்து உருக்கொள்ளவில்லை. திணைகளுக்குரிய கருப்பொருள்களுள் பத்தோடு பதினொன்றாகவே தெய்வம் இடம் பெற்றது. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு தெய்வமாக மக்கள் வாழ்க்கைச் சூழல்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது என்பதை. 'மாயோன் மேயக் காடுறை உலகம்' எனத் தொடங்கும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா விளக்கும்.

வளமை வழிபாட்டுக்குரிய தந்திரச் சடங்கு முறைகளுக்கு உரியனவாகவும் கருதப்பட்டன. தந்திரச் சடங்குகளின் அடிப்படை நோக்கம் இயற்கையின் எல்லை மீறிய ஆற்றல்களை மனித ஆற்றல்களுக்கு முன்னே கொண்டு வந்து நிறுத்த முடியும் என்பதுதான். எனவே திணைகளின் கருப்பொருள்களுள் ஒன்றான தெய்வம், மனித ஆற்றல்களுக்குக் கட்டுப்பட்ட ஒன்று என்பது புலனாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

முதற்பொருள்:

முதற்பொருள் பற்றிய தொல்காப்பியரின் கூற்று அவரை வானியல் அறிஞராகக் காட்டும்.

முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்

இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே என்பது தொல்காப்பியம். நிலமும், பொழுதும் முதற்பொருள் எனக் கூறாது. அவற்றின் இயல்புகளை முதற்பொருள் எனக் கூறுவது வியப்பாகும். இந்த நூற்பாவிற்கான விளக்கங்கள் ஐன்ஸ்டின், ஸ்டிபன் ஆக்கிங் முதலான அறிஞர்களின் சார்பியல் கோட்பாடாகவும், அண்டவியல் கோட்பாடாகவும் விரியும். நிலம் பொழுது அதாவது இடம், காலம் என்பவை வேறு வேறு அல்ல, அவை இரண்டும் ஒன்றே, ஒரு நிகழ்வுதான் இடம் என்பதாகும். அந்த நிகழ்வை நேற்று நடந்தது, இன்று நடக்கின்றது, நாளை நடக்கும் என வகைப்படுத்துவதே காலம். எனவே நிகழ்ச்சி என்பது இல்லாமற் போனால் காலம் என்பதும் இல்லாமற் போய்விடும் என்பது ஸ்டீபன் ஆக்கிங் அவர்களின் ஆய்வு முடிவாகும். இம்முடிவுகளே தொல்காப்பியத்தில்

கரும நிகழ்வே இடமென மொழிப என்றும்,

'ஐந்திரம் நிறைந்தோ ராகிய' தொல்காப்பியரின் இவ்வானவியல் கொள்கையைப் போன்றே,

ஓரறி வுயிரே அவற்றோடு உடம்பே எனத் தொடங்கும் தொல்காப்பியப் பொருளதிகார, உயிரியல் நூற்பா, உயிர்களின் படிமுறைக் கோட்பாட்டின் விளக்கமாகும். வான் இயற்பியல் (Astrophysics) படிமுறைக் கோட்பாடு (Theory of Evolution) ஆகியவற்றை விளக்கும் தொல்காப்பியத்தில் எந்த இடத்திலும் கடவுளின் படைப்போ, கடவுளின் ஆற்றலோ பேசப்பட்டவில்லை. இதுவே தொல்காப்பியத்தின் பழமைக்குச் சான்றாகும். கடவுள் பற்றிய கருத்து தொல்காப்பியத்தில் இடம்பெறாமைக்கு நாம் முன்னர்க் கூறிய, முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனை அக்காலத் தமிழகத்தில் - ஏன் ? அக்கால இந்தியாவிலேயே தோன்றவில்லை என்பது தான் . அப்படியானால் அக்கடவுள் பற்றிய சிந்தனை எப்போது தோன்றியது?.

பிரம்மம் :

வேதங்களின் தொடக்க நாள்களில் முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனை இல்லை. ஆனால் காலப்போக்கில்தான் அத்தகைய சிந்தனை வளர்ந்தது. வேதங்களில் சிறுபொறியாக இருந்த பிரம்மம் இந்தியச் சிந்தனை மரபில் செழித்து வளர்ந்து நின்ற அறிவியல் கூறுகளை எல்லாம் எரித்துத் தீய்த்த காட்டு நெருப்பாய் மாறியது. இது பற்றிய பிரேம்நாத் பசாசின் கருத்து நம் சிந்தனைக்கு உரியது.இவ்வாறு பொறியாக இருந்து காட்டுத் தீயாக மாறிய பிரம்மத்தின் பக்கவிளைவுதான் கருமக் கோட்பாடாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கருமம் :

வைதிகத்தின் அடிப்படைக் கோட்பாடாகக் கருமம் பற்றிய சிந்தனை இடம் பெற்றது. ஒரு மனிதனின் உயர்வு, தாழ்வு , நன்மை - தீமை முதலானவை அவன் முற்பிறவியில் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்பவே அமைகின்றன என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இக்கருத்து உருவாக்கப்பட்டது. மேலோட்டமாகப் பார்த்தால் அந்த நம்பிக்கையில் தவறேதும் இல்லை என்பது போல் தோன்றும். ஆனால் உண்மை அப்படி இல்லை. ஒரு மனிதன் தான் செய்த தீய கருமங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமெனில் பல வகையான வேள்விச் சடங்குகளைச் செய்ய வேண்டும்.

வைதிகத்தின் பிரம்மத்தையும் கருமத்தையும் எதிர்க்க வேண்டிய சமூகத் தேவை ஏற்பட்டது. அச்சமூகத் தேவை அறிவுப் புரட்சியாக மாறியது. அப்புரட்சியை முன்னெடுத்துச் சென்றவர் கபிலர் என்ற அறிவர் ஆவார். தொல்காப்பியர் போற்றி வளர்த்த ஐந்திரமரபு எனும் அறிவியலுடன் வைதிகத்தின் கடவுட் கோட்பாட்டையும், வேள்விச் சடங்குகளையும் எதிர்த்தல் எனும் இரண்டையும் இணைத்து, அறிவியலைச் சமூகவியலாக மாற்றியவரும் அக்கபிலரே ஆவார்.

எண்ணியம் :

ஐந்திர மரபின் அறிவியல் கூறுகள் அனைத்துடன் கடவுள் மறுப்பு, வேள்வி மறுப்பு இவற்றை இணைத்துக் கபிலர் உருவாக்கிய புதிய கோட்பாடு எண்ணியம் என அழைக்கப்பட்டது. 24 எனும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அணுவியல், உயிர் இயங்கியல் இவற்றை 24 என வகைப்படுத்தியதால் அதற்கு எண்ணியம் எனப் பெயரிட்டனர். இதனையே வடமொழியாளர் சாங்கியம் என்றனர். சாங்கியம் என்ற வடமொழிச் சொல்லிற்கு 'எண்கள்' என்பது பொருளாகும்.

'துன்பங்களுக்குக் காரணம் ஆசைகள். அதனால் ஆசைகளை ஒழிப்பதே துன்பத்தை நீக்குவதற்கு வழியாகும்' என்பது எண்ணியத்தின் அடிப்படை. முழுமையான அறிவியல் மரபைப் போற்றிய தன்மையை வீடு பேற்றைப் பேசியது ஒரு புதிராகும். வைதிகத்தின் வேள்விப் பண்பாட்டை எதிர்த்து நின்ற எண்ணியத்திலிருந்தே பின்னாளில் கௌதம புத்தரால் பௌத்த சமயம் உருவானது.

உலகாயதம் :

ஐந்திர மரபில் வீடு பேற்றை இணைத்ததை ஏற்காதவர்கள் 'உலகாயதம்' எனும் கோட்பாட்டை உருவாக்கினர். உலகாயதம் என்ற சொல் உலகு + ஆய்தம் எனப் பிரியும். உலகைப் பற்றிய நன்மையான

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆய்வு என்பது அதன் பொருளாகும். ஓய்தல்,ஆய்தல், நிகழ்த்தல் எனும் சொற்கள் உள்ளதன் நுணுக்கம் எனும் பொருளைத் தருவன என்பது தொல்காப்பியம். அந்நூற்பாவில் உள்ள 'ஆய்தல்' எனும் சொல் 'அம்' விகுதி பெற்று ஆய்தம் ஆகும். அதனால் உலகாய்தம் எனும் சொல் 'உலகைப் பற்றிய நுண்ணாய்வு' எனும் பொருள்தரக் காணலாம்.

எண்ணியக் கோட்பாட்டின் வைதிக எதிர்ப்பை விட உலகாய்தர்களின் வைதிக எதிர்ப்பு மிகவும் கடுமையானதாகும். அவர்களின் தருக்கவியல் புலமையும், சொல்லாளும் திறனும் மக்களிடம் பெருஞ்செல்வாக்கைப் பெற்றன. உயிரின் இயற்கை இன்பநாட்டம் எனும் தொல்காப்பியக் கருத்து உலகாய்தர்களால் இன்ப நாட்டம் எனும் கோட்பாடாக மலர்ந்தது. ஐரும்பெரும் பூதங்களால் ஆன மனித உடம்பில் உயிர் எப்படித் தோன்றியது? இக்கேள்விக்கு உலகாய்தர்கள், 'உயிர் என்பது ஒரு வேதியியல் மாற்றம் தாதகிப்பூ, வெல்லம் முதலான பொருள்களை உளறவிட்டால் 'மது' பிறத்தல் போல நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனம் ஐம்பூதங்களின் சேர்க்கையால் தோன்றிய ஒரு வேதியியல் மாற்றமே உயிர்' என மக்கள் அறிந்த உவமையோடு அதனை விளக்கினர்.

தேவங்களின் அடிப்படையில் உருவாகி, தருமசாத்திரங்களால் சட்ட விதிகளாக்கப்பட்டு, சுரண்டலுக்கு காரணமாக இருந்த, கருமக் கோட்பாட்டையும், சிரார்த்த சடங்குகளையும் உலகாய்தர்கள் மிகவும் கடுமையாக எதிர்த்தனர்.

சொர்க்கம் என்றும் மோட்சம் என்றும் பேசுவது எல்லாம் வெறும் வீண்பேச்சு, மறு உலகத்திற்குப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளும் ஆன்மா- உயிர் என்று ஏதுமில்லை. வர்ணாசிரம தருமங்கள் என்று விதிக்கப்படும் கர்மங்கள் யாவும் முதலானவை ஏதோ பயன் அளிப்பதாகக் கூறுவதும் தவறே. அவை அப்படி எந்தப் பயனையும் விளைவிப்பதில்லை.

சிராத்தம் செய்வது இறந்து போனவர்களுக்கு நன்மையை உண்டாக்கும் என்பது உண்மையானால் அணைந்து போன விளக்கில் எண்ணெய் ஊற்றினால் அது மீண்டும் சுடர்விட்டு எரியுமே !

பெருவெடிப்பு (Big Bang) கருந்துளை (Black Holes)முதலான அண்டவியல் கோட்பாடுகளையும், ஓரறிவு முதல், ஆறறிவு வரையிலான திரிவாக்கக் கோட்பாடுகளையும், மருத்துவம் முதலான துறைகளையும் அடிப்படையாகக் கொண்ட அறிவியல் மரபுகளை ஐம்பூதக்கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கினர். தமிழகத்தில் ஐம்பூதக்கோட்பாடு செழித்து நின்ற போது கிரேக்கம் அறிவியலின் தொடக்க நிலையில் வட இல்லை. கிரேக்கத்தின் மெய்யியல் அறிஞர்களாகத் திகழ்ந்த தேல்சு முதலானோர், ஐம்பூதக் கோட்பாட்டை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அறிந்திருக்கவில்லை. இப்பேரண்டத்தின் தோற்றத்திற்குத் தண்ணீரே அடிப்படை என்றார் தேல்சு. இவரின் மாணவராகிய அனாக்சிமிண்டர் (கி.மு.610-546) பொருள்களுக்கு இடையிலான முரண்பாடுகளே (நீர்-நெருப்பு, இன்பம் - துன்பம், கூடுதல் - பிரிதல்) இப்பேரண்டத்திற்குக் காரணம் என்றும், தனித்த எந்த ஒரு மூலப்பொருளும் காரணம் இல்லை என்றும் கூறினார்.

அனாக்கி மெனசு (கி.மு.588-525) காற்று தான் அனைத்திற்கும் காரணம் என்றார். எராக்கிளிடசு (கி.மு.535-475) நெருப்பே அனைத்திற்கும் காரணம் என்றார்.

கிரேக்கத்தின் தொடக்கநிலை மெய்யியல் அறிஞர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்த நிலையில், அவர்களின் வழிவந்த பித்தாகோரசு, டெமாக்கிரட்டசு, எம்பிடாக்கிள்சு முதலான அறிஞர்கள் தமிழகம் வந்துள்ளனர்.

நைல் நதியின் குறுக்கே சமவெளிகளில் அணைகட்டும் தொழில்நுட்பத்தைத் தமிழர்களிடமிருந்தே எகிப்தியர்கள் கற்றுக் கொண்டனர் என்பதை ஜெர்மானிய பொறியியல் அறிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே உலக அறிவியலின் ஊற்றுக்கண்ணாக, நாற்றாங்காலாக, அறிவுப் பண்ணையாக விளங்கிய மண் தமிழகமே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அந்த அறிவு மரபே ஐந்திரம். அதனின்று கிளைத்த கிளைகளே எண்ணியம், உலாகாய்தம் முதலியன. அறிவுக்கான விடுதலையை முன்னெடுத்துச் சென்ற இவர்களின் சிந்தனைத் தாக்கங்களே சங்க இலக்கியங்கள்.

நோனி :

தென்கிழக்கு ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த மூலிகை. இதன் தாவரவியல் பெயர் MORINDA CITRIFOLIA இது அமெரிக்காவின் ஹவாய் மற்றும் பிற பசிபிக் தீவுகளில் வாழ்ந்த மக்களின் மிகச் சிறந்த உணவாக இருந்திருக்கின்றது. வறட்சிக் காலங்களில் இது மிகச் சிறந்த பஞ்சந்தாங்கிப் பயிராகவும் செயல்பட்டிருக்கிறது. இந்த நோனியிலிருந்து பெறப்படும் கரைசல்தான் இன்று உலகம் முழுவதும் NONI என்ற பெயரில் விற்கப்படுகிறது. நோனியை சித்த மருத்துவத்தில் வெள்ளை நுணா என அழைக்கப்படுகிறது.

பேயத்தி : நமது கல்லூரி ஜெனரேட்டர் அறையின் அருகே இம்மரம் உள்ளது. இதன் தாவரவியல் பெயர் Ficus Hispida

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மருத்துவ வணிகமும் மக்கள் நலமும்

மரு.ரவீந்தரநாதன்

1987இல் அனைத்திந்தியச் சமூகத்திற்கான மருத்துவர்கள் மாநாடு நெல்லையில் நடத்தினேன். இதில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் பாளையங்கோட்டை சித்த மருத்துவக்கல்லூரிகள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்த மருத்துவ முறையை ஏற்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைத்தோம்.

மருத்துவச் சித்தர்கள் பொருள் முதல் வாதம் பற்றிக் குறிப்பிடுகின்றனர். பொருள் முதல் வாதம் என்பது எல்லாம் பொருள் மயம். நவீன மருத்துவ வளர்ச்சிக்குப் பல்வேறு மருத்துவ முறைகள் அடித்தளமாக உள்ளன.

தற்காலத்தில் கண்டறியப்படும் அறிவியல் சாதனங்களான **Xray, ECG, CT Scan, MRI Scan** ஆகியவைகளைத் தனக்கானது என உள்வாங்கிக் கொள்கிறது. இது தவறான அணுகுமுறையாகும்.

நவீன மருத்துவம் பல மருத்துவ முறைகளின் உண்மைகளை உள்வாங்கி வளர்ந்திருக்கிறது. தமிழ் மருத்துவம் சிறந்தது. இதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல வேண்டியது இளம் தலைமுறை மரத்துவ மாணவர்களே, 2015 ல் **Health Policy** மூலம் மருத்துவ சிகிச்சைக்கு 630 கோடி அரசு செலவு செய்கிறது. 1983 ல் நலக்கொள்கையை இந்திய அரசு உருவாக்கியது.

3% Health Policy

20 % மருத்துவச் செலவை கட்டுப்படுத்தப்படுவதாக அரசு கூறியது. இடைகால பட்ஜெட்டில் 2500 கோடி நிதி குறைக்கப்பட்டது.

Right Health சட்டம் - ரஷ்யா நாட்டில் முதலில் அமல்படுத்தப்பட்டது.

இதனை கியூபா சிறப்பாகச் செய்தது. கடந்த 10 ஆண்டுகளில் 36 லட்சம் கோடி வரிசலுகை பெரிய நிறுவனங்களுக்கு வரிவிலக்கு செய்தது. தற்போது கல்விக்கே நிதி வசூல் செய்யப்படுகிற காலகட்டத்தில் உள்ளோம்.

தற்போது 80- 85% **OP** தனியார் நிறுவனங்கள், 60% தனியார் உள்மருத்துவமனை பிரிவு உள்ளது.

நல்வாழ்வுத்துறை மருத்துவக் காப்பீட்டிற்கு ஆலோசனை செய்ய அம்பானி, பிர்லா, **Corparate Hospitals** உடன் சேர்ந்து அவர்களுக்கு சலுகை வழங்கி உள்ளது.

கிராமத்தில் மருத்துவமனை தொடங்கினால் வரிச்சலுகை 5 ஆண்டுகளுக்கு வழங்குவதாகவும் 100 படுக்கை உடன் நீண்ட முதலீடு செய்தால் முழுமையான வரிசலுகைகள் வழங்கப்படும் என்றும் தேசிய சுகாதார செயலகம் தெரிவித்தது.

2008ல் பொருளாதார மருந்துகள், மருத்துவத்தில் லாபம், **Medical industry, Health industry** இவற்றில் பெரிய முதலீடு செய்யப்பட்டு இதில் சேவை பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

2020 - ல் 20-40 பில்லியன் டாலர் உயர்ந்துள்ளது. தனியார் கார்பரேட் மருத்துவமனை வளர்ந்துள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரசு மருத்துவமனையில்

CT கட்டணம்	-	5000லிருந்து 1000 ஆகக் குறைப்பு
MRI கட்டணம்	-	10,000 லிருந்து 3000 ஆகக் குறைப்பு
ECG கட்டணம்	-	100 லிருந்து 50 ஆகக் குறைந்தது

அரசு மருத்துவமனை வருமானம் ஈட்டும் மையமாக வளர்ந்து வருகிறது.

தரமான சிகிச்சை என்பது அமெரிக்கா பாணியில் மருத்துவக் காப்பீடு மட்டுமே. மற்றும் 1995 இல் இலவச சிகிச்சை தேர்ந்தெடுக்கப்பட்ட **PHC** ல் சிகிச்சை வழங்கப்பட்டது.

கல்வி, மருத்துவம், நீர்வளம், நலவாழ்வு, மின்சாரம் இந்த 5 சேவைத் துறையை வியாபாரமாக்குதலை அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

தமிழகத்தில் TT தடுப்பூசி மட்டும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் TT தடுப்பூசிக்குப் பணம் செலுத்தப்படுகிறது.

1992இல் தனியார் பொதுக் கூட்டு மூலம் 108 ஆம்புலன்ஸ் வசதி செய்யப்பட்டு உள்ளது. தனியார் பொதுக் கூட்டில் அரசுக்கு 95% செலவும் தனியார் 5 % சேவை கமி-னும்.

தனியார் மயமாக்கல் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள தொடர்பு குறைக்கப்படுகிறது.

பொதுவாகச் சேவைத் துறைகள் அனைத்திலும் வணிகமாக்கல் குறைக்கப்பட வேண்டும்.

பல் துலக்கும் பேஸ்ட் :

ஃப்தலேட்ஸ் (Phthalates) நாம் தினசரி உபயோகப்படுத்தும் உப்பு இருக்கா, இல்லையா போன்ற பல் துலக்கும் பேஸ்ட்களில் கலக்கப்படும் பொருள் இது. இது ஆண்களின் விந்தணுவின் உற்பத்தி அளவை குறைக்கிறது, இதனால் மலட்டுத்தன்மை ஏற்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவை தமனிகளை கடுமையாக பாதிக்கின்றன எனவும் கூறப்படுகிறது. இப்போது சிறுவயதினருக்கே ஏற்படும் உயர் ரத்த அழுத்தத்திற்கு காரணமாகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரசு மருத்துவமனையில்

CT கட்டணம்	-	5000லிருந்து 1000 ஆகக் குறைப்பு
MRI கட்டணம்	-	10,000 லிருந்து 3000 ஆகக் குறைப்பு
ECG கட்டணம்	-	100 லிருந்து 50 ஆகக் குறைந்தது

அரசு மருத்துவமனை வருமானம் ஈட்டும் மையமாக வளர்ந்து வருகிறது.

தரமான சிகிச்சை என்பது அமெரிக்கா பாணியில் மருத்துவக் காப்பீடு மட்டுமே. மற்றும்

1995 இல் இலவச சிகிச்சை தேர்ந்தெடுக்கப்பட்ட PHC ல் சிகிச்சை வழங்கப்பட்டது.

கல்வி, மருத்துவம், நீர்வளம், நலவாழ்வு, மின்சாரம் இந்த 5 சேவைத் துறையை வியாபாரமாக்குதலை அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

தமிழகத்தில் TT தடுப்பூசி மட்டும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் TT தடுப்பூசிக்குப் பணம் செலுத்தப்படுகிறது.

1992இல் தனியார் பொதுக் கூட்டு மூலம் 108 ஆம்புலன்ஸ் வசதி செய்யப்பட்டு உள்ளது. தனியார் பொதுக் கூட்டில் அரசுக்கு 95% செலவும் தனியார் 5 % சேவை கமி-னும்.

தனியார் மயமாக்கல் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள தொடர்பு குறைக்கப்படுகிறது.

பொதுவாகச் சேவைத் துறைகள் அனைத்திலும் வணிகமாக்கல் குறைக்கப்பட வேண்டும்.

பல் துலக்கும் பேஸ்ட் :

ஃப்தலேட்ஸ் (Phthalates) நாம் தினசரி உபயோகப்படுத்தும் உப்பு இருக்கா, இல்லையா போன்ற பல் துலக்கும் பேஸ்ட்களில் கலக்கப்படும் பொருள் இது. இது ஆண்களின் விந்தணுவின் உற்பத்தி அளவை குறைக்கிறது, இதனால் மலட்டுத்தன்மை ஏற்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவை தமனிகளை கடுமையாக பாதிக்கின்றன எனவும் கூறப்படுகிறது. இப்போது சிறுவயதினருக்கே ஏற்படும் உயர் ரத்த அழுத்தத்திற்கு காரணமாகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தாமிரபரணியின் இன்றைய நிலை

N.காஜா மைதீன்

தாமிரபரணி பாதுகாப்பு இயக்கம்

1982 ல் - தண்பொருநை பாதுகாப்பு இயக்கம்

1992 ல் - தாமிரபரணிப் பாதுகாப்பு இயக்கம்

2003 ல் - சுற்றுப்புறப் பாதுகாப்பு இயக்கம்

இமயமலையில் 10.500 அடிவாரத்தில் தமிழ் பேசிய ஒரே தமிழன் பெருமையுடனும், பொதிகை மலையின் 5500 அடி உயரத்தில் ஆதிவாசிகளுடன் மூலிகை ஆராய்ச்சி செய்தேன்.

என்னுடைய ஆய்வுகளுக்குத் தமிழ் அறிஞர்களே முக்கியக் காரணம். ஜீவநதியான தாமிரபரணியின் இன்றைய நிலை பற்றி 1982 முதல் தாமிரபரணி உற்பத்தி ஆய்வை மேற்கொண்டேன். 9500 ஆண்டுகளுக்கு முன்னர் குமரிக்கண்டம் என்ற லெமூரியா கண்டம் அழிந்தது. தாமிரபரணி ஆறு 12 வேறு பெயர்களை உடையது.

தண்பொருநை - இலங்கையில் மாந்தோப்பு வரை சென்று வந்துள்ளது. தாமிரபரணி உற்பத்தி ஆகும் இடங்கள் 2 அவை நெய்யற்றங்கரை, பூங்குளம். தாமிரபரணி 6 மாவட்டங்களுக்குத் தண்ணீர் வசதியைச் செய்துள்ளது. 3000 மூலிகைகள் காணப்படும் பொதிகை மலையின் 100 அடி உயரமான வான தீர்த்தத்திலிருந்து மேல் 26 கி.மீ தொலைவில் பூங்குளம் உள்ளது. வான தீர்த்தத்திலிருந்து சுனை பகுதி ஊற்று உள்ளது. இதனை தொடர்ந்து கல்யாணத் தீர்த்தம், அகத்தியர் அருவி. இவற்றை தாமிரபரணி கடக்கிறது.

இதனைத் தொடர்ந்து வி.கே.புரம் மில்லின் கழிவுகளால் மாசுபடுத்தப்பட்டு அம்பை, கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி ஆற்றுப்படுகை வழியாக நெல்லையில் மாநகராட்சிப் பகுதிகளுக்கு உட்பட்ட 21 இடங்களில் பிரிந்து நெல்லை நகரை அடைகிறது. இங்கு வரும்போது நஞ்சு கலந்த நீராகவும், காட்டாமணக்கு, அமலைச் செடி, பன்றி மேய்தல் இவற்றால் மாசுபடுத்துதல் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து வாகனக் கழிவுகள் வண்ணார்பேட்டையிலும், கொக்கிரகுளத்தில் மனித கழிவுகளாலும் பின்னர் நகரம் முதல் மீனாட்சிபுரம் Aravinth Eye Hospital சிந்துபூந்துறை KTC நகர்/பேருந்து டெப்போ என்று தூத்துக்குடி, ஆழ்வார் திருநகரியைக் கடந்து ஏரலை அடைகிறது.

தாமிரபரணி குறுக்கே அணை தடுப்பு கட்டுவது மிக அவசியமாகும். இறுதியாக புன்னை காயலில் 3 பிரிவாக முடிவில் கடலில் கலக்கிறது நம் தாமிரபரணி சீவநதி. குறிப்பாக ஆழ்வார்திருநகரியில் தடுப்பு அணைகள் கட்டுவது அவசியமாகும். நாம் அருந்தும் பாட்டில் தண்ணீரில் -33 வேதிப்பொருள் உள்ளதால் ஆண்மைக் குறைவை உண்டாக்குகிறது. மண்பானை நீர் குளிர்ச்சியைத் தரும். செம்புப் பாத்திர நீர் உடலுக்கு மிக நல்லது.

நமக்கு நீர் ஆதாரமாக உள்ள சீவநதி தாமிரபரணியைக் காப்பாற்ற அரசும், மக்களும், அதிகாரிகளும் விழித்தெழ வேண்டும். அப்போது தான் நாம் சீவநதியான தாமிரபரணியை அழியாமல் மாசுபடுத்தாமல் காக்க முடியும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கால்நடை சித்த மருத்துவத்தின் இன்றைய தேவை

மரு.புண்ணியமூர்த்தி, கால்நடை மருத்துவர்
பாரம்பரிய மருத்துவ ஆராய்ச்சி & பயிற்சி மையம்
தஞ்சாவூர்

கால்நடை மருத்துவப் பட்டம் பெற்றும் தற்போது பாரம்பரிய மருத்துவ ஆராய்ச்சி பயிற்சி மையத்தை உருவாக்கி நடத்தி வருகிறேன். கடந்த 12 ஆண்டுகளாக ஆங்கில மருந்துகள் சாதாரணப் பூச்சிக்கொல்லி, உயிர்க்கொல்லி மருந்துகளைத் தொடாமல் மூலிகை சார்ந்த மருத்துவப் பொருள்களைக் கொண்டு கால்நடைகளுக்கு வருமுன் காக்கும், நோய்தீர்க்கும் மருத்துவம் செய்து வருகிறேன்.

தஞ்சையில் நிறுவப்பட்ட தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் உள்ள சித்த மருத்துவத்துறையில் உலக தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் பதிப்பான மாட்டுவாகடம் நூலைப் புரியாமல் படித்தேன்.பின்னர் 1997 ல் கனடா, அமெரிக்கா பயணம் மேற்கொண்டேன்.2001 - ல் மதுரையில் நடைபெற்ற பாரம்பரிய மருத்துவர் கூட்டத்தில் ஒரு பார்வையாளராகக் கலந்து கொண்டேன். அதில் நெல்லை பாராம்பரிய மருத்துவரின் அறிமுகம் கிடைத்தது. அப்போது மருந்து பற்றி கேட்டபோது அவர் சொல்லிய வார்த்தை மருந்து என்பது ஒருவேளை கொடுப்பது மருந்து எனக் கூறினார்.18 ஆண்டுகளாக ஆராய்ச்சியின் அடிப்படையில் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறுகிறேன்.

வேர்பாரு தழைபாரு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரே

இதன் மூலம் ஏக மூலிகை மருத்துவம் செய்து வந்தேன். பின்னர் நெல்லை கணபதி, மதுரை அய்யாத்துரைக் கோனார், மதுரை இளமாறன் போன்ற பாரம்பரிய மருத்துவர்களின் வழிகாட்டுதலின் மூலம் ஆராய்ச்சி மேற்கொண்டேன். மடிநோயைக் கையில் பிடித்து விட்டோம்.

அதற்கான மருந்து சோற்றுக் கற்றாழை சோறு 250 gm, மஞ்சள் 50 gm ல் சுண்ணாம்பு கொட்டைப்பாக்களவு கலந்து போட 24 மணிநேரத்தில் பூரண குணம் கிடைக்கும்.இதையே நான் பங்கேற்கும் கருத்தரங்குகளில் உறுதியாகக் கூறி வந்தேன். ஹியானா பானிபட்டில் இதைப்பற்றிப் பேசினேன்.இந்த மருந்து மூலம் E.Choli, Streptococci, Staphylococci க்கு எதிராகவும் Anti Microbial, Anti inflammatory immune modulator தந்துவங்களுக்கு உட்பட்டது.

பொதுவாக நாம் அறிவியல் என்ற பெயரில் சிந்திக்க மறுக்கிறோம். செயல்படுத்த தயங்குகிறோம். இந்த மருத்துவம் தமிழர் மருத்துவம். இதனை எளிமையாகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கும். நீங்கள் உங்கள் பலத்தை அறியவில்லை. **'வீறு கொண்டு எழ வேண்டும்'.**

சித்த மருத்துவர்களே, நீங்கள் அடங்கிக் கிடப்பதும், அடக்கப்படுவதும் நீண்ட நாள் முடியாது. கோமாரி நோயை தடுக்க, குணப்படுத்த கூடிய மருந்து சீரகம், மிளகு, வெந்தயம், மஞ்சள், பூண்டு, தேங்காய், நாட்டுச்சக்கரை என்ற எளிய மருந்து சிறப்பான பலனைத் தருகிறது. எனவே தற்போது Paracetamol, Diclofenac போன்றவற்றைத் தூர எறிந்துவிட்டு இயற்கையான மூலிகைப் பொருட்கள் மூலம் தரமான பால், முட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

வாழ்க தமிழ், வளர்க சித்த மருத்துவம் எனக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உணவு வணிகமும், பாரம்பரிய உணவுகளும்

மரு.கு.சிவராமன்

சித்த மருத்துவர், சமூக ஆர்வலர்

நம் கல்லூரிப் பொன்விழாவில் கலந்து கொண்டதைத் தாய் மடியில் இருப்பது போன்று உணர்கிறேன். சித்த மருத்துவம் என்றால் என்ன? என்று கேள்விக்கு முதல் திறவுகோல் பேரா.நெடுஞ்செழியன் அவர்களின் ஆசீவக தத்துவம் மேலும் சித்த மருத்துவத்தின் மீது மாற்றுச் சிந்தனையை உருவாக்கியவர் உலகத்தமிழ் மருத்துவக் கழகத்தின் தலைவர் மரு.மைக்கேல் அண்ணன் அவர்கள்தான். ஆசீவகமும் அணுவியலும் இதில் 21 தன்மைப் பண்புகளைச் சித்த மருத்துவத்தில் காணலாம். நாம் தத்துவங்களை மக்கள் மொழியில் சொல்ல வேண்டும். இயற்கை உணவு, பரிமாற்றம் பற்றியும், வணிக மயமாக்கல் என்பதற்கு எல்லாம் நாம் என்ன செய்யப் போகிறோம்?

தற்போது உலக அளவில் 95% வருமானம் மூன்று புற்றுநோய் மருந்துகள் மூலம் 20 மில்லியன் டாலர் பணம் கிடைக்கிறது. அயல் நாட்டினர் 720 தாவர நுண் பொருள்களுக்குக் காப்புரிமை வைத்திருக்கின்றனர். அடுத்து 5,10 ஆண்டுகளில் நாடு, மக்கள் சமூகம் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன? நீரிழிவுக்கு மணிசம்பா அரிசி பற்றி நோய் அணுகாவிதி ஒழுக்கத்தில் நீரிழிவை போக்கும், மெல்ல பசி எடுக்கும் என்ற கருத்து மூலம் Glycemic index அளவை ஆராயத் தொடங்கினேன்.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரைச் சந்தித்து 440 வகையான அரிசியினைப் பற்றி அறிந்தேன்.புழுங்கல் அரிசியின் மஞ்சள் நிறம் Glycolic index அளவைக் குறைக்கிறது. மேலும் புழுங்கல் அரிசியின் சாப்பாட்டுடன் கீரை,புளிக்குழம்பு, ரசம் சேர்க்கப்படும்போது அதன் தன்மை மேலும் குறைகிறது. தினை அரிசி பொன்மஞ்சள் நிறத்தில் இருப்பதால் இதில் B.Carotene அதிக அளவு உள்ளது. 24000 மடங்கு அதிக அளவு பப்பாளி, முருங்கைக்கீரையில் உள்ளது. மேலும் பழுப்பு, பொன்மஞ்சள், கருஞ்சிவப்பு வகைச் சிறு தானியங்களில் பல சத்து பொருட்கள் உள்ளன.

விலைகுறைந்த மயோனைஸ் ஒவ்வொரு நாளும் அதிக அளவில் புற்றுநோயை உருவாக்குகிறது.மேலும் தொற்று நோய்களான Heart disease, Diabetic, Blood Pressure Arthritis,myocardial inflection இதனை கட்டுபடுத்த என்ன வழி? ஒரு காலத்தில் பொதுச்சுகாதாரக் கேட்டால் அம்மை, காசநோய், தொழுநோய் அதிக அளவில் இருந்தன. ஆனால் தற்போது உணவு, கலாச்சாரம் பழக்கவழக்கங்களின் மாறுபாட்டால் தொற்றுநோய் அதிக அளவில் உண்டாகிறது. 5,10 ஆண்டுகளுக்கு முன்பு ஓட்ஸ் இமயமலை திபெத் இடங்களில் காணப்பட்டது. இது குதிரைக்கு தேவையான உணவு. இது தயாரிப்பில் பல்வேறு வேதியியல் பணிகள் நடைபெற்றதால் இந்த உணவு உடலைக் கெடுக்கக் கூடிய தன்மை உடையதாக மாறி உள்ளது. ஆண்டிற்கு 6500 மெட்ரிக் டன் ஓட்ஸ் ஆஸ்திரேலியாவிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. வெந்தயத்தில் Beta glycine உள்ளது.

சித்த மருத்துவம் வாழ்வியலைக் கற்றுக் கொடுக்கக்கூடியது. நோய் அணுகாமல் இருக்க அறிவியல் பூர்வமாக ஆய்வை மேற்கொள்ள வேண்டும். கறந்த பால் மடிபுகா, பூத்த மலர் மரம்புகா. அறிவியல் பூர்வமாகச் சொல்ல வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவர்கள் வெண்துகில் அணிய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சித்த மருத்துவத்தில் வாழ்வியலைக் காணலாம்.ஆன்மிகம், அறிவியலைக் காணலாம். DDT பூச்சி தெளிப்பானால் பெண்களின் கரு முட்டை சிதைவு ஏற்படுகிறது. Cell Phone tower ஆல் சிட்டுக்குருவிகள் இனம் அழிந்து கொண்டிருக்கிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நமது பண்பாட்டில் மருத்துவம்

15.06.2003 அன்று SIDDHA FEST '05 விழாவில் பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்கள் (தமிழியல் துறைத்தலைவர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்) நிகழ்த்திய உரை.

பண்பாடு என்ற சொல்லை, நாம் மிகச் சுருக்கமாகவே புரிந்து கொண்டிருக்கிறோம். உண்மையில் பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்த ஒன்றல்ல. பண்பாடு என்பது ஒரு சமூகத்தினுடைய வெளிப்பாடு. ஒரு மக்கள் திரள், தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்ற முறை. சொல்லாலே, செயலாலே, கருத்தினாலே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற முறைக்குத்தான் பண்பாடு என்ற பெயர். நம்முடைய தெய்வங்கள்,இசை,உணவு, உடை, உடையை நாம் செய்கிற முறை, நம்முடைய உடையை நாம் உடுத்துகிறமுறை எல்லாமே பண்பாடு சார்ந்த அசைவுகள்தான்.

பண்பாடு என்பது ஒரு முழுமையான பொருள். இந்த முழுமை சார்ந்த பார்வை (Wholistic approach) இல்லாது போன காரணத்தினாலேதான், பண்பாடு பற்றிய நமது பார்வை மிகவும் பலவீனமாக இருக்கிறது.

பண்பாடு என்பது நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்ததாகும்.அது நமது மூச்சுக் காற்றைப் போல பண்பாடு என்பதை அது மீறப்படுகிறபோதுதான் உணர்கிறோம். இன்னொரு கட்டமாக, தேவைப்படுகிற போது பண்பாட்டை உணர்கிறோம். நம்முடைய வீட்டிற்குத் தண்ணீர் போதாது என்கிறபோது, நம்முடைய வீட்டிலே மண்ணிற்குக் கீழாகவே தண்ணீர் இருக்கிறதே என்று நமக்குத் தோன்றும். எனவே சமூகத் தேவை ஏற்படுகிறபோதும், நடைமுறை வாழ்க்கை மீறப்படும்போதும் நாம் பண்பாட்டைப் பற்றிக் கவலைப்படுகிறோம்.

உலகமயமாக்கல் என்ற சொல்லை ஏன் திரும்ப, திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்? உலகமயமாக்கல் என்பது, பொருளாதார நடவடிக்கை என்றுதான் பத்திரிக்கை படிப்பவர்களும், மெத்தப்படித்தவர்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே, உலகமயமாக்கல் என்பது ஒரு கலாச்சாரத்தாக்குதல், மிகப்பெரிய, தொன்மையான கலாச்சாரமுடைய தமிழ்மொழி பேசுகிற மக்கள் மீதும், இந்தியாவில் மற்றமொழி பேசுகின்ற மக்கள்மீதும் அது மூலதனத்தால் தொடுக்கப்பட்டிருக்கிற கலசாச்சார யுத்தம். இந்தக் கலாச்சார யுத்தத்தை நம்மீது தொடுத்திருப்பது யார் என்று கேட்டால் மிக, மிகப்பெரிய நம்பமுடியாத அளவுடைய பன்னாட்டு மூலதனமே அது.

ஒரு 150 ஆண்டுக்கால காலனிய ஆட்சியிலே எதை எதை எப்படிப் பார்க்க வேண்டும் என்கிற பார்வையை நாம் இழந்து போயிருக்கிறோம். அதன் விளைவாக நாம் இன்று எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றோம், இன்று இங்கு இருக்கிற, குறிப்பாக 25 வயதுக்குக் கீழாக இருக்கிற இளைஞர்கள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் உளவியல் எப்படிக் கட்டப்பட்டிருக்கிறது?எது எது தேவையோ. அதையெல்லாம் தேவையில்லை என்கிறது. எது எது மறக்கப்பட வேண்டியதோ அதையெல்லாம் நினைக்கப்பட வேண்டும் என்கிறது. எதையெல்லாம் மீற வேண்டும் என நினைக்கிறேமோ. அதெற்கெல்லாம் அடங்கிப் போக வேண்டுமென்கிறது. உண்மையிலே கலாச்சாரப் போலித்தனத்தால் நாம் கட்டப்பட்டிருக்கிறோம்.

பன்னாட்டு மூலதனம் என்பது. இப்பொழுது என்ன செய்கிறது என்றால், தான் எந்தெந்த நாடுகளிலெல்லாம் கொள்ளையடிக்கப் போகிறோமோ. அங்கெல்லாம் முதலில் பண்பாட்டு வன்முறையை ஏவுகிறது. வன்முறை என்றால் நமக்குத் தோன்றுவது கத்தி, கம்பு, A.K.47 ஆனால் பண்பாட்டு வன்முறை என்பது மிகவும் நுட்பமானது. இதற்கு உதாரணம் தரலாம் என நினைக்கிறேன். தினத்தந்தியிலே, சுக்குக்கு என்ன பயன், மிளகுக்கு என்ன பயன், தூதுவளைக்கு என்ன பயன் என்று ஒரு சின்ன இடத்திலே போடுவார்கள். அதற்கு என்ன பெயர் தருவார்கள் என்றால் 'பாட்டி வைத்தியம்' இதற்கு மரபுச் சொல் 'கை மருத்துவம்' அல்லது 'வீட்டுமருத்துவம்'. இச்சொல்லுக்குரிய பாரம்பரியமான அறிவுத்தொகுதி நம்முடைய வீட்டிலே பிறந்த எல்லாப் பெண் பிள்ளைகளுக்கும் பங்கிடப்பட்டிருக்கிறது. முந்திய சமுதாயத்தாலே. அதில் என் சகோதரிக்கும், என் மனைவிக்கும், என் மகளுக்கும் சிறுதுளி தெரியும்.

அதை ஏன் 'பாட்டி வைத்தியம்' என்று சொல்கிறார்களென்றால் அது ஒரு வன்முறையான நிகழ்வு. 'உங்கள் மேனியின் சிகப்பழகிற்கு' என்று சொல்கிறார்களல்லவா?அதுவும் ஒரு பண்பாட்டு வன்முறைதான. பாட்டி வைத்தியம் என்ற சொல்லே ஒரு பண்பாட்டு வன்முறைதான். எப்படியென்றால், பாட்டி எப்படி சமகாலச் சமூகத்தோடு இயங்கிச்செய்ய முடியாதோ, அதுபோல இந்த மருத்துவமும் சமகாலச் சமூகத்தோடு இங்கிச் செல்ல முடியாது. பாட்டி எப்படி பரிவோடு பார்க்கப்பட வேண்டியவளோ, அதுபோல இந்த மருத்துவமும் பரிவோடு பார்க்கப்பட வேண்டியது. அவ்வளவுதான்.இது என்னுடைய வைத்தியம். அது பாரம்பரியமான வேர்களை என்னிடத்திலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. நாம் மிக ஆழமான வேர்களைக் கொண்ட ஆலமரம் போன்றவர்கள். நமது பண்பாட்டு வேர்கள் மிக ஆழமானவை; நீளமானவை; மிகத் தொன்மையானவை. நமக்கு அருகில் இருக்கும் ஆதிச்சநல்லூர்ப் பண்பாட்டிலிருந்து நமக்குச் சில செய்திகள் தெரிகின்றன. அந்த மக்கள் தாய்த் தெய்வத்தை வணங்கி இருக்கிறார்கள். கி.மு.10ம் நூற்றாண்டு அளவில் வெண்கலம் பயன்படுத்தி இருக்கிறார்கள். உலோகவியலிலே அவர்களுக்கிருந்த அறிவு தொல்லியல் ஆய்வாளர்களுக்கெல்லாம் பெரும் வியப்பைத் தருகிற செய்தி.

இந்தியாவினுடைய மற்றப் பகுதிகளிலெல்லாம் இரும்புக்காலம் முடிந்து வெண்கலக்காலம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தொடங்குகிறது. ஆனால் இங்கு இரும்புக்காலம் தோன்றுகிறபோதே வெண்கலக்காலம் தோன்றியிருக்கிறது. தொல்லியல் ஆய்வாளர்கள், இந்தியாவிலே இரும்பை உருக்குகிற தொழில்நுட்பம் தாமிரபரணிக் கரையைப் போல் வேறு எங்கும் சிறந்ததாக இல்லை என்கிறார்கள். வெண்கலம் என்ற கலப்பு உலோகத்தைச் செய்கிற முறைக்கு அவர்கள் பயன்படுத்திய உலை நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்கள் பயன்படுத்திய. உலோகத்தை உருக்கி ஊற்றுகிற சுடுமண் குழாய்களை நானும், நண்பர்களும், வீரவநல்லூர்க்கருகில் கண்பிடித்திருக்கிறோம். அவர்கள் என்ன கலனை (உருக்குவதற்கான பாத்திரம்) பயன்படுத்தினார்கள்? வெப்பம் பற்றிய அவர்களின் அறிவு என்னவாக இருந்தது? இவையெல்லாம் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட வேண்டியவையாகும்.

பண்பாட்டில் மருத்துவம் மட்டும் இல்லை. நம்முடைய இசை, கலை, நாடகங்கள், இலக்கியம், சிற்பம், சமயம், அந்தச் சமயம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்கள் இவையெல்லாம் சேர்ந்ததுதான் பண்பாடு. மருத்துவம் என்ற சொல்லுக்குத் தமிழில் வேர்ச்சொல் 'மரு' என்பது தான். மரு என்ற சொல்லுக்குத் தமிழில் 'மணம்' என்பதாகப் பொருள் இருக்கிறது. இந்தச்சொல் எப்படி வந்திருக்கக்கூடும்? தாவரங்களை வகைப்படுத்துகிறபோது மனிதன் அந்த மணங்களில்லிருந்துதான் வகைப்படுத்தி இருக்க வேண்டும். மருக்கொழுந்து என்றால் மணமுள்ள கொழுந்து என்றுதான் அர்த்தம். இந்த மணம் தாவரங்கள் மட்டுமல்ல, அசைகின்ற உயிர், உலகத்திற்குக் கூட உண்டு. உதாரணமாக, புனுகுப் பூனை பார்த்திருப்பீர்கள். எனவே இந்த மரு என்ற சொல், தாவரங்களை மணங்களினாலே அறிவதில் இருந்துதான் வந்திருக்கிகும், என நினைக்கிறேன். எனவே உணவாகட்டும்,மருந்தாகட்டும், தாவரங்கள் எனும் நிலை உயிரிகளை அவற்றின் மணத்தைக் கொண்டே அறிவதென்பது மிகவும் நுட்பமானது. அறிவு என்பது எழுத்துமூலத்தைச் சார்ந்ததுதான் என்று கருதக்கூடாது. அப்படிக் கருத வைத்தது European Epistomology ஐரோப்பிய மெய்காண் முறைமை. அதனால்தான் ஐரோப்பியர் "எழுதத் தெரியாதவனெல்லாம் முட்டாள்" என்று சொன்னார்கள். எழுதத் தெரியாத நம் முன்னோர்களுடைய தாவரம் பற்றிய அறிவு பொய்யனதா? அவர்களுடைய மருந்து பற்றிய அறிவு பொய்யானதா? உலகம் பற்றிய அறிவு, அவர்களது வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய தன்னுணர்ச்சி பொய்யானதா?

எனவே, அறிவு என்பது எழுத்து மரபு சார்ந்தது, எழுத்து வருபவனுக்குத்தான் அறிவு வரும் என்பது ஒரு பொய். எழுத்துப் பிறப்பதற்கு முன்னாலேயே பிறந்த அறிவு. இதைத் தான் கார்ல் மார்க்ஸ் "தொகுக்கப்படாத அறிவு" என்று சொல்வார்.

எப்பொழுது நீங்கள் எல்லாவற்றையும் புத்தகமாக/ பனுவலாக (Textualize) பண்ண விரும்புகிறீர்களோ, எழுத்து மூலம் கொள்ளை கொண்டு போய் "இதுதான், இதுதான்" என்று சொல்கிறீர்களோ,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அப்போது அது முடிந்துபோகிற வி-யம். சித்த மருத்துவ அறிவு ஏடுபடுத்தப்பட்டதினாலே முடிந்து போனது என்று நினைத்தால், நம்மைப்போல முட்டாள் யாரும் கிடையாது. எனவே இந்த எழுத்து மரபுக்கு முந்திய அறிவு காட்டு வாழ்விலிருந்து, மணத்திலிருந்து பெற்ற மருத்துவ அறிவுதான். மணங்களைக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்திய அறிவுதான். மனித உடம்பிலிருந்தே மனிதன் நிறைய வி-யங்களைக் கற்றுக்கொண்டான். வெட்டுகின்ற ஆயுதத்தை , குத்திக் கிழிக்கின்ற ஆயுதத்தை, அரைக்கின்ற ஆயுதத்தை இவற்றையெல்லாம் மனிதன் தன் பல்வரிசையிலிருந்தே கற்றுக் கொண்டான். தன்னை முழுமையான ஒன்றாகக் கருதி, தன்னிலிருந்தே கற்றுக்கொண்ட வி-யம். இப்படித்தான் மருத்துவ அறிவு தொடங்கி இருக்கிறது.

மருத்துவ அறிவு ஏனைய அறிவைவிடக் கூர்மையானதாக இருக்க வேண்டும்."மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்" என்பது சங்க இலக்கியம். நோயாளிக்கு அவன் விருப்பப்பட்டதைக் கொடுக்காமல் ஆய்ந்து ஆய்ந்து மருந்து கொடுத்தானே, எனவே ஆராய்ச்சி இந்த மருத்துவ உலகிலிருந்துதான் துவங்குகிறது. "மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்" இது Professional Ethics என்று சொல்லக்கூடிய தொழில் சார்ந்த அறம் என்று முன்னிலைப்படுத்தப்படுகிறது தமிழ்ச் சமூகத்திலே.இந்த அறம் முன்னிலைப்படுத்தப்பட்ட காரணத்தினாலேதான் அரசுகள் எல்லாம் உருவாகிறபோது சொத்துகள் எல்லாம் பிறக்கிற போது, ஆசைகள் உருவாகிற போது மருத்துவத்தை ஒரு தொழிலாக முழுநேரப் பணியாக யாரும் கையிலெடுத்திருக்க மாட்டார்கள். எனவேதான், துறவிகள் இதனைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். சித்த மரபுக்கு முன்னாலே இங்கே சமண மரபு என்று ஒன்று இருந்தது. இன்றைக்கும் சமண மதத்தினுடைய தாக்கம் நம் வாழ்வில் உள்ளது. சமணமதம் நான்கே, நான்கு வி-யங்களைத்தான் வலியுறுத்தும். அந்த நான்கு என்னவென்றால்,

1. சோற்றைக் கொடையாகக் கொடுப்பது (அன்னதானம்)
2. கல்வியைக் கொடையாகக் கொடுப்பது (ஞானதானம்)
3. மருந்தைக் கொடையாகக் கொடுப்பது (ஔடததானம்)
4. அடைக்கலம் கொடுப்பது (அடைக்கல தானம்)

இந்த நான்கையும் கழித்துவிட்டுப் பார்த்தால் அந்த "யுனஸ்கோ" என்ற அமைப்பே இல்லை. "கல்வியைக் கொடையாக கொடு, மருந்தைக் கொடையாகக் கொடு" இப்படி சொன்னது, உலகத்திலேயே சமண மதம் ஒன்றுதான். அது வேதத்தை எதிர்த்த மதம். வைதீகத்தை நிராகரித்த மதம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது திகம்பர துறவிகள் இருந்த மதம். அவர்கள் மருத்துவ ஏடுகளைத் தவிர வேறு எதையும் கையிலே வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் வாழ்ந்த குகைகளிலே குடிக்கத் தண்ணீர்க்குழி மட்டுமே உண்டு. குடிக்க டம்ளர்கூடக் கிடையாது. ஆனால் மருத்துவ ஏடு மட்டும் இருக்கும். முழுநேர மருத்துவப்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பணியாளராக, ஒரு நாளைக்கு ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டு, பட்டினி கிடந்தத் துறவிகள் இருந்தனர். இந்த மருத்துவம் இப்படித் தான் பாதுகாக்கப்பட்டு வந்தது. இப்படிதான் இருந்தனர் அந்த மருத்துவ அறிஞர்கள். ஆனால் ஒன்று, நீங்கள் இன்று சொல்வதுபோல அசையும் உயிர்களெல்லாம் அந்த மருத்துவத்திலே கிடையாது. ஏனென்றால் அவர்கள் புலால் உண்ணாத நோன்பிகள் ஆவர். அவர்கள் முழுக்க முழுக்க மூலிகைகளைப் பயன்படுத்துகிற மருத்துவர்களாகவே இருந்தார்கள். இன்றைக்கும் அழிந்துவிட்ட சமணக் குகைகள் நெல்லை மாவட்டத்திலே இருக்கின்றன. இந்த மதத்தை வீழ்த்திவிட்டு வைதீகம் வந்தது. பாண்டிய அரசு, சோழ அரசு என்று இனக்குழுக்கள் எல்லாம் கரைக்கப்பட்டு, கரைக்கப்பட்டு அரசுகள் உருவாகும் போது மருத்துவம் தொழிலாக ஆகிறது. அதுவரை மருத்துவனும், ஆசிரியனும் காசு பெறக்கூடாது. அதுவரை மருந்து விற்பனைக்குரிய பொருளல்ல என்ற எண்ணம் கி.பி.7ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டிலே இருந்தது.12,13 ஆம் நூற்றாண்டு வரை இன்னொரு நினைப்பும் இருந்தது. அது "சோறு விற்கக்கூடாது." நெல் விற்கலாம், அரிசி விற்கலாம், வைதீகம் தமிழ்நாட்டை முழுவதும் வென்றெடுத்த பிறகுதான் சோற்றுக் கூடியினை சத்திரங்களில் விற்க ஆரம்பித்தனர். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தண்ணீர் விற்கக்கூடாத பொருளாக இருந்தது, இதுதான் பண்பாடு. எனவே, தமிழ்நாட்டில் அரசு எந்திரம் உருவானபோது, வைதீகம் அதற்குக் குறுக்கு வெட்டாகப் பாய்ந்தது. ஏனென்றால், அது தான் அரசுக்கு உவப்பான சித்தாந்தமாக இருந்தது. அப்பொழுதுதான் மிகப்பெரிய சமூக நிறுவனமான கோயில் உருவானது. மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அவ்வளவு அதிகாரம் கோயிலிலே இருந்தது. இந்தக் கோயில் அதிகாரத்தில் இருப்பவர்கள், நாம் என்ன சாதி? நாம் எங்கே இருக்கலாம்? எப்படி உடுத்தலாம்? என்பதையெல்லாம் தீர்மானித்தனர். மருத்துவத்தைச் செய்துவந்த சாதியினர் கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்டார்கள். (அன்றை கணக்குப்படிப் பார்த்தால், குலம் அல்லது குடி. இன்றைய கணக்குப்படி சாதி) அதற்கு முன், அரசு உருவாகிறபோது அக்குடிகளின் நிலைமை என்ன என்று கேட்டால், உங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கும். கி.பி.8ஆம் நூற்றாண்டிலே மாறஞ்சடையன் என்கிற இவரது தம்பி முதலமைச்சராகிறார். இவர்கள் மானூருக்குப் பக்கத்திலே இருக்கிற களக்குடி என்னும் ஊரைச் சார்ந்தவர்கள். இவரைப் பற்றியும், இவரது தம்பியைப் பற்றியும் பேசுகிற கல்வெட்டு ஒன்று மதுரை மாவட்டம் ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயிலிருக்கிறது. எனவே ஒரு காலத்தில் அரசனுக்கும், அரசதிகாரத்திற்கும் நெருக்கமாக மருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அதற்கு பின், அரசகதிகாரம் பெருக, பெருக, அரசுகள் பேரரசுகளாக மாற, மாற, கோயில்கள் துணை நிறுவனங்களாக ஆக, ஆக மருத்துவம் செய்கிற சாதி வெளியில் வைக்கப்பட்டது. அப்புறம், வைதீகம் அரசை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நமது சித்த மருத்துவத்தைச் சீரழித்தார்கள். உயிர்காக்கும் மருத்துவத்தை வணிகமாக்கி நமது செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனார்கள். ஆனாலும் காலத்தை வென்ற மூலிகை மருத்துவம் வெற்றியை நிலைநாட்டியது. வணிகர்கள் போக்கில் மாற்றம் நிகழ்ந்தது. பக்கவிளைவுகளை உண்டு பண்ணும் அவர்களது மருத்துவம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. நமது மூலிகைகளைக் கப்பல் கப்பலாகக் கொண்டு போய் மருந்து தயாரித்து உலகம் முழுவதும் விற்றுப் பணம் குவித்தார்கள். நமது கீழாநெல்லி கடல் கடந்து போய் மருந்தாகி இங்கேயே திரும்பி வந்தது ஆங்கில பெயர் சூடி. இது நாளும் நாளும் அதிகரித்தது. வாணிபம் என்பது திருட்டாகவும், கொள்ளையாகவும், சூதாட்டமாகவும் வடிவம் கொண்டுள்ளது. உலக மயமாக்கம் என்ற போர்வையில் மூலிகைத்திருட்டு (BIO-PYRACY) உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. உலக மயமாக்கத்தின் ஒரு பிரிவாகக் காப்புரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்தக் காப்புரிமைச் சட்டம் பொது அமர்வில் விவாதித்து ஏற்கப்பட்ட ஒன்றல்ல. பணக்கார நாடுகள் புரிந்து கொண்ட சட்டமிது. இந்தச் சட்டம் "தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் " (Intellectual Property Right) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. ஒரு அறிவாளி தனது காலத்தையும் பணத்தையும் செலவழித்துப் புதியதொன்றைக் கண்டறிகிறான். அவன் போட்ட முதலை எடுக்கின்ற வரை அவனுக்குக் காப்பளிப்பதற்காகவே தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக "காட்" ஒப்பந்தம் சொல்கிறது. இந்தக் காப்புரிமைச் சட்டம் என்ன செய்கிறது? இந்தத் தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் கண்டுபிடிப்பாளனுக்குக் கண்டுபிடிப்பின் மீது ஏகபோக உரிமையை அளிக்கிறது. எடுத்துக்காட்டாகக் கீழாநெல்லி ஹெப்பாடைட்டிஸ் B நோயை (மஞ்சள் காமாலையில் ஒரு பிரிவு) குணப்படுத்துவதை, தான் கண்டுபிடித்ததாகக் கூறி யாரேனும் காப்புரிமை பெற்று விட்டால் வேறு யாரும் கீழாநெல்லியைப் பயன்படுத்தி மஞ்சள் காமாலைக்கு மருந்து தயாரிக்கவோ, தயாரித்து நோயாளிக்குக் கொடுக்கவோ அல்லது விற்கவோ கூடாது. அல்லது காப்புரிமை பெற்றவனுக்குக் கப்பம் கட்டிவிட்டு அவனது உரிமையைப் பெற்று உற்பத்தி செய்யவோ விற்கவோ வேண்டும். இத்தகைய காப்புரிமைகள் பெறுவதற்கு நிபந்தனைகள் உண்டா எனில் உண்டு. அவை

1. கண்டுபிடிப்பில் புதுமை இருக்க வேண்டும்.

2. இல்லாததைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்.

3. ஆலைத் தொழிலில் பெருவீத உற்பத்திக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்.

இந்த மூன்றாவது நிபந்தனை மூலம் காலங்காலமாக மூலிகைகளைக் கண்டறிந்து, மருந்து தயாரித்து , உட்கொள்ளும் வகையறிந்த சித்தர்களுக்கும், நாட்டு மருத்துவர்க்கும், அன்னையருக்கும் அறிவுச் சொத்தில் உரிமை இல்லை என ஆக்கிவிட்டார்கள். அடுத்தபடியாக அறிவுச் சொத்துரிமை என்பது

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தனிமனிதர்களுக்கும், கம்பெனிகளுக்கும் மட்டுமே உரியது என்று வரையறுத்துவிட்டார்கள். (நமது மூலிகை மருந்துகள் மிகப்பல காலக்கட்டங்களில் மிகப்பலரால் மேம்படுத்தப்பட்டவை) இந்தச் சமூகத்திற்குப் பங்கு இல்லை என்றும் வரையறை செய்துவிட்டார்கள். இப்படியாகச் சமுதாயத்தின் பொதுச் சொத்தை (அறிவையும் செல்வத்தையும்) கம்பெனிகளின் தனிச் சொத்தாக்கி கொள்வதற்காகப் பணக்கார நாடுகள் போட்டுக்கொண்ட சட்டம்தான் "தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் ". இந்தச் சட்டத்தை அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? நமது மூலிகைகள், அவற்றின் மருத்துவக் குணங்கள், மருந்து தயாரிக்கும் முறைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் புத்தகங்களாக்கப்பட்டுத் தலைநகர் டெல்லியிலும் பிற நகரங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்தப் புத்தகங்களை வாங்கிப் போய் சம்பந்தப்பட்ட பக்கங்களை படியெடுத்து, தங்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பாகக் கூறிக் காப்புரிமை பெறுகிறார்கள். இதில் அவர்களுக்கான ஆதாயம் என்ன?

"நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோய்களின் வேர் அறுப்பது மூலிகை மருத்துவம். நோய்க்கான அறிகுறிகளை நீக்குவது அலோபதி மருத்துவம். அதுமட்டுமல்ல ஐம்பதுக்கும் மேற்பட்ட நோய்களுக்கு அவர்களிடம் சிகிச்சையே கிடையாது. இத்தகைய சூழ்நிலையில் பைசா செலவில்லாமல், கால விரயமில்லாமல், வாணிபத்தில் போட்டியே இல்லாமல் மருந்து தயாரித்து விற்க முடியுமானால் கோடி கோடியாக இலாபம் குவிக்க முடியும்.

மற்றொன்றையும் பார்ப்போம். காப்புரிமை வழங்கும் அலுவலகம் ஒன்று அமெரிக்காவில் உள்ளது. மற்றொன்று ஐரோப்பாவில் உள்ளது. காப்புரிமை அலுவலகத்துக்கு வந்த விண்ணப்பத்தைப் பரிசிலனை செய்து காப்புரிமை வழங்கிவிட்டாலும் மறுப்பு தெரிவிக்கலாம். காப்புரிமை வழங்கிய தேதியில் இருந்து ஓர் ஆண்டிற்குள் மறுப்பு அறிக்கையைப் பணம் கட்டிப் பதிவு செய்யவேண்டும். ஒரு ஆள் ஐரோப்பியக் காப்புரிமை அலுவலகத்திற்குப் போய் வருவதற்கு ரயில் செலவும், விமானக் கட்டணமும் மட்டுமே 60,000 ரூபாய். கம்பெனிகளின் திருட்டுக்கெல்லாம் யார் போய் மறுப்பு தெரிவிப்பது. இப்படிப்பட்ட சதியான சூழலில் மூலிகைத் திருட்டுக்கு வசதி செய்துகொண்டார்கள்.

எந்தெந்த மூலிகை மீதெல்லாம் காப்புரிமை பெற்றுள்ளார்கள்? நமது மஞ்சள், இஞ்சி, மிளகு, மணத்தக்காளி, சோற்றுக்கற்றாழை, நாவல், பாகற்காய், அமுக்கரா, பப்பாளி இப்படி முப்பது வகை மூலிகைகள் மீது இதுவரை காப்புரிமை வாங்கியுள்ளார்கள். வேம்புப் பொருள்களில் மட்டும் 40 கம்பெனிகள் காப்புரிமை கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். கி.பி. 2000 ஆண்டின் கணக்குப்படி 12 கம்பெனிகள் காப்புரிமை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பெற்றுவிட்டன. சொல்வது என்ன? செய்வது என்ன? தொழில் வளர்ச்சியடைந்தால் மக்களுக்கு நன்மை, நாடு செழிக்கும் என்று பேசுகிறார்கள். ஆனால் பயன்பாட்டில் உள்ள மருந்துகளை மருத்துவர்களும், மக்களும் பயன்படுத்த முடியாமல் செய்வதற்குச் சட்டம் கொண்டு வருகிறார்கள்.

இவர்களது கண்டுபிடிப்புகளின் தன்மை எப்படிப்பட்டதாக இருக்கிறது? மஞ்சள் தீப்புண்ணை ஆற்றும், உள்ரணங்களைக் குணப்படுத்தும் என்று கொள்ளுப்பாட்டி கைப்பிடித்து வந்த மருத்துவத்தைப் புதிதாகக் கண்டுபிடித்ததாகச் சொல்கிறார்கள். இப்படித்தான் சோற்றுக் கற்றாழை வயிற்றுப் புண்ணை ஆற்றும் என்பதைக் கண்டுபிடித்து விட்டார்களாம்! வேப்பெண்ணெய் குடும்பக் கட்டுப்பாட்டுக்குப் பயன்படும் என்று கண்டுபிடித்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்! வேடிக்கையாக இல்லையா? "கெட்டிகாரன் திருட்டு எட்டு நாளில் தெரியும்" என்பது பழமொழி. மஞ்சள், பாசுமதி, வேம்பு ஆகியவற்றின் காப்புரிமை பற்றிய வழக்குகளில் கம்பெனிகளின் திருட்டுத்தனம் வெளிச்சத்துக்கு வந்தது. எடுத்துக்காட்டுக்கு வேம்பு மீதான காப்புரிமை வழக்கைக் கொஞ்சம் அலசுவோம். உலகம் முழுவதும் பூச்சிக்கொல்லி என்ற பெயரில் ஆட்கொல்லி நஞ்சுகளை வரம்பு கடந்து உற்பத்தி செய்து விற்றுப் பணம் திரட்டினார்கள். அந்தப் பூச்சிக்கொல்லி நஞ்சுகள் மனிதர்க்குப் புற்றுநோய் முதலாக மலட்டுத்தன்மை ஈறாகப் பலவித நோய்களைத் தோற்றுவித்தன. நீர், நிலம், நெருப்பு, காற்று மண் என்ற சூழலை நஞ்சாக்கி உயிரினப் பன்மயத்தினை அழித்தன. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் மக்கள் பூச்சிகொல்லிக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டினார்கள். இத்தகைய சூழ்நிலையில் மருந்தாகக்கூடிய வேப்பங்கொட்டைச் சாற்றில் பூச்சிக்கொல்லி தயாரித்து விற்றால் கோடி கோடியாக லாபம் குவிக்கலாம். இது டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனியின் திட்டம், இந்தக் கம்பெனி அமெரிக்காவில் மூன்றாவது பெரிய கம்பெனி. இந்தக் கம்பெனி, வேப்பங் கொட்டைச் சாற்றைச் செடி மீது தெளித்தால் பூஞ்சான நோய் கட்டுப்படுகிறது. இதற்கு மருந்து தயாரிக்கப் போகிறோம் என்று அமெரிக்காவில் ஒரு காப்புரிமையும், ஐரோப்பாவில் ஒரு காப்புரிமையும் வாங்கிவிட்டது.

டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனி 1995இல் வாங்கிய காப்புரிமையை எதிர்த்து டெல்லியில் உள்ள அறிவியல், உயிர்ச்சூழலியல் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவி வந்தனாசிவாவும், ஜெர்மனியில் உள்ள அனைத்துலக இயற்கை வழிப் பண்ணையக் கழகத்தின் செயலாளரும் வழக்குத் தொடுத்தார்கள். இந்த வழக்கு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஜெர்மானிய நாட்டில் உள்ள மியூனிச் நகரத்தில் உள்ள ஐரோப்பிய காப்புரிமை அலுவலகத்தில் விசாரணைக்கு வந்தது. கி.பி.2000, மே திங்கள் 9,10 தேதிகளில் விசாரணை நடந்தது. இந்தியாவில் இருந்து போன குழுவில் நானும் ஒருவன். வழக்கு விசாரணைக்குப் போகும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

முன்பு நமது வேம்பைப் பற்றிப் பார்ப்போம். குச்சி பல் துலக்கவும், கொழுந்து புழு நீக்கவும், எண்ணெய், பேன், ஈறு கொல்லவும் பயன்படுகிறது. ஈர்க்கு கசாயம், பித்தம் தணிக்கிறது. பட்டை நாள்பட்ட காய்ச்சலைக் குணப்படுத்துகிறது. மனித உடலில் மட்டும்தான் என்றில்லை. மாடுகள், ஆடுகள், பூனை, நாய் உடம்பில் கூட நோய் உயிரிகளைக் கொன்று உயிர்காக்கிறது வேம்பு. வேப்பங்கொட்டையைச் சுட்டு அதன் புகையை உறிஞ்சினால் வைரஸ் கட்டுப்படுகிறது. வேப்பமரக் கட்டையில் கலப்பை செய்து நிலத்தை உழுதால் பாசி மட்டுப்படுகிறது. வேப்பம் புண்ணாக்கை நிலத்தில் இட்டால் பூச்சி நோய் கட்டுப்பட்டு, பயிர் தேக்கமின்றி வளர்கிறது. வேப்பங்கொட்டையைப் பொடி செய்து உழவுச் சாலில் போட்டே நமது உழவர்கள் பூச்சி நோயை ஒழித்து நல்ல விளைச்சல் எடுக்கிறார்கள். இப்படியாகப் பயிர் மருத்துவத்தில் , கால்நடை மருத்துவத்தில் , மனித மருத்துவத்தில் வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு உழவர்கள் நோயைக் கட்டுப்படுத்த வேம்புப் பொருள்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். வேப்பமர இலைச்சாற்றில் தேள் கொட்டிய நஞ்சு இறங்கும்; அம்மை நோய் இறங்கும்; இது ஒருபுறம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் வேப்பெண்ணெய்யை விளக்கில் ஊற்றி எரிக்கிறார்கள். வேப்பங்கொட்டையைக் கம்பெனி வாரிக் கொண்டு போனால் எங்களது வாழ்க்கை இருண்டு போகும். ஆதலால், "டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனியின் கண்டுபிடிப்பில் புதுமை எதுவும் இல்லை என்பது மட்டுமல்ல. காப்புரிமை பெற்றதன் மூலம் எங்கள் பொருளை மட்டுமல்ல, எங்களது பாரம்பரிய அறிவையும் திருடுகிறது " என்று எழுதிக் காப்புரிமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

மறுப்பை அனுப்பிய கையோடு உள்நாட்டில் விசாரணையும் தொடங்கினோம். மும்பையில் ஒரு பெரிய நிலக்கிழார் குடும்பம். எத்தனை விருந்தாளிகள் வந்தாலும் தங்கி, உண்டு, உறங்கி, ஓய்வு கொண்டு போகலாம். 1990ஆம் ஆண்டை ஒட்டி ஒரு அமெரிக்க மரவியாபாரி மும்பை வந்தான். மேலே சொன்ன முகவரியில் தங்கினான். வேப்ப மரத்தடியில் படுத்துத் தூங்கினான். காலையில் எழுந்தவன் வியப்போடு கேட்டான். "ஏது இரவு கொசு கடிக்கவே இல்லையே" வீட்டுக்காரர்கள் பதில் சொன்னார்கள், "கொசு என்ன எங்கள் வேம்பு பேயையே ஓட்டும் ! " வியப்பெய்திய மரவியாபாரி நாடு திரும்பும்போது ஒரு கைப்பிடி வேப்பங்கொட்டையைக் கையோடு கொண்டு போனான்.

அமெரிக்கர்களிடம் கொடுத்துச் சோதிக்கச் சொன்னான். அந்த ஆய்வில் வேம்பு, பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவது கண்டறியப்பட்டது. அதைக் கண்டுபிடித்ததாகக் கூறி அமெரிக்காவில் ஒரு காப்புரிமையைப் பெற்றான். ஆனால் அவன் மருந்து தயாரிக்கவில்லை. மாறாகக் காப்புரிமையை டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனியிடம் விற்றுவிட்டான். இப்போது இந்தக் கம்பெனி அமெரிக்காவில் ஒன்றும், ஐரோப்பாவில் ஒன்றுமாக இரண்டு காப்புரிமைகளைப் பெற்றுவிட்டது. இவ்வாறு ஆகாய விமானத்தில் ஏறும் முன்பாகவே

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

திருட்டு அப்பட்டமாக வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இதையறிந்த ஐரோப்பிய நண்பர்கள் 25 பேர் எங்களோடு நீதிமன்றத்திற்குள் இருந்தார்கள்.

இதற்கு மேலும் ஒரு நிகழ்வு. தமிழ்நாடு வேளாண்துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற ஒரு மராட்டியன் வேப்பங்கொட்டையில் மருந்து தயாரித்து விற்றுகொண்டிருந்தான். அவன் இதற்கு முன்னோடியாக 35 வயல்களில் பருத்தியிலும், திராட்சையிலும் அந்த மருந்தைத் தெளித்து வெற்றி கண்டிருந்தான். அவனுடைய கண்டுபிடிப்பைக் கேட்டு கிரேசு கம்பெனி எழுதிய கடிதத்தையே சாட்சியாக முன்வைத்தான். மூன்று நீதிபதிகளுக்கும் வியப்பு தாளவில்லை.

கம்பெனிக்காரரிடம் நீதிபதி கேட்டார்,

"உனது கண்டுபிடிப்பில் புதுமை என்ன?" ,

கம்பெனிக்காரன் சொன்னான்.

"இந்தியாவில் செக்கில் ஆட்டுகிறார்கள், நாங்கள் பெரிய அளவில் தயாரிக்கிறோம். அது வியாபார ரகசியம் சொல்ல முடியாது."

பம்பாய் சாட்சி சொன்னான்.

"எனக்குத் தெரியும். ஹெக்சேன் என்ற பெட்ரோலியப் பொருளில் கரைய விட்டுக் காய்ச்சி வடிக்கிறார்கள்."

நீதிபதி மீண்டும் கேட்கிறார்.

"புதுமை என்ன?"

கம்பெனிக்காரன் சொன்னான்.

",இந்தியாவில் செக்கில் ஆட்டும்போது குறைவாக எண்ணெய் கிடைக்கிறது எங்கள் முறையில் கூடுதலாக எண்ணெய் கிடைக்கிறது."

நமக்காக வாதாடிய ஜெர்மன் வக்கீல் பொறுமையமாகக் கேட்டார்,

" 'அ' " வைக் கண்டுபிடித்தால் புதுமை. அ,ஆ,இ,ஈ கண்டுபிடித்த பிறகு 'உ' வைக் கண்டுபிடிப்பதில் ஏது புதுமை" ?

இதைக்கேட்ட பிறகு நீதிபதிகளுக்குத் தெளிவு ஏற்பட்டது.

மே 10 பிற்பகல் அவை கூடியபோது நீதிபதிகள் கேட்டார்கள்.

"இன்னுமொரு சாட்சி (காசி நகரப் பேராசிரியர்)விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. விசாரணையை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இன்னும் ஒருநாள் நீட்டலாமா?"

கம்பெனிக்காரன் சொன்னான்.

"கம்பெனிக்குக் கொடுத்த உரிமை திரும்பப் பெறப்பட்டது (Patent Revoked)" உடனே நீதிமன்றத்தில் கூடியிருந்த வேம்பின் காப்பாளர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரித்தனர்.

கட்டுரையை முடிப்பதற்கு முன் மற்றொன்றையும் கூறவேண்டியுள்ளது. "வேப்பமரம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மட்டுமே வளர்கிறது. நாங்கள் தாராள மனம் கொண்டவர்கள். எல்லோருக்கும் விதை கொடுத்தோம். ஆனால் வேறு எங்கும் வளரவில்லை. இந்தக் காப்புரிமை மூலம் எங்கள் பொருள் மட்டுமல்ல, அறிவும் களவு போகிறது" என்று எழுதி 5 லட்சம் பேரிடம் கையொப்பம் பெறப்பட்ட ஆவணங்களை நீதிபதியிடம் ஒப்படைத்தோம்.

ஒரு ஜெர்மன் நாட்டு நண்பர் ஒரு குறுவேப்பமரத்தைக் கொண்டு வந்திருந்தார் (துருக்கி வேம்பு). அதைக் காப்புரிமை அலுவலகம் முன்பாக நட்டுவைத்தோம். வேம்பின் மீது பெறப்பட்ட 12 காப்புரிமை எண்களையும் எழுதி மரத்தில் தொங்கவிட்டோம் . பின் ஒவ்வொரு எண்ணை ஒவ்வொருவராக வெட்டினோம். அப்போது முழங்கினோம். "சுதந்திர மரத்தை விடுதலை செய்வோம் !" என்று. ஆம். வேம்பின் லத்தீன் பெயர் "அசாடிரேக்டா," அதன் பாரசீக மூலம் "ஆசாத்தரக்த்" அதாவது "சுதந்தர மரம்;" நாங்கள் அணிந்திருந்த பனியன்களில் எழுதியிருந்தது. "சுதந்திரமரத்தை விடுதலை செய் !" என்று.

இன்னொரு முக்கியச் செய்தி. மே 8ஆம் நாள் மாணவச் செய்தியாளர்களைச் சந்தித்தோம். அனைத்தையும் கேட்ட ஒரு பத்திரிக்கையாளர் கேட்டார்.

"உங்கள் கட்சி தோற்றுப்போயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"

நான் சொன்னேன்.

"இந்த வெற்றியும். தோல்வியும் என்னைப் பாதிக்காது. என் தாய்நாடு போய் மக்களிடம் சொல்லுவேன். கம்பெனிக்கு வேப்பங்கொட்டை கொடுக்காதே!" பத்திரிக்கையாளர் சொன்னார்.

" இந்த பதிலைத்தான் எதிர்பார்த்தேன்"

ஒரு எச்சரிக்கை:

கர்நாடகாவில் உள்ள ஒரு கம்பெனியின் பெயர் P.J.மார்கோசு. இது அமெரிக்க கிரேசு கம்பெனியின் ஏஜென்டு. இதற்கு ஆலை கட்டிக்கொடுத்ததே கிரேசு தான். P.J.மார்கோசு முழுஅளவில் வேலை செய்தால் ஒரு நாளைக்கு 25 குவின்டால் கொட்டையை நசுக்கிப் பிழிந்து அமெரிக்காவுக்கு அனுப்பும் திறன் கொண்டது.

தாயகமே ! தமிழகமே ! உறங்கிய போதும் ! விழித்தெழு! வீறுகொள் !

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இலங்கையில் சித்த மருத்துவம்

சித்த மருத்துவக் கலாநிதி மரு. S.சிவசண்முகராஜா B.S.M.S (SRI LANKA) M.D. (s) (INDIA)

முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சித்த மருத்துவம் சிவத்தை மூலமாகக் கொண்டது. சிவம் என்பதற்கு ஆழமான உட்பொருள் உண்டு. "தென்னாடுடைய சிவனே போற்றி" என்கிறோம். இங்குத் தென்னாடு என்பது தமிழ்நாடு. கேரளம் போன்றவற்றை மட்டுமின்றி அவற்றிற்கும் தெற்கில் கடல் கடந்து நிற்கும் இலங்கையையும் சுட்டி நிற்கிறது. சித்தரில் முதல்வரான திருமூலர் இலங்கையைச் "சிவபூமி" என்று தமது திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விலங்கையை அரசாண்ட இராவணன் மிகப்பெரிய சிவபக்தன். அது மட்டுமின்றி மிகச்சிறந்த வைத்தியனாகவும் விளங்கியுள்ளான். குறிப்பாக, பிள்ளைப்பிணி மருத்துவத்தில் அவன் சிறந்து விளங்கியுள்ளான். அது பற்றி இராவணனால் ஒரு மருத்துவநூல் இயற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இராம இராவண யுத்தத்தில் இராமலக்குமணர்கள் மூர்ச்சையடைத்திருந்த வேளையில், சஞ்சீவி மூலிகை இருந்தால் மட்டுமே அவர்கள் பிழைத்தெழ முடியும் என்று எடுத்துக் கூறியவன் இராவணனுடைய ஆஸ்தான மருத்துவனாவான். அதன் பின்பே ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்ததாக இராமாயணம் கூறியுள்ளது.

அநுமன் சஞ்சீவி மலையை இலங்கைக்கு எடுத்து வந்தபோது அதிலிருந்த மூலிகைகள் இலங்கையின் பல பாகங்களிலும் விழுந்து பரவின. அதனால்தான் இலங்கை மூலிகைவளம் மிக்க ஒரு தீவாக இன்றும் விளங்குகிறது. குறிப்பாகக் கதிர்கிராமத்துக்கு அருகில் மூலிகை மலை ஒன்றுள்ளது. இது 'மூலிகைக்கந்த' என்று சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. இதில் பல அபூர்வ மூலிகைகள் உள்ளன. சஞ்சீவி மலையின் ஒரு சிறிய பாகமே இம்மூலிகை மலை என்று கருதப்படுகிறது.

இலங்கையின் சித்தமருத்துவ வரலாற்றில் கதிர்காமம் என்று அழைக்கப்படும் கதிரமலைக்கு முக்கிய இடம் உண்டு. தமிழ்நாட்டில் சித்தர்கள் பொதிகைமலையைத் தமது புண்ணிய வாசஸ்தலமாகக் கொண்டு சித்தமருத்துவத்தை வளர்த்தது போல இலங்கையில் கதிரமலையை தமது புண்ணிய வாசஸ்தலமாகக் கொண்டு சித்த மருத்துவத்தை வளர்த்துள்ளார்கள். பழநிமலையில் நவபாண்டங்களைக் கட்டி முருகன் சிலையைத் தோற்றுவித்த போகநாதர் என்ற சித்தரே கதிர்கிராமத்தில் முருக யந்திரத்தையும் அமைத்துள்ளார். (கதிர்காமம் கோவிலில் மூலவிக்கிரகம் எதுவும் இல்லை. திரைச்சீலையால் மறைக்கப்பட்டுள்ள முருகயந்திரத்துக்கே பூஜை முதலியன நடைபெறுவதாகக் கருதப்படுகிறது). கதிர்காமம் ஆலயத்தில் அருட்பொலிவுக்கு இம்மூலயந்திரமே காரணமாகும். கதிர்காமம் மூலிகை வளம் மிக்க ஒரு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பூமியாகும் . இங்குள்ள கடைகளில் பல அபூர்வ மூலிகைகள் விற்பனை செய்யப்படுவதைத் தற்போதும் காணலாம். இலங்கையில் வெளிவந்த மிகப்பெரிய சித்தமருத்துவ நூலான பரராசகரத்தில், கதிர்மலை பற்றிய குறிப்புகள் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

எனவே கதிர்கிராமத்தை மையமாகக் கொண்டு ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் சித்த மருத்துவம் பரவியிருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் செறிந்து வாழ ஆரம்பித்த போது சித்த மருத்துவமும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இலங்கையின் சித்தமருத்துவ வரலாற்றை எழுதுபவர்கள் சித்தமருத்துவமானது அதன் தனித்துவத்துடனும், தூயநிலைகளிலும் வடக்குக், கிழக்கு பிரதேசங்களில் பேணப்பட்டு வருவதாகக் குறிப்பிடுவது வழக்கம்.

இலங்கைச் சித்தமருத்துவத்துக்கும் பதினெண் சித்தர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகளுண்டு. சித்தர்கணத் தலைவரான அகத்தியர் இலங்கைக்குப் பல தடவைகள் வருகை தந்துள்ளார். சிங்களப்பிரதேசமான "பொலநறுவை" என்னும் இடத்தில் உள்ள பொற்கல்விகாரையில் (Potgal Vehera) அமைக்கப்பட்டுள்ள சிலைகளில் ஒன்று தமிழ்மருத்துவத்தின் தந்தையான அகத்தியருடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. அகத்தியர் பெயரில் பல மருத்துவ நூல்கள் இன்று வரை யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ளன. பரராசசேகரம் நூலில் அகத்தியரின் மருத்துவ முறைகள் பல இடம் பெற்றுள்ளன. சட்டநாதர், புலத்தியர் ஆகிய சித்தர்கள் ஈழநாட்டுக்குரியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். போகநாதர் கதிர்கிராமத்தில் பல காலம் வாழ்ந்துள்ளார். கோரக்கர் திருகோணமலை என்னும் இடத்தில் சமாதி அடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ்மன்னர்கள் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். ஏறத்தாழ கி.பி.13ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவ நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இநூல் பன்னீராயிரம் பாடல்களைக் கொண்டதாகவும் விளங்குகிறது. பரராசசேகரனின் சகோதரனான பரநிருப சிங்கன் என்பவர் சிறந்த மருத்துவராக விளங்கியதுடன், அக்காலத்தில் கண்டியை ஆட்சி செய்த அரசனின் மனைவிக்கு ஏற்பட்டிருந்த வயிற்றுவலியை (சிங்கள வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நிலையில்) குணப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இது யாழ்ப்பாண அரசபரம்பரையினருக்குச் சித்த மருத்துவத்தில் இருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுவதுடன் சித்தமருத்துவம் சிங்களமக்களுக்கும் அரசக் குடும்பத்துக்கும் பயன்பட்டிருப்பதற்குச் சான்று பகர்வதாகவும் உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தற்போது கூட சிங்களப் பாரம்பரிய மருத்துவர்களிடம் தமிழ்மருத்துவ ஏட்டுச்சுவடிகள் பல இருப்பதாகக் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும், பதினைந்தாம் நூற்றாண்டளவில் "வைத்திய சிந்தாமணி பைசா ஜீஜ சங்கிரகம்" எனும் பெயரில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை அரசாண்ட செகராசசேகரன் என்னும் மன்னன் காலத்தில் செகராசசேகரம் என்னும் சித்தவைத்திய நூல் உருவாக்கப்பட்டது. இந்நூல் சுமார் 4000 பாடல்களைக் கொண்டது. மேலும் யாழ்ப்பாண மன்னர்கள் பல மூலிகைத் தோட்டங்களையும் உருவாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவமானது உன்னத நிலையில் வளர்ச்சி அடைந்திருந்தது. அதனாற்றான் சோணாட்டு இளவரசியான மருதப்புரவீகவல்லி என்பவள் தனக்கு முகவிகாரத்தை ஏற்படுத்தியிருந்த (குதிரை முகம்) ஒருவித புற்றுநோயைக் குணமாக்குவதற்கு யாழ்ப்பாண வைத்தியர்களின் உதவியை நாடி இலங்கையின் வடபகுதிக்கு வந்தாள். அங்கு சிகிச்சைபெற்று குணமானாள். தான் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற இடத்தில் தமிழ் மருத்துவர்கள் பெரிதும் போற்றி வணங்கும் முருகனுக்கு ஒரு கோவிலும்கட்டுவித்தாள். இளவரசியின் குதிரை முகம் நீங்கிய இடத்துக்கு "மாவிட்டபுரம்" (மா- குதிரை, விட்டபுரம் - நீங்கிய இடம்) என்று பெயர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஈழத்தின் பிரபலமான கோவில்களில் ஒன்றாக இன்றும் விளங்குகிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உறுதியான சித்த மருத்துவப் பாரம்பரியம் உளளது. இங்கு வாழ்ந்த வைத்தியர்கள் பொதுமருத்துவத்தில் மட்டுமின்றிப் பிள்ளைப்பிணி மருத்துவம், வாத வைத்தியம், கண்மருத்துவம், வி-க்கடிமருத்துவம், உளநோய் மருத்துவம்,கட்டு வைத்தியம், வர்ம வைத்தியம்,முறிவு நெரிவு வைத்தியம் போன்ற பல துறைகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்று நிபுணத்துவச் சேவையும் வழங்கியுள்ளனர். இவற்றைவிட தோல் நோய்கள், செங்கமாரி என அழைக்கப்படும் மஞ்சட்காமாலை, விசநாய்க்கடி, சன்னி போன்ற தனிநோய்களுக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்களும் இங்கு இருந்திருக்கிறார்கள்.

கி.பி.16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இலங்கையில் அந்நியராட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து சுதேச மருத்துவங்கள் ஆதரிப்பாரற்ற நிலையை அடைந்தன. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அலோபதி மருத்துவமுறை இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சித்தமருத்துவம் தனது செல்வாக்கை இழக்க ஆரம்பித்தது எனலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சித்தமருத்துவ அபிமானிகள் ஒன்று கூடி சித்தமருத்துவ வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தனர். அதன் பலனாக 1925 ஆண்டு டாக்டர்.ஜே.பஸ்தியாம் பிள்ளை என்பவரால் யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது சுதேச மருத்துவக் கல்லூரி இதுவாகும். இக்கல்லூரி இன்றுவரை செயற்பட்டு வருகிறது. நான்கு ஆண்டு படிப்பைக் கொண்ட இக்கல்லூரி பரம்பரை வைத்தியர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதில் முன்னுரிமை வழங்கி வருகிறது. இங்கு பயிலும் மாணவர்களுக்கு D.A.M (Diploma in Ayurvedic Medicine) என்னும் பட்டம் வழங்கப்படுகிறது.

இவ்விடத்தில் ஆயுர்வேதம் என்ற சொற்பதம் இலங்கையில் கையாளப்படும் விதம் பற்றியும் குறிப்பிடுவது அவசியமாகிறது. 1961ஆம் ஆண்டு ACT. No.31, பிரிவு 89 - இன் படி ஆயுர்வேதம் என்பது சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் தேசிய மருத்துவ முறைகள் அனைத்தையும் குறிப்பிடுவதாக அமைகிறது. எனவே, தமிழர் பிரதேசத்தில் ஆயுர்வேதம் என்ற சொல் சித்தமருத்துவத்தைக் குறிப்பதாகவே அமைகிறது.

அடுத்து 1929ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொழும்பு பெரளை என்னுமிடத்தில் அரசாங்க ஆதரவுடன் சுதேச மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி உருவாக்கப்படுவதற்கு முன்னின்றுழைத்தவர் கே.பாலசிங்கம் என்னும் தமிழராவார். இக்கல்லூரியில் ஆரம்பத்திலிருந்தே சித்தமருத்துவம், யுனானி மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் என்பன போதிக்கப்பட்டு வருகின்றன. இங்குப் பயின்ற மாணவர்களுக்கு ஆரம்பத்தில் D.I.M.S. (Diploma in Indigenous Medicine & Surgery) என்னும் பட்டமும் பின்னர் D.A.M.S. (Diploma in Ayurvedic Medicine & Surgery) பட்டமும் வழங்கப்பட்டன.

1977ஆம் ஆண்டு இக்கல்லூரி பல்கலைக்கழக அந்தஸ்துக்குத் தரம் உயர்த்தப்பட்டுக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நாட்டு மருத்துவ நிறுவனமாக அங்கீகாரம் பெற்றது. (Institute of Indigenous Medicine) அதன் பின்னர் இங்குப் பயிலும் சித்த, ஆயுர்வேத, யுனானி மாணவர்களுக்கு முறையே B.S.M.S.,B.A.M.S., B.U.M.S என்னும் பட்டங்கள் வழங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டது. இதற்கான ஒரு பாடவிதானம் 1980ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, 1982இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் வகுப்பதில் முக்கியப் பங்காற்றியவர் உலக சுகாதார மையத்தில் ஆயுர்வேத ஆலோசகராக பணியாற்றிய பேராசிரியர் குரூப் ஆவார். (Prof.P.N.N.Krup, Advisor on Ayurvedic Medicine , W.H.O) இப்பாடத்திட்டத்துக்கமைய 1983ஜனவரி மாதம், முதல் தடவையாக B.S.M.S.படிப்பிற்காக மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1983ஜூலை மாதத்தில் ஏற்பட்ட இனக்கலவரங்களை அடுத்து

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்தமருத்துவ மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்றடைந்தனர். அவர்கள் மீண்டும் கொழும்பு திரும்பித் தமது கல்வியைத் தொடர முன்வராததை அடுத்து அரசாங்கம் சித்தமருத்துப்பிரிவைக் கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ நிறுவனத்திலிருந்து பிரித்து யாழ்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கு முன்வந்தது. அதன் பயனாக 1983ஜீலையுடன் தடைப்பட்டிருந்த தமது B.S.M.S. படிப்பை 1985ஆம் ஆண்டிலிருந்து. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்குத் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

சித்த மருத்துவப் பிரிவு யாழ்ப்பாண மண்ணுக்கு மாற்றப்பட்டதையடுத்து. அதுவரை கொழும்பில் ஆயுர்வேத மருத்துவமுறையைத் தழுவி வளர்ந்து வந்த சித்தமருத்துவம் மீண:டும் தனது சொந்தத் தமிழ் மண்ணில் தமிழ்மருத்துவமாகத் தனித்துவத்துடன் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்தமருத்துவத்தைத் தனது சிறப்புத்துறைகளில் ஒன்றாக அங்கீகரித்துள்ளதுடன் அதன் மறுமலர்ச்சிக்குப் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே சித்தமருத்துவ விரிவுரையாளர்களை தமிழகத்துப் பாளையங்கோட்டைச் சித்தமருத்துவக் கல்லூரிக்குப் பட்ட மேற்படிப்பிற்கு அனுப்பி வைத்து. அதன் பயனாகச் சித்த மருத்துவ விரிவுரையாளர்களின் கல்வித்தரம் மேலுயர்த்தப்பட்டுள்ளது.

வருங்காலத்தில், சித்தமருத்துவம் சாரந்த Literary Research, Drug Research, Clinical research . என்பவற்றில் நாம் கூடுதலான கவனம் செலுத்தவுள்ளோம். இதன் மூலம் விஞ்ஞானரீதியாகச் சித்தமருத்துவ உண்மைகளை நிலைநாட்ட முடியும் என்று நம்புகிறோம். தமிழ்நாட்டுச் சித்தமருத்துவர்களுடன் இணைந்து நாம் செயற்படவுள்ளோம். இதன்மூலம் சித்தமருத்துவத்துக்குப் பிரகாசமான எதிர்காலம் ஏற்படும் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

நோனி பற்றிய தகவல்கள் பிரபலமாகப் பேசப்படுவது அதன் புத்துணர்வை உண்டாக்கும் தன்மையால்தான். உடலில் எந்த ஒரு நோய் பாதிப்பு வந்தாலும், Xeronine அளவு உடலில் குறைகிறது. இந்த Xeronine தேவையை நோனி சரி செய்கிறது. எவ்வாறென்றால், நோனியை உட்கொள்ளும்போது, அதிலுள்ள Proxeronine உடலிலுள்ள கோல்கி அப்பாரட்டஸ் –ன் (Golgi apparatus) Proxeroninase என்சைம்களால் Xeronine ஆக மாற்றப்படுகிறது. இது பின்பு, மூளையிலுள்ள Serotonin உடன் சேர்ந்து புரதத்தை உருவாக்கிறது. இந்த புரதங்கள் நோயினால் பாதிக்கப்பட்ட செல்களை புதுப்பித்து நோய் நிலையை குணமாக்குகிறது.

நன்றி : கற்பஅவிழ்தம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

1. வர்ம மருத்துவம்

வர்மம் என்ற தமிழ் சொல்லுக்கு உயிர் - "ஆற்றலின் இயக்கம் மற்றும் செயல்பாடு பற்றிய அறிவியல்" (Science of motion and function of the life - energy) எனப்பொருள். இது 7000 ஆண்டு பழமை வாய்ந்த மருத்துவ முறையாகும். இது லெமுரியா கண்டம் எனப்படும் குமரிக் கண்டத்தில் (கி.மு 50,000 - 16,000) தோன்றிய மருத்துவமாகும். ஆதலால் வர்மமே மருத்துவ முறைகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது எனக் கூறலாம். ஏனெனில் லெமுரியா கண்டத்திலேயே முதல் உயிர் தோன்றியதாக அறிவியலாளர்கள் சான்று பகர்கின்றனர். லெமுரியர்கள் எனும் தமிழர்கள் நாகரிகத்தின் உச்சத்திலிருந்த காலக் கட்டத்தில் கடற்கோளால் லெமுரியா எனும் குமரிக்கண்டம் அமிழ்ந்து விட (கி.மு. 16000), மீதமுள்ள குமரி மண்ணில் விட்டுச்செல்லப்பட்ட மருத்துவமே வர்ம மருத்துவமாகும்.

வர்ம மருத்துவ அறிவியல் தமிழ் மொழியிலே தோன்றியது. வர்ம மருத்துவமே மிகப்பழமை வாய்ந்த இந்திய முறை மருத்துவமாகும். இது தமிழ்ப் பாரம்பரிய மருத்துவமான வர்ம மருத்துவத்தைத் தமிழர்கள் மருத்துவமாக மட்டுமின்றித் தற்காப்புக் கலையாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

மனிதன் தாவர, வேதியியல் மற்றும் விலங்கின சரக்குகளை மருத்துவத்திற்குப் பயன்படுத்த ஆரம்பித்த காலத்துக்கு முன்னதாகவே, கை விரல்களால் பரிகாரம் தேடிக் கொண்ட " கை மருத்துவம் வர்மமேயாகும்"

" உள்ளபடி நூற்றெட்டு தலம் சாவாகும்
உணர்வாகி அத்தலங்கள் உயிரு மாகும்
கள்ளமுற்ற அத்தலங்கள் பிணியு மாகும்
களங்கமற்றால் அத்தலங்கள் சுகமே காணும்
உள்ளுணர்வாய் அத்தலங்கள் வாசி பேற்ற
உற்றதினால் அத்தலங்கள் உறுதி சேரும்"
புள்ளடிபோல் அத்தலங்கள் கண்ட வர்கள்
புகலார்கள் எல்லோரும் புவியிலுள் ளோர்க்கே.!

(வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம் - 1200)

மனித உடலில் முக்கிய வர்மங்கள் 108 இடங்களில் காணப்படுகின்றன. இவைகளே ஒரு மனிதன் இறப்பதற்கும் (Death), உயிரோடு இருப்பதற்கும் (Live), நோய் நிலை அடைவதற்கும் (Disease), சுகமடைவதற்கும் (Treatment), ஆரோக்கியத்திற்கும் (Health), காரணமாக அமைகின்றன என்பதே வர்ம மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

2. வர்மத்தின் வரையறை (Definition of Varmam)

வாசி எனும் "உயிர் ஆற்றல்" உடலில் குறிப்பிட்ட இடங்கள் பலவற்றில் நிலை கொண்டுள்ளது. அது ஓர் ஓட்டத்தை மேற்கொள்ளும் போது "சரம்" எனப்படுகிறது. அது நிலைகொண்டுள்ள நிலையங்கள் புற வரிசையால் இடர்பட்டு வாசியின் சர ஓட்டம் சீர் குலைந்து நோயாக மாறுவதும், அந்த நிலையங்கள் மருத்துவரால் தூண்டப்பட்டு சர ஓட்டம் சீர் படுத்தப்பட்டு நோய்கள் குணமாவதும் ஆகிய இரு செயல்களும் "வர்மம்" எனப்படும்.

அதாவது வர்ம நிலைகள் எனும் வர்மதலங்கள் அல்லது வர்ம புள்ளிகள் காயங்களுக்குட்படும் போது நோய் தோன்றவும் அவற்றையே முறையாகத் தூண்டும் போது நோய் குணமாகவும் செய்யும் மருத்துவக் கலையே வர்மமாகும்.

"உடலுயிர் நாடிதன்னில் உந்திடும் வாசியதாம்
ஊனுடல் மருவியே ஊடாடும் நிலையேவர்மம்
உடலுயிர் நிலையதனில் உந்துமோர் தாக்குதலால்
ஊடாடும்வாசி தடையால் அடங்கிடும் தலமேயடங்கல்"

(வர்ம சரநூல் -7.16)

உடலில் அமைந்துள்ள உயிர் நாடிகளில் உந்தப்பட்டு ஓடும் வாசி எனும் உயிர் ஆற்றல் நாடிகளிலிருந்து ஊனுடலுக்கு மருவல் கொள்ளும் நிலையங்களே "வர்மம் புள்ளிகள்" எனப்படுகிறது . உடலிலுள்ள உயிர் நிலையங்களாகிய இவ்வர்ம தலங்கள் புறவிசை உந்துதலால் தாக்கப்பட்டுக் காயங்கொள்ளும் போது சீராக இயங்கும் வாசி தடைப்பட்டு எத்தலத்தில் அடங்கியிருக்கிறதோ அத்தலம் அடங்கல் எனப்படும்.

3.வர்ம நிலைகள்

மனித உடலில் தசைகள், என்புகள், சிறு நரம்புகள், பெருநரம்புகள், பொருத்துகள், நாடிகள் ஆகிய ஆறில் பிராணன் என்ற வாசி அடங்கிக் கிடக்கும்.

"இப்படிச் சொல்லுகின்ற விவ்வகை வன்மந்தானும்
மெய்ப்படி அமுக்கிப்பார்த்தால் மிகவும்நொந் திருக்கில்வன்மம்
செப்புறு தசைகளெம்பு சிறுபெரு நரம்புச்சந்து
தப்புறு நாடியாறுந் தங்கிடு வன்மமாமே "

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பிராணனுக்கு இருப்பிடமான இவ்விடங்களில் அழுத்திப் பார்த்தால் மிகவும் வலிக்கும்.பிராணன் என்ற "வாசி" அடங்கி நிலை கொண்டிருக்கும் இடம் மட்டுமல்லாது,அது இயங்கும் இடமெல்லாம் வர்மதலங்களாகவே கொள்ளப்படுகிறது.

"பிறங்கிடு வன்மமெல்லாம் பிராணனுக்கிருப்பாமென்னும் " (வர்ம விதி)

"காணுகின்ற கேசாதி பாதமெங்கும்

கதித்தோடும் வாசிநிலை வர்ம மாச்சே " (வாகட நிதானம்)

"வாசி தட்டும் மிடமெங்கும் பலவர்மங்களே " (வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1200)

"வாசி தட்டும் தளமெல்லாம் வர்மம் " (வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1200)

இவ்வர்ம தலங்களில் வாசி நிலை கொண்டிருக்கும் போது காயம் கொள்ளுமாகில் அது வர்ம காயமாக மாறும்.மனித உடலில் மர்மமாக அடங்கியிருக்கும் அல்லது மறைந்திருக்கும் வாசி நிலைகளின் தன்னிலை வேறுபட்டால் ஏற்படும் மாற்றங்களையே "வர்மம்" என்பர்.வாசிநிலை தன்னிலை வேறுபடுவதாகிய காரியத்தையும்,அதற்குண்டான காரணத்தையும் வர்மமென்று கூறலாம்.

பொதுவாக வர்மம் என்பது குறிப்பிட்ட தலத்தில் வேகத்தில்,குறிப்பிட்ட அல்லது எல்லாக் காலத்தில் காயம் ஏற்படும் போது நிகழும் அபாயகரமான உடலியக்க மாறுபாடுகளாகும்.வர்ம காயம் கொண்ட உடனே சரம் மாறி வியர்வை தோன்றி,அனல் மீறி,கபம் விருத்தியடைந்து அதன் பலனாக சன்னி ஏற்பட்டாலோ,சன்னி ஏற்படாமலோ உணர்விழக்க நேரிடும்.இந்நிகழ்வுகளின் தொகுப்பும் "வர்மம்" என்றே அழைக்கப்படுகிறது.

4.வர்மத்தின் வேறு பெயர்கள் (Synonyms of Varmam)

வர்மம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது அவைகளாவன:

1) வர்மம்	6) ஏமம்
2) காலம்	7) ஈடு
3) அடக்கம்	8) அமிர்த நிலை
4) சூட்சம்	9) வாசிதானம்
5) மர்மம்	10) சரம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

5.சரம் (Charam)

சரத்தின் இயக்கத்தை அறிந்து கொள்வதே வர்ம மருத்துவத்தின் அடிப்படைக் கல்வியாகும்.சுற்றோட்டத்தை(Circulation) குறிக்கிறது.சரம் என்றால் சுவாசம் தங்கும் வீடு என்றும் கூறுவர்.சுவாசத்தின் இருப்பிடமாகிய வீடு ஒவ்வொன்றும் வர்ம தலமேயாகும்.சுவாசம் வர்ம தலத்தில் நேரடியாகத் தங்குவதில்லை.அது "வாசி" எனும் உயிர் ஆற்றலாக மாற்றப்பட்ட பின் வர்ம தலங்களில் தங்குகிறது.

சரத்தின் வேறுபாடுகள்:

1. வாயு	7. பிராணன்	13. மூச்சி
2. உயிர்	8. பிராகாசக் காற்று	14.பரமசிவன்
3.வாசி	9. அறிவு	15.ஆனந்த ஆவி
4.சீவன்	10. ஆத்மா	16.பரசித்த அசைவு
5.புரவி	11. பரம்	17.வர்மம்
6.காலன்	12. சுவாசம்	18.பிரகாச அருவி

6.வர்ம காயம் ஏற்படும் வழிகள் (Aetiology of Varmam-Trauma)

"கேளப்பா தடியடிகள் படுத லாலும்
கெடியான எறிவிசைகள் கொள்ள லாலும்
வாளப்பா கட்டைகுற்றி தட்ட லாலும்,
மாற்றானின் கைப்பிடிகள் படுத லாலும்
வேளப்பா ஆகாச மதிலே நின்று
மெய்மறந்து கைமறந்து விழுத லாலும்
தாளப்பா பற்பலவாம் விதத்தி னாலே
சங்கையில்லாக் காலமது சாருந்தானே"

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"அண்ணலே வுலகத்தில் வாழும் மாந்தருக்கு

அடிகாயம் முறிவிழுதல் தல்ல லாலும்

விண்ணடியில் பிணையற்று விழுகையாலும்

விழுந்தங்கம் சிறுதுண்டு நொறுங்க லாலும்

மண்ணிலே வெகுநாளாய் துக்க முற்று

மாளவே வதை(வர்ம) காயம் கொள்ள லாலும்

நிண்ணமுட னிவைகளிலே பலதுக் காக

நிகழ்த்துகிற னெண்ணெயொடு கசாயம் மாத்திரை"

(வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்) நீண்ட நாட்களாகத் துக்கப்படுவதால் உண்டாகும் மன அழுத்த நோய் நிலைகளாலும் கூட வர்ம நோய்கள் ஏற்படலாம்.

7.வர்ம காயத்தால் உடலில் ஏற்படும் மாறுபாடுகள் (Mechanism of Varma Trauma)

பிராணன் தங்கியிருக்கும் காயத் தலங்களில் காயங்கள் படும் போது வலி,வீக்கம்,மரத்துப்போதல்,உறுப்புகள் செயலிழத்தல்,மயக்கம் மற்றும் மரணமும் நிகழும்.இதனையே வர்மம் கொண்டிருக்கிறது என்று கூறுவர்.பொதுவாகக் காயம் கொண்டால் அவ்விடத்தில் வலி,வீக்கம்,சிவத்தல் ஆகிய குறிகுணங்களோடு அவ்விடம் சூடாகவும் காணப்படும்.ஆனால் வர்ம காயம் பட்ட இடம் குளிர்ந்து காணும்.

"ஆச்சர்யமான யிருக்கும்தலங்கள் கண்டால்

அது பெருகி குளிர்ந்திருக்கும் அறிந்து பாரு

பா(ய்)ச்சுலுடன் அத்தலத்தில் பிராணவாயு

பற்றியே சிக்கலுற்றுக் கொண்டதென்றால்"

(வர்ம ஒடிவு முறிவு ஞானம்-300)

இத்துன்பத்தை நீக்கும் மருத்துவ முறையை " வர்ம பரிகார முறை " அல்லது " வர்ம மருத்துவ முறை " என்பர்.இதில் நிபுணத்துவம் பெற்றவரை " வர்மானி " என்றும் " வர்ம ஆசான் " என்றும் அழைப்பர்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வர்ம புள்ளிகளில் செலுத்தப்படும் அழுத்தம்

(Application of Manual Pressure at the Varma Points)

வர்மப் புள்ளிகளைத் தூண்டி "வாசி" எனும் உயிராற்றலின் ஓட்டத்தைச் சீர்படுத்தி நோய்களைக் குணமாக்க வர்ம புள்ளிகளை அழுத்தம் ஏற்படுத்த வேண்டும். வர்ம புள்ளிகளில் அழுத்தம் கொடுத்துத் தூண்ட நுட்பங்கள் கையாளப்படுகின்றன. அவை:

1. மாத்திரை (Mathirai- Varma Unit of forse of the pressure)

2. இறை (Erai- Varma Unit of depth of the pressure)

மாத்திரை (Mathirai- Varma Unit of forse of the pressure)

1. கால் மாத்திரை (1/4 Mathirai) :

இதனால் பாதிப்பு இருக்காது. இது "ஈடு" என அழைக்கப்படுகிறது. ஈடு என்றால் "சமன்" எனப்பொருள். அதாவது குறைவுப்பட்ட வாசி ஓட்டத்தை ஈடு (சமன்) செய்ய இம்மாத்திரை பயன்படுகிறது. எனவே சிகிச்சை முறைகளில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

2. அரை மாத்திரை (1/2 Mathirai) :

இதனால் வலி, மரத்துப்போதல் ஏற்படும். இது "ஏமம்" என்றழைக்கப்படுகிறது. ஏமம் என்றால் பாதுகாப்பு எனப்பொருள். ஒரு வர்மத்தை அரை மாத்திரை அளவு ஏற்படுத்துவதே பாதுகாப்பானதாகும். குணப்படுத்தும் சிகிச்சை முறைகளிலும் அதிகப் பட்சம் இம்மாத்திரையளவே பாதுகாப்பானதாகும். சில வேளை மயக்கம் ஏற்பட்டாலும் மரணம் நிகழாது. எனவே எதிரிகளை, அவர்களின் உயிருக்குப் பாதகமின்றி அவர்களின் வர்ம நிலைகளில் தாக்கிச் செயலிழக்கச் செய்யும் இம்மாத்திரையே பாதுகாப்பானதாகும்.

3. முக்கால் மாத்திரை (3/4 Mathirai):

இதனால் மயக்கம் உண்டாகும். இது "காலம்" என்றழைக்கப்படுகிறது. இம்மாத்திரையளவு தாக்குதல் செய்யும் போது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இளக்கிக் கொள்ள வேண்டும். இளக்காது விட்டால் மரணம் வரும் என்ற அவதி நிலைக்குத் தள்ளப்பட்டு விடலாம். முக்கால் மாத்திரை அழுத்தத்தால் உண்டாகும் வர்ம பாதிப்புக்களுக்கு "அடங்கலில் தட்டி" இளக்கிக் குணப்படுத்த வேண்டும்.

முக்கால் மாத்திரை விசை அழுத்தம் கொடுக்க முக்கால் சாண் (9 விரலளவு) அகலம் வாங்கி விசையுடன் தாக்க வேண்டும். (9 வி.அ./நொடி) இதனால் மதி மயக்கம், மூர்ச்சை ஏற்படும்.

4. முழு மாத்திரை (One Mathirai)

இதனால் அசாத்திய குறிகுணங்கள் வரும். இது "வர்மம்" எனப்படும். முழுமையாக ஏற்றுக் கொள்ளும் போது சீர் செய்ய முடியாத படி வாசி ஓட்டம் பாதிக்கப்பட்டு நிரந்தர நோய்களையும், மரணத்தையும் தரக்கூடும். இதிலிருந்து ஒரு மனிதரை குணப்படுத்துவது கடினமானதாகும். இதற்கு முறையான மற்றும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

விரைவான "வர்ம மருத்துவம்" மேற்கொள்ள வேண்டும்.

முழு மாத்திரை எனப்படும் ஒரு மாத்திரை விசை அழுத்தம் கொடுக்க ஒரு சாண் (12 விரலளவு) அகலம் வாங்கி விசையுடன் தாக்க வேண்டும்.(12 வி.அ/நொடி) இதனால் உடல் தளரும்,கேடு உண்டாகும்.

மருத்துவத்தில்:

கால் மாத்திரை	-	உத்தமம்
அரை மாத்திரை	-	மத்தியம்
முக்கால் மாத்திரை	-	அதமம்
முழு மாத்திரை	-	அதமோதமம்

இறை (Erai-Varma Unit of depth of the pressure)

வர்மப் புள்ளிகளில் அழுத்தம் கொடுக்கும் போது தோலின் மேற்பரப்பிலிருந்து எவ்வளவு ஆழம் **(depth)** பதியும் அளவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதைக் கணிக்கும் அலகே இறையாகும். இறை என்பது பெருவிரலளவு **(Thumb-Finger breadth)** அதாவது பெருவிரலின் அகலமாகும்.வர்ம தலத்தின் கால்,அரை,முக்கால் மற்றும் முழு இறை என்ற ஆழ அளவில் பதியும்படி அழுத்தம் கொடுக்கப்படுகிறது.இதைப்பற்றிய கணக்கு "இறை கணக்கு அல்லது பதிக்கணக்கு "என்பர்.

கால் இறை	:	மச்சை வழியே ஆற்றல் செல்லும்.
அரை இறை	:	நரம்பு வழியே ஆற்றல் செல்லும்.
முக்கால் இறை	:	எலும்பு வழியே ஆற்றல் செல்லும்.
முழு இறை	:	மேற்கண்ட மூன்று வழியாகவும் ஆற்றல் செல்லும்.

இறை மிஞ்சினால் : சுரம், சன்னி, நரம்புகளோடு, விக்கல், வாந்தி, சுபமூர்ச்சை,வியர்வை,தாகம் போன்ற குறிகுணங்கள் ஏற்படும். கால் மற்றும் அரை மாத்திரை தூண்டல் அழுத்தங்கள் வர்ம காயமாக மாறிவிட்டால் எளிய வர்ம மருத்துவத்தால் தீரும். முக்கால் மற்றும் முழு மாத்திரை வர்ம காயங்களுக்கு தீவிர வர்ம மருத்துவம் தேவைப்படும்.

10. வர்ம புள்ளிகளைத் தூண்டும் முறைகள்
(Manipulation methods of Varma Points)

வர்மப் புள்ளிகள் மற்றும் அடங்கல் புள்ளிகளைத் தூண்டிச் செயல்படச் செய்ய மூன்றுவிதத் தூண்டல் முறைகளை வர்ம மருத்துவம் கூறுகின்றது.

"வானான அம்பத்தா றடங்கல் தன்னில்
வகையறிந்து தடவு தட்டல் செய்மு"
(வர்ம ஒடிவு முறவு சரசூத்திரம் - 1200)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

I. தடவல் (Message)

வர்மப் புள்ளிகளைத் தூண்ட தடவுமுறைகளைப் பயன்படுத்தலாம். சுமார் 36 வகையானத் தடவுமுறைகள் உள்ளன. இதை சுமார் 10 வகையான உடல் உறுப்புகளால் செய்யலாம். கால் மாத்திரை விசை அழுத்தத்தால் ஏற்படும் வர்மப் பாதிப்புக்களை வர்மத் தடவல் மற்றும் மருந்துகளால் எளிதில் குணப்படுத்தலாம்.

2.தட்டல் (Tapping):

வர்மம் மற்றும் அடங்கல் தலங்களில் தட்ட கை மற்றும் கால் பயன்படுத்தப்படுகிறது. கையைப் பொறுத்தவரை உள்ளங்கையாலும், புறங்கையாலும் தட்டலாம். காலால் தட்டும் போது புறங்கால் என்னும் படங்கால் பயன்படுத்தப்படுகிறது. இது வர்ம இளக்குமுறைகளில் அதிகம் கையாளப்படுகிறது. தட்டும் போது மெதுவாக (மந்தம்), மிதமாக (மத்திமம்), பலமாக (சண்டம்) என மூன்று விசைகளில் தட்டுவர். தேவைக்கேற்ப 1-3-5 என்ற எண்ணிக்கையில் தட்டப்படுகிறது. அரை மாத்திரை விசை அழுத்தத்தால் உண்டன வர்ம நோய்களுக்கு வர்மத் தட்டல் முறைகள் மற்றும் மருந்துகள் கொண்டு குணப்படுத்தலாம்.

3. அமர்த்தல் (Pressure)

4. தொடுதல் (Touch)

5. பின்னல்

காலம் அழுத்தும் நேரம் (Time of the Present)

ஒரு வர்மப் புள்ளியை எவ்வளவு நேரம் தூண்ட வேண்டும் என்பது "காலக்கணக்கு" எனப்படும். இது வர்மப் புள்ளிக்கு வர்மப்புள்ளி மாறுபடும். பொதுவாக வர்மப்புள்ளியை 1/2- 1-2-3 நிமிடங்கள் தூண்டலாம்.

1/2- நிமிடம் - உத்தமம்	2- நிமிடம் - அதமம்
1- நிமிடம் - மத்திமம்	3- நிமிடம் - அதமோதமம்

தூண்டும்போது தேவைக்கேற்ப நிலைத்த அழுத்தம் (Presistent Pressure) அல்லது விட்டுவிட்டு அழுத்தம் (Intermittent Pressure) கொடுக்கலாம். விட்டு விட்டு அழுத்தம் கொடுக்கும் போது 10 நொடிகள் இடைவெளி விட்டு விட்டு அழுத்தலாம். துடிப்புடன் கூடிய அழுத்தமும் தொடர்ந்து கொடுக்கலாம்.

4. தூண்டும் முறைகள் : (Stimulating Methods)

வர்மப் புள்ளிகளைத் தூண்டப் பெரும்பாலும் கைவிரல்களே பயன்படுத்தப்படுகின்றன. அரிதாக 1. பல்வேறு உடல் உறுப்புகளும், பல்வேறு விதைகளும் கூடப் பயன்படுத்தப்படுகின்றன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தூண்ட பயன்படுத்தப்படும் உடலுறுப்புகள் :

பல்வேறு உடல் உறுப்புகளும், பல்வேறு விதைகளும் கூடப் பயன்படுத்தப்படுகின்றன.

தூண்ட பயன்படுத்தப்படும் உடலுறுப்புகள் :

1. கை - விரல்கள்
2. குதிகை மற்றும் உள்ளங்கை
3. முழங்கை மூட்டு
4. கால் பெருவிரல்
5. குதிகால், உள்ளங்கால்
6. புறங்கால் (எ) படங்கால்
7. முழங்கால் மூட்டு

தூண்ட பயன்படும் விதைகள் :

1. எள்
2. நெல் / அரிசி
3. உளுந்து, பயறு
4. குன்றிமணி
5. பருத்தி விதை
6. மஞ்சாடி
7. புளியின் விதை

12. வர்ம மருத்துவ முறைகள் : (Varma Syatem of Medicine)

வர்ம மருத்துவ முறை ஐந்து அங்கங்களை கொண்ருக்கிறது. அவையாவன :

1. வர்ம நோய்களுக்கு வர்ம மருத்துவம் (Varma Therapy for varma Diseases) :

வர்மத்தின் அடிப்படைத் தத்துவங்கள் வர்மங்களின் இருப்பிடம், வர்ம பாதிப்பால் ஏற்படும் குறிகுணம், வர்ம சிகிச்சை முறைகள், அக-புற மருந்து செய்முறைகள் அடங்கியது.

2. வர்ம தடவ மருத்துவம் (Varma Massage Therapy):

நாடி வர்மத் தலங்களைப் பயன்படுத்தி உடலை நோயின்றிக் காத்துக் கொள்ளவும், நோய்களைக் குணப்படுத்தவும், நாடி - வாயுக்களின் இயக்கங்களைச் சீர் செய்யவும், கை- கால் முடங்களைச் சீர் செய்யவும் பயன்படும் இளக்கு முறைகள், தடவல் முறைகள், ஆவிக்குளியல், தாரை, கிழி, ஒற்றடம் போன்ற புறமருத்துவ முறைகளுடன் அதற்கான அகப்புற மருந்து செய்முறைகளும் அடங்கியது.

3. வர்ம தொக்கண யோக மருத்துவம் : (Varma Thokkana Therapy)

வர்ம தலங்களை இடங்கண்டு, அவற்றைத் தூண்ட உடலைத் தட்டுதல், இறுக்கல், பிடித்தல், முறுக்கல், கட்டல், அழுத்துதல், இழுத்தல், மல்லாத்துதல், அசைத்தல் போன்ற ஒன்பது விதமான செயல்களால் சிகிச்சை அளிப்பதுடன் உடலை ஆராக்கியமாக வைக்க மேற்கொண்ட செயல்களோடு ஒத்த யோகாசனப் பயிற்சி முறைகளும் அடங்கியது.

4. வர்ம வாசி யோக தியானம் (Varma Vassi Yoga Meditation) :

உடலிலுள்ள ஆதார வர்ம தலங்கள் 108 - ல் வாசியேற்றி உடலும் மனமும் ஆரோக்கியம் பெறவும், ஆனந்தம் பெறவும் உதவும் முறைகள் அடங்கியது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

5.வர்ம தற்காப்பு முறைகள் (Varma Defence Methods) :

களரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலுள்ள சுவடு, பூட்டு முறைகளைப் பயிற்சிப்பதன் மூலமும், உடலின் ஆபத்தான வர்ம தலங்களைத் தெரிந்து கொள்வதன் மூலமும் உடலை நோய்களிலிருந்தும், எதிரிகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் முறைகள் அடங்கியது.

13. வர்மத்தின் பிரிவுகள் (Types of Varma)

1. படுவர்மம் - 12
2. தொடு வர்மம் - 96
3. தட்டு வர்மம் - 8
4. உள் வர்மம் - 6
5. நோக்கு வர்மம் - 1

1. படு வர்மம் (12) :

படுவர்மம் 12 தலங்களில் காணப்படுகின்றன. "படு" என்றால் "பெருகச்செய்" "துன்புறுத்து", "அழித்தல் செய்" என்று பல பொருள்படும். இந்த வர்மங்கள் துன்பத்தைப் பெருகச் செய்து அழிவையும் (மரணத்தையும்) ஏற்படுத்தும் வர்மங்களாகையால் இப்பெயர் பெற்றது. மேலும் கட்டை குத்துதல், தடியடிகள், எறி விசைகள் படுதலாலும் ஏற்படும் வர்மமாகையால் படு (தல்) வர்மம் என்றும் பெயர் பெற்றிருக்கலாம். படுவர்மங்கள் பொதுவாக உள் உறுப்புக்களைப் பாதிப்பனவாகவும் உள்ளன. இவ்வுள்ளுறுப்புகள் எலும்புகள் மற்றும் தசைகளால் பொதிந்து பாதுகாக்கப்பட்டிருப்பதால்,படுவேகமாக விசையில் காயம் பட்டால் மட்டுமே இவ்வர்மம் ஏற்படும். படுவர்மம் : எலும்பின் கூறு" ஆகும். படு வர்ம காயங்களின் பாதிப்பு எலும்பிலிருந்து ஆரம்பிக்கிறது. இவ்வர்மங்கள் பன்னிரெண்டிலும் 12 நாடிகள் பட்டுச் செல்வதாலும் இவை "படு வர்மங்கள்" என அழைக்கப்படுகின்றன.

எண்:	படுவர்மத்தின் பெயர்கள்	பாதிக்கும் உறுப்பு
1.	திலர்த வர்மம்	மூளை
2.	நட்சத்திர வர்மம்	கண்
3.	செவிக்குத்தி வர்மம்	காது
4.	பிடரி வர்மம்	முதுகுளம்
5.	உறக்க வர்மம்	தொண்டை
6.	தும்மி வர்மம்	குரல்வளை
7.	நேர் வர்மம்	இருதயம்
8.	அடப்ப வர்மம்	நுரையீரல்
9.	உறும வர்மம்	வயிறு
10.	வலிய அத்திசுருக்கிவர்மம்	சிறுநீரகம்
11.	சிறிய அத்திசுருக்கிவர்மம்	சிறுநீரகம்
12.	கல்லிடை வர்மம்	விதை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

2.தொடு வர்மம் (96):

தொடுவதன் மூலம் ஏற்படும் வர்மங்கள் தொடுவர்மங்களாகும். இவை 96 தலங்களில் காணப்படுகின்றன. மேலும் இவ்வர்மத்தை அழுத்துவதன் மூலமும், தடவுவதன் மூலமும் ஏற்படுத்தலாம். மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும் (பூட்டு முறைகள்) இவ்வர்மம் ஏற்படலாம். பதுக்கல், பின்னல், ஊன்றல், அமர்த்தல், ஏந்தல், தாக்கல், தள்ளல் போன்ற முறைகளிலும் இவ்வர்மத்தை ஏற்படுத்துவர்.

"**கட்டான ஈராறும் வழியெட்டாகிக் கருதினால்**

தொடுவர்மம் தொண்ணூற்றாறு" (வ.ஒ.மு.சரகூத்திரம்-1200)

இவ்வர்மங்கள் தசைகள், தசை நாண்கள், விசிகள், நரம்புகள், இரத்த குழல்கள், என்புகள் போன்றவற்றின் சந்திப்புகளில் அமைந்துள்ளன. "வர்ம குருநாடி" என்ற நூல் தொடுவர்மங்கள் "நரம்பின் கூறுடையவை" என குறிப்பிடுகின்றது. தொடு வர்ம காயங்களின் பாதிப்பு நரம்பிலிருந்து ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு நாடியும் எட்டு தொடு வர்மங்களைத் தொட்டுச் செல்கின்றது (12x 8=96). இதனாலும் இவ்வர்மங்கள் "தொடு வர்மங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

3.தட்டு வர்மம் (8):

தட்டு வர்மம் எட்டாகும். அவை: 1.செவிகுத்தி வர்மம், 2.உறக்க வர்மம், 3.சுமை வர்மம், 4.நேர் வர்மம், 5.உறுமி வர்மம், 6.அடப்ப வர்மம், 7.பெரிய அத்திசுருக்கி வர்மம், 8.சிறிய அத்திசுருக்கி வர்மம்.

4.உள் வர்மம் (6):

உள் வர்மம் ஆறாகும். அவை: 1.ஆனந்த வாய்வு காலம், 2.உதிரக்காலம், 3.பெருமி வர்மம், 4.பிற வர்மம், 5.விறச்சி வர்மம், 6.ஆம்ப வர்மம்.

5.நோக்கு வர்மம் (1):

உடலைத் தொடாமல் கண்களால் நோக்குவதன் மூலம் ஒருவரை வர்மம் கொள்ள செய்யும் வர்மம் நோக்கு வர்மம் எனப்படும். இது "மெய்தீண்டாக் காலம்" எனவும் அழைக்கப்படுகிறது.

நூல் ஆதாரம்:-

மரு.கண்ணன் ராசாராம் BSMS அவர்களின் வர்மநூல்களில் இருந்து தொகுக்கப்பட்டது.

செலுப்பை மரம் / கருக்குவாய் மரம்

நமது கல்லூரி வளாகத்தில் உள்ள பேருந்து நிறுத்தம் அருகில் செலுப்பை மரம். இதன் தாவரவியல் பெயர் Elaeoolendron glaucam இது மரப்பட்டை வீக்கத்திற்கு மருந்தாகிறது. நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்தில் 200 வருட மரம் உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இயற்கை உணவகம்

I. உணவு வகைகள் :

1.குதிரைவாலி பிரியாணி
2.குதிரைவாலி லெமன் சாதம்
3.பொன்னாங்கன்னி சாதம்
4.சம்பா அவல் தக்காளி சாதம்
5.அவல் தயிர் சாதம்
6.வெஜிடபிள் பிரியாணி
7. சம்பா அரிசி சாதம்

II சாம்பார் மற்றும் இதர தொடுகறி வகைகள்

1. வெஜிடபிள் சாம்பார்
2.கொள்ளு இரசம்
3.தேங்காய்ப்பால் சாதம்
4.பீட்ரூட் ஊறுகாய்
5.ஃபீட்ரூட் தயிர் பச்சடி
6.வெள்ளரி பச்சடி

III சிற்றுண்டி வகைகள்

1.வரகு முடக்கற்றான் இட்லி
2.நவதானிய தோசை
3.வெஜிடபிள் சப்பாத்தி
4.கம்பு தோசை
5.கம்பு இட்லி
6.சோள தோசை
7.சோள இட்லி
8.வரகு இட்லி

IV சட்னி வகைகள்

1. கேரட் சட்னி
2.பிரண்டை சட்னி
3.பீட்ரூட் சட்னி
4.தூதுவளை சட்னி
5.கம்பு சட்னி
6.நிலக்கடலை சட்னி

பான வகைகள்

1.முட்டை கோஸ் முள்ளங்கி கீரை சூப்
2.கொள்ளு சூப்
3.அருகம்புல் கீர்
4.கறிவேப்பில்லை கீர்
5.புதினா கீர்
6.வெள்ளரி ஜீஸ்
7.நெல்லி ஜீஸ்
8.ஆரஞ்சு பழத்தோல் டீ
9.புதினா டீ
10.சுக்கு டீ
11.பாசிப்பயறு காபி
12.பாசிப்பயறு பால்
13.நன்னாரி குடிநீர்
14.வெட்டிவேர் குடிநீர்

பண்ட வகைகள்

1.சாமை கட்லட்
2.சாமை பக்கோடா
3.பாசிப்பயறு சுண்டல்

இனிப்பு வகைகள்

1.அவல் பாயாசம்
2.தினை அன்னாசி கேசரி
3.வல்லாரை அல்வா
4.தினை லட்டு
5.கம்பு லட்டு
6.மூலிகை பீடா

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இயற்கை உணவக செய்முறைகள்

1.சம்பா அவல் தக்காளி சாதம்

சம்பா அவலை,அரை மணிநேரம் ஊறவைக்கவும்.கடாயில் எண்ணெய் ஊற்றிப் பட்டை, சோம்பு,பிரியாணி இலை, இஞ்சி-பூண்டு விழுது,பிரியாணி இலை,பச்சை பட்டாணி, வெங்காயம், தக்காளி, கறிவேப்பிலை,காலிஃபிளவர்,உப்பு போட்டு வதக்கவும்.அதன் பின்,சம்பா அவலை போட்டு வதக்கவும்.அதன் பின்,சம்பா அவலை போட்டுக் கிளறி இறக்கவும்.கொத்தமல்லி இலையைத் தூவிப் பரிமாறவும்.

2.குதிரைவாலி பிரியாணி

அடுப்பேற்றிய கடாயில் எண்ணெய் ஊற்றிப் பட்டை,சோம்பு,இஞ்சி-பூண்டு விழுது,பிரியாணி இலை,பச்சை பட்டாணி,வெங்காயம்,தக்காளி,கறிவேப்பிலை,காலிஃபிளவர்,உப்பு போட்டு வதக்கி பிரியாணி மசாலா போட்டுத் தண்ணீர் ஊற்றவும்.பின்,குதிரைவாலி அரிசியைப் போட்டு 2 கொதி வந்ததும் கீழே இறக்கி 20 நிமிடம் மூடிவைக்கவும்.கொத்தமல்லி இலை மற்றும் புதினா இலையைத் தூவி பரிமாறவும்.

3.அவல் தயிர்சாதம்

உப்பு போட்டு ஊற வைத்த அவலைத் தண்ணீரைப் பிழிந்து எடுத்துக் கொள்ளவும்.வாணலியை அடுப்பேற்றிய பின் அதில் எண்ணெய் ஊற்றிக் கடுகு, வெங்காயம், வரமிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி போட்டு வதக்கி,பின்,அவற்றுடன் அவல் மற்றும் தயிர் சேர்த்துக் கிளறி இறக்கிக் கொள்ளவும். வேண்டுமென்றால்,இவற்றுடன் பழங்கள் சேர்த்துக்கிளறிப் பரிமாறலாம்.

சிற்றுண்டி வகைகள்

1.வரகு முடக்கற்றான் இட்லி:

வரகு மாவுடன்,அரைத்த முடக்கற்றான் இலைகளைச் சேர்த்துப் பின் இதை இட்லியாக அவித்து எடுத்துக் கொள்ளவும்.

2.நவதானியத் தோசை:

நவதானிய மாவுடன் உப்பு சேர்த்துத் தோசை ஊற்றவும்.

3.கம்பு தோசை மற்றும் இட்லி:

கம்பு மாவை உப்பு சேர்த்துக் கரைத்துத் தோசை அல்லது இட்லி ஊற்றவும்.

4.சோள தோசை:

சோள மாவில் தேவையான அளவு உப்பு சேர்த்துத் தோசை ஊற்றவும்.

5.வெஜிடபிள் சப்பாத்தி:

கோதுமை மாவுடன் துருவிய காரட்,பீட்ரூட் மற்றும் தண்ணீர் சேர்த்துப் பிசைந்து சப்பாத்தியாகத் தட்டி தோசைக் கல்லில் போட்டு எடுத்துக் கொள்ளவும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தொடுகறி வகைகள்

1. நிலக்கடலை சட்னி :

நிலக்கடலை / வேர்க்கடலையை வறுத்துக் கொள்ளவும். பின் வெங்காயம், வரமிளகாய், மல்லி, பூண்டு, உப்பு, புளி ஆகியவற்றை அரைத்து அதனுடன் வறுத்து வைத்த கடலையையும் சேர்த்தரைத்துத் தாளித்துப் பரிமாறவும்.

2.வெள்ளரி பச்சடி

வெள்ளரிக்காய்,காரட்,வெங்காயம்.பச்சை மிளகாய்.குடை மிளகாய்.உப்பு,தயிர் சேர்த்துத் தயாரிக்கவும்.

3.பிரண்டை சட்னி

சுத்தம் செய்த பிரண்டையை எண்ணெய் ஊற்றி வதக்கி எடுத்து வைத்துக் கொள்ளவும். பின்.தக்காளி.வெங்காயம்.பூண்டு.இஞ்சி.வரமிளகாய் ஆகியவற்றை வதக்கி அதனுடன் நிலக்கடலை. உப்பு, புளி சேர்த்துப் பிரண்டையும் சேர்த்தரைத்து எடுத்துக் கொள்ளவும்.

பானங்கள்

1.சுக்கு டீ

தண்ணீருடன் சுக்குத்தூள்,நாட்டுச் சர்க்கரை,ஏலக்காய்த் தூள்,சேர்த்துக் கொதி வந்தவுடன் இறக்கவும்.

2.புதினா டீ

புதினா சாறுடன் தண்ணீர்,நாட்டுச் சர்க்கரை.டீ தூள்.சுக்குத் தூள் சேர்த்துக் கொதிக்க வைக்கவும்.

3.ஆரஞ்சுப் பழத்தோல் டீ

ஆரஞ்சுப் பழத்தோலைச் சிறிது சிறிதாக நறுக்கித் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைக்கவும்.கொதி வரும் போது நாட்டுச் சர்க்கரை,சுக்குத்தூள்,டீ தூள் சேர்த்து மீண்டும் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டவும்.

4.அருகம்புல் கீர்

அருகம்புல் சாறு,தேங்காய்ப்பால் இரண்டையும் கலந்து அதனுடன் ஏலக்காய்த்தூள் சேர்த்துப் பரிமாறவும்.

மகாவில்வம் :

பாளை.இராஜகோபால சுவாமி கோவில் வளாகத்தில் மகாவில்வம் என்ற 9 அடுக்குகளான இலைகள் உள்ள அரிதான வில்வ வகை உள்ளது.

தாவரவியல் பெயர் : Naringi Crenulata

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

5.கொள்ளு சூப் :

கொள்ளை (காணம்) முதலில் வேகவைக்கவும் பின் அத்துடன் தக்காளி, புளி, வரமிளகாய், உப்பு, சீரகம், மிளகு, பூண்டு சேர்த்துக் கொதிக்கவிடவும். கொதித்ததும் இறக்கறவும்.

6.நெல்லி ஜூஸ்:

பெரிய நெல்லியை அரைத்துச் சாறெடுத்து அதனுடன் நாட்டுச் சர்க்கரை, சுக்குத்தூள், ஏலக்காய்த்தூள் சேர்த்துப் பரிமாறவும்.

இயற்கைப் பண்டங்கள்

1.சாமை பக்கோடா:

சாமை மாவுடன் பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு, கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றிப் பிசைந்து பதம் வந்ததும் எண்ணெய்யில் போட்டு எடுக்கவும்.

2.பாசிப்பயிறு சுண்டல் :

வேகவைத்த பாசிப்பயிருடன் துருவிய கேரட், வெங்காயம் ஆகியவற்றைச் சேர்த்துக் கிளரவும்.

இனிப்பு வகைகள்

1.தினை அன்னாசி கேசரி

வறுத்த தினை மாவை நீர் சேர்த்து வேகவைத்து, பின், நாட்டு சர்க்கரை சேர்த்துக் கிளறிப் பதம் வந்ததும் ஏலக்காய்த்தூள், நெய்யில் வறுத்த முந்திரியைப் போட்டு, அதன் பின் சிறிது சிறிதாக நறுக்கிய அன்னாசி பழத்தையும் தூவி இறக்கவும்.

2.வல்லாரை அல்வா

சர்க்கரையைப் பாகு காய்ச்சி பதம் வந்தவுடன் கம்புப் பால், உளுந்துப் பால் இரண்டையும் சேர்த்து, அதனுடன் வல்லாரையை அரைத்துச் சேர்க்கவும். அதன் பின், கரைத்த கோதுமை சேர்த்துக் கிளரி பதம் வந்தவுடன் ஏலக்காய்த் தூள் தூவி இறக்கவும்.

3. தினை லட்டு :

